REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 2 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
திනකරන්

வரு. 90 இல. 28 | Wednesday 2, February, 2022 | 20பக்கங்கள் | 30/-

## மின் நெருக்கடி தொடர்பில்
# மின்சக்தி அமைச்சருக்கு ஜனாதிபதி அறிவுறுத்து



தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து அவசர கொள்வனவுகளை மேற்கொள்ளும்போது முன் வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக 06

கொவிட் தொற்றிலிருந்து முழுமையான பாதுகாப்பு பெற பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும்...
லேக்ஹவுஸ் பொதுநலப்பணியின் தகவல்
LAKE HOUSE

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை முதல்நிலைப்படுத்தி தொழிற்கற்கை
## தொழிற்பயிற்சி நடத்தும் அரச நிறுவனங்களுக்கு பிரதமர் பணிப்பு



வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பிக்குமாறு தொழில் பயிற்சி வகுப்புகளை நடாத்தும் அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

தொழில்முறை மட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்குவதுடன், பாடசாலையை விட்டு 06

# ஏப்ரல் மாதம் வரை மின் துண்டிப்பு இல்லை
## அமைச்சர் காமினி லொக்குகே உறுதி



எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை மின் துண்டிப்பு இடம்பெறாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் தேவையில்லாமல் அஞ்ச வேண்டியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நுரைச்சோலை மின்நிலையம் தற்போது வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் எந்தச் சிக்கலும் இன்றி மின்சாரத்தை 06

## திவிநெகும நிதி மோசடி வழக்கு:
# குற்றச்சாட்டிலிருந்து பசில் ராஜபக்ஷ விடுதலை
## உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



'திவிநெகும' அபிவிருத்தி திணைக்களத்தின் 29.4 மில்லியன் ரூபா நிதியில் ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பஞ்சாங்கம் அச்சிட்டு பகிர்ந்தளித்த குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்டிருந்த வழக்கிலிருந்து நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று விடுதலை 06

## வடபகுதி கடற்பரப்புக்குள் பதற்றம்:
# அத்துமீறிய இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர் மீது தாக்குதல்
## அமைச்சர் டக்ளஸ் தலையீட்டால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள்

**யாழ்.விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

**02 விசைப்படகுகளுடன் தமிழக மீனவர்கள் 21 பேர் அதிரடி கைது!**

வடபகுதி கடற்பரப்புக்குள் அத்துமீறிய தமிழக மீனவர்களின் விசைப் படகுகளை நடுக்கடலில் யாழ். வடமராட்சி மீனவர்கள் சுற்றிவளைத் ததையடுத்து பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்ததோடு இரண்டு விசைப் படகுகளுடன் 21 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணம் - வடமராட்சியிலிருந்து கண்ணாடி இழை படகில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களின் படகின் மீது தமிழக மீனவர்களின் விசைப்படகு மோதியதில்



இலங்கை மீனவர்கள் கடலில் மூழ்கி காணாமற்போனதாக இலங்கை மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். படகு மூழ்கி மாயமான இரண்டு மீனவர்களில் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை கரை ஒதுங்கியது. 06

# காலியில் ரயில்-ஆட்டோ விபத்தில் நால்வர் பலி!
## ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன், மனைவி, தந்தை, மாமியார் உயிரிழப்பு

காலி, ரத்கம ரில்லம்ப ரயில் கடவையில் நேற்று செவ்வாய்க்கிழமை (01) காலை முச்சக்கர வண்டி ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பலியாகியுள்ளனர். விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி, அவரது மனைவி, தந்தை மற்றும் மாமியார் என நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டி சாரதி, அவரது தந்தை மற்றும் மாமியார் ஆகியோர் ஆஸ்பத்திரியில் 06

**ரயில்வே கடவையில் நுழைய முயன்ற ஆட்டோவை பந்தாடிச் சென்ற ரயில்**





# வாகன விபத்தில் காலை இழந்த மாணவனுக்கு செயற்கை கால்
## பிரதமரின் பாரியார் வழங்கிவைப்பு





வாகன விபத்தொன்றில் தனது காலை இழந்த புத்தல, கடுகஹகல்கேகம கனிஷ்ட பாடசாலையில் 07ஆம் தரத்தில் கல்வி பயிலும் சந்தரு டில்ஷான் மாணவனுக்கு பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷ அலரி மாளிகையில் வைத்து (31) செயற்கை கால் ஒன்றை வழங்கினார்.

செயற்கை காலை கொள்வனவு செய்வதற்காக, தான் பாடசாலை நேரத்தின் பின்னர் மிளகாய் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதாகவும், கடுகஹகல்கேகம கனிஷ்ட பாடசாலையின் அதிபர் டீ.எம்.எஸ்.எஸ்.திசாநாயக்க இது குறித்து அறிந்து பிரதமரின் பாரியாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து தனக்கு செயற்கை கால் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த சந்தரு டில்ஷான் மாணவன், தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது சந்தரு டில்ஷான் மாணவனின் நலன் விசாரித்ததுடன், அவரது எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

**விக்கல் வீராச்சாமி**



கம்பஹாவில வச்சு ஜேவிபி அனுரகுமார எம் பி யின்ர கார் மீது முட்டை வீசியது யாராயிருந்தாலும் கண்டிக்காம இருக்க முடியாது....

உண்மைதான், இண்டைக்கு முட்டை, நாளைக்கு செருப்பு, அதால ஐஜிபி ஐயா பிரசன்ன துரை சொன்னமாதிரி நல்லா விசாரிச்சு ஆள பிடிக்கணும்...!!!

# தமிழ்க் கட்சிகளுடன் நல்லிணக்கத்தை முன்னெடுக்க அரசு தயாராகவே உள்ளது
## ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த எந்தத் தடையும் இல்லை

**ஷம்ஸ் பாஹிம்**



அரசாங்கம் நல்லிணக்கத்துக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதில் கரிசனையாக இருப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச எந்தத் தடையும் கிடையாதெனவும் இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வடக்குக்கு விஜயம் செய்த அமைச்சர்களான பேராசிரியர் 06

# நாட்டின் கடனை மறுசீரமைக்க IMFஇன் உதவி பெற அரசு முடிவு

நாட்டின் தேவைகள், எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது குறித்து தீர்மானிக்கப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நாணய நிதியத்தை முழுமையாக அரசாங்கம் நிராகரிக்கவில்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றபோது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் பிரத்தியேக கலந்துரையாடல்கள் எவையும் இவ்வார அமைச்சரவை 06

# 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை இலங்கைக்கு வழங்க IOC இணக்கம்
## மேலதிக நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்து 40,000 மெற்றிக்தொன் டீசல் மற்றும் 40,000 மெற்றிக்தொன் பெற்றோலை கொள்வனவு செய்வது தொடர்பாக எரிசக்தி அமைச்சு அக்கம்பனியுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளது. அதற்கமைய, 40,000 மெற்றிக்தொன் டீசலை விநியோகிப்பதற்கு இந்தியன் ஒயில் கம்பனி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, இத் தொகையை கொள்வனவு செய்வதற்கான 06

## A/L பரீட்சை நடைபெறும் காலத்தில்
# ஆரம்ப பாடசாலைகளுக்கான விடுமுறை இரத்து
## கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போது ஆரம்பப் பாடசாலைகளுக்கான விடுமுறை இரத்து செய்யப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2021ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 07ம் திகதி முதல் 06

## க.பொ.த. (உ/த) பரீட்சை :
# பிரத்தியேக வகுப்புகளுக்கு நேற்று நள்ளிரவுடன் தடை
## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தர்மசேன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சை தொடர்பான 06

பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

# வைரஸ் தொற்றின் நிரந்தரத் தீர்வுக்கு தடுப்பூசியே ஒரே வழி



தடுப்பூசிகளின் வருகையே காலத்திற்குக் காலம் எம்மைத் தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. தடுப்பூசி தான் தொற்றின் நிரந்தரத் தீர்வுக்கு ஒரே வழி என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அனர்த்தங்களும் அழிவுகளும் பல 06

# உலகம் முழுவதும் இதுவரை ஆயிரம் கோடி தடுப்பூசிகள்
## 425 கோடி பேர் இரு டோஸ்களையும் பெற்றுள்ளனர்



உலகம் முழுவதும் 1,000 கோடி கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. உலகம் முழுக்க இதுவரை கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 37.43 கோடியாக உயர்ந்திருக்கிற நிலையில் அதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தீவிரமாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஒமிக்ரோன் அச்சுறுத்துதல் காரணமாக 06

2

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 2 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

**தொழுகை நேரம்**

01 முதல் 06 வரை

சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.20
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 20

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 12.00 - 01.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | முயற்சி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

74வது சுதந்திர தின விழா:

## மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டம்

### சுமார் 3000 பொலிஸார் கடமையில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் 74 வது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பு கடமைகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான பொலிஸார் ஈடுபடுத்தப்பட உள்ளதாக மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட நடவடிக்கைக்கான செயலணி மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டு பாதுகாப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## ஜே.வி.பி மீதான தாக்குதலுக்கு அரசாங்கம் கடும் கண்டனம்

### உரிய விசாரணைக்கு உத்தரவு பிறப்பிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**



பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன உச்சளவில் வழங்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி.யின் மாநாடு மீதான தாக்குதலை அரசாங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், தேவையான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமெனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (01) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில்

06

## மீனவர் சங்கங்களுக்கு ஆளுநர் ஜீவன் அழைப்பு

### இன்று காலை சந்திப்பதற்கும் ஏற்பாடு



வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, மீனவ சங்கங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அழைப்பு விடுத்துள்ளார். அண்மைய நாட்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்ட மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர்.

தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை முன்வைக்கக் கோரி, பிரதான போக்குவரத்துத் தடங்களை

06

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ;

## தேவையான மசகு எண்ணெய் வழங்க அமைச்சரவை அனுமதி

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு நிலையத்துக்கு தேவையான மசகு எண்ணெய் 2022 ஜூலை மாதம் வரை விநியோகிப்பதற்காக தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் எதிர்வரும் காலங்களுக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

இச்சுத்திகரிப்புக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சைப்பிரஸ் நாட்டின் Terra Navis Group இனால் கோரப்பட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

180 நாட்கள் கடனடிப்படையில் மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தர பெறுகைக் குழுவின் மதிப்பீட்டுக்குட்படுத்தி அதன் ஆரம்ப கட்டமாக 450,000 பீப்பாய்கள் கொண்ட கப்பல் தொகையை விநியோகிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பரிந்துரைகளுக்கமைய மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கழிவுகளை அகற்றும் பணி

### 120 நாட்களில் நிறைவு செய்யப்படும்



சமுத்திர அனர்த்தத்திற்குள்ளாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கழிவுகள் மற்றும் அழிவடைந்த பகுதிகளை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 120 நாட்களில் இப் பணிகளை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதுதொடர்பான மேலதிக விடயங்களை நீதி அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைக்கு அறிவித்ததோடு அமைச்சரவை அது குறித்து கவனம் செலுத்தியது.

கழிவுகளை அகற்றும் செயன்முறையால் தொடர்ந்தும் சமுத்திரம் மாசடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இச் செயன்முறையை கண்காணிப்பதற்கு வர்த்தகக் கப்பல்கள் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய கண்காணிப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதெனவும், இதுவரை பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களுக்கும் முதற்கட்ட இழப்பீட்டுத் தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் அறிவித்தார்.

களுத்துறை மாவட்டத்துக்கான மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவதெனவும், கழிவுகளை அகற்றும் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் இரண்டிலும் இத் தடை நீக்கப்படுமெனவும் தெரிவித்த அமைச்சர் மீன்பிடி மற்றும் கடல்சார் சூழல் கண்காணிப்பு அதிகாரசபையின் உரித்தின் ஒருபகுதியான 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு வைப்பிலிடப்பட்டுள்ளதெனவும், மற்றும் எஞ்சிய உரித்தின் பங்கைப் பெற்றுக் கொள்வதற்காக

06

## பாபு சர்மாவிற்க்கு இன்று அகவை 64



புத்த சாசன மத மற்றும் கலாசார விவகார அமைச்சரும் பிரதமரின் இந்து மத விவகார இணைப் பாளருமான கலாநிதி சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மாவுக்கு இன்று (02) அகவை 64.

சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளரும், கொழும்பு ஸ்ரீ வித்யா குருகுல பாடசாலையின் ஸ்தாபகரும் மாணிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவருமான இவர் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ அமரர் சோ.ராமசந்திர குருக்கள். சுதுமலை அம்மன் கோவிலடி மகேஷ்வரி அம்மாளின் மகனுமாவார்.

## நுரைச்சோலை மின் பிறப்பாக்கி நேற்று மீண்டும் செயலிழப்பு

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கியொன்று மீண்டும் செயலிழந்துள்ளதாக மின்சார சபை நேற்று தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை லக்விஜய மின்சார மையத்தின் 3வது மின் பிறப்பாக்கியே மீண்டும் செயலிழந்துள்ளது. இந்த மின்பிறப்பாக்கி நேற்று முன்தினமே திருத்தப்பட்டு, உற்பத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. எனினும் நேற்று அது மீண்டும் செயலிழந்துள்ளது. இதன் காரணமாக தேசிய மின்சார அலகுகளில் 270 மெகா வோட்ஸ் அலகுகள் இழப்பு

06

சுகாதார வழிமுறைகள் உள்ளடங்கிய சுற்றுநிருபம்:

## செல்லுபடி காலம் பெப். 28 வரை நீடிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டல் உள்ளடங்கிய சுற்று நிருபத்தின் செல்லுபடி காலத்தை எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத், நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை கருத்திற் கொண்டே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரை டிசம்பர் மாத நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்கள் உள்ளடங்கிய சுற்றுநிருபம் நடைமுறையில் இருந்ததுடன் நேற்றுடன் அது நிறைவுபெறும் நிலையில் பெப்ரவரி மாதம் இறுதி வரை அதை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய மட்டுப்படுத்தலுக்கு இணங்க சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் அவதானமாக செயற்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் வார இறுதி நீண்ட விடுமுறையின்போது மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மிகவும் அவதானமாக செயற்படுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். முடிந்தவரை பயணங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு தெரிவித்துள்ள அவர் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ)

## கொடகே தேசிய சாகித்திய விருது விழா இன்று

### மல்லிகை சி.குமாரின் வேடத்தனம் நூலுக்கு கொடகே சாகித்திய விருது

கொடகே தேசிய சாகித்திய விருது விழாவும் 2020ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆக்க இலக்கியப் பிரதி போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் இன்று பெப்ரவரி 2ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு 07 பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது மல்லிகை சி.குமாரின் “வேடத்தனம்‘ எனும் சிறுகதைத் தொகுப்புக்கும், வெலிமடை ரபீக்கின் “ ஒரு நானும் இன்னும் ஒரு நானும் ‘ கவிதைத் தொகுப்புக்கும் வழங்கப்படவுள்ளன.

மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது சிங்களத்திலிருந்து எம். ரிஷான் ஷரீப் தமிழில் மொழிபெயர்த்த கத்யானா அமரசிங்ஹ வின் தரணி எனும் நாவலுக்கும் முதல் நூலுக்கான விருதை ஆ.லெ.மு.இர்ஷாத்தின் 'ஒளி பூக்கும் இரவு' எனும் ஹைக்கூ தொகுதிக்கும் வழங்கப்படவுள்ளன.

2020க்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுதைத் தொகுப்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாலரஞ்சனி ஜெயபாலின் ' 'நெத்திக்காசு' தொகுப்புக்கும் சிறந்த கவிதைத் தொகுதியாக தெரிவு செய்யப்பட்ட ஜன்ஸி கபூரின் ' பிறப்பிட நிழலிலே' தொகுப்பு நூலுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மற்றும் ஆங்கில, சிங்கள மொழி நூல்களுக்கும் இந்த விழாவில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட அழைப்பாளர்களுடன் இந்த விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)



மேமன் கவியினால் ஏற்பாடு செய்யப்பட்ட டொமினிக் ஜீவாவின் முதலாவது நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(28) மாலை நடைபெற்றது. இதன்போது 2020 ம் ஆண்டுக்கான மல்லிகை ஜீவா விருதும் சான்றிதழும் க.கோபாலபிள்ளையிடம் புரவலர் ஹாசிம் உமர் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## 14,021 கிராம சேவகர் பிரிவுகளில் நாளை அபிவிருத்தி திட்டம்

உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுக்கமைய 'கிராமத்துடனான உரையாடல் – வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒரு இலட்சம் வேலைகள்' கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

336 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக 14,021 கிராம அலுவலர் பிரிவுகளில் நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தின் கீழ் பொது மக்களின் தேவைகள் பொது மக்களாலேயே அடையாளம் காணக்கூடிய செயன்முறையை முழுமையாகப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை 2022 பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தேவையான தயார்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் நிதி அமைச்சர் அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தினார்.

அவர் சமர்ப்பித்த விடயங்கள் அமைச்சரவையால் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

7ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து பலியான சிறுவன்:

## பிரேத பரிசோதனையில் புதிய தகவல்கள் அம்பலம்

பம்பலப்பிட்டி பிரதேசத்தில் ஏழு மாடி கட்டடமொன்றில் இருந்து கீழே வீழ்ந்து 15 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி சிறுவனின் சடலம் மீதான பிரேத பரிசோதனையின் போது, அவரின் உடலில் ஐஸ் போதைப்பொருள் இருந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பம்பலப்பிட்டி கிரெட்ஸர் பிளேஸில் உள்ள 7 மாடி கொண்ட குடியிருப்பு தொகுதி ஒன்றில் வசித்து வந்த அந்த சிறுவன், கடந்த 29 ஆம் திகதி அக்கட்டடத்திலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்தார்.

அவர் தனது பெற்றோருடன் குடியிருப்பு தொகுதியில் 5 ஆவது மாடியில் வசித்து வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தது. இந்நிலையில், அந்த கட்டடத்தில் இருந்த சிசிரீவி காட்சிகளை மையமாகக் கொண்டு அவரது மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

இதன்போது, அந்த மாணவன் முச்சக்கர வண்டியில் வருகை தருவது மற்றும் மாடியிலிருந்து தவறி விழும் காட்சிகள் அங்கிருந்த சிசிரீவி கெமராக்களில் பதிவாகியிருந்தன.

சம்பவம் இடம்பெறும் போது அவரின் தாய் சமய நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக வெளியே சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 25% மிகைவரி சட்டத்திற்கு அனுமதி

2,000 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது கம்பனிகளுக்கு ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25% வீதமான மிகைவரியை விதிப்பதற்கு 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள மிகைவரிச் சட்ட மூலத்திற்கு சட்டமாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (பா)

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

சுற்றாடல் எம்மைக் காக்கும் - நாம் சுற்றாடலைக் காப்போம்

# பசுமையான பாதையில் பயணிப்போம்....

## சுற்றாடல் முன்னோடி கருத்திட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் இலங்கையில் உள்ள பாடசாலை முறைமையினுள் செயற்படுத்தப்படும் சுற்றாடல் முன்னோடி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுற்றாடல் முன்னோடியும் இறுதி பதக்கமான சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி பதக்கத்தை வெல்வதற்கான சுற்றாடல் கருத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். கடந்த ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக சுற்றாடல் முன்னோடிகளால் செயற்படுத்தப்பட்ட பல உகந்த சுற்றாடல் முன்னோடித் திட்டங்கள்.

“உயிர்க்கோளத்தை செயற்கையாக மாற்றுவதன் மூலம் அல்லது அதன் மீது செல்வாக்கு செலுத்துவதன் மூலம் சுற்றாடல் சமநிலையை சீர்குலைப்பது மாசுபாடு என கருதப்படுகின்றது. இன்று பல மனித நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏற்படும் சேதம் மிகப்பெரியது. எனவே, எதிர்கால சந்ததியினர் பாதுகாப்பான சுற்றுச்சூழலில் வாழ்வதற்கான உரிமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. ஒரு நிலைபேறான சுற்றாடல் கொள்கை என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பை மட்டுமல்ல, சமச்சீரான சமூக பொருளாதார நடைமுறைகளை செயற்படுத்துவதையும் ஊக்குவிக்கின்றது.”


- நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு - ச ஊது மக்கள் -




**கே. எம். வருனி ஹன்சிகா கவிசேகர**
பொ/ திம்பு/ அரல/ விஜய தேசிய பாடசாலை, பொலன்னறுவை.

**கருத்திட்டம் - நிராகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் போத்தல்களிலிருந்து ஆக்கங்களை வடிவமைத்தல்.**


இயற்கைச் சூழலுக்கு கழிவுகளை சேர்க்கும் பிளாஸ்டிக் போத்தல்களிலிருந்து மீண்டும் படைப்புக்களை உருவாக்குவதன் மூலம் மாசுபாட்டைக் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.




**ஹெஷானி விதுமினி பலிஹக்கார**
மாத்/ சுஜாதா கல்லூரி, மாத்தறை.

**கருத்திட்டம் - உக்கக்கூடிய கழிவுகளைப் பயன்படுத்தி உயிர்வாயுவை உருவாக்குதல்.**

மாத்தறை, மஹானா கிழக்கில் சுற்றுலாத்துறை வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. இதனால், அப்பகுதியின் முறையற்ற கழிவு முகாமைத்துவம் காரணமாக ஏற்படும் மாசுபாட்டின் தற்போதைய சுற்றுச்சூழல் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படாத உயிர்வாயு ஆலை மீண்டும் செயற்படுத்தப்பட்டு, இக்கருத்திட்டத்தின் மூலம் குப்பையில்லா தூய்மையான சூழலை நாட்டுக்கு வழங்க முடிந்தது.





**எம். ஜீ. ஜீ. ஆர். ப்ரபாஷி சேனாரத்ன**
பொ/ திம்பு/ அரல/ விஜய தேசிய பாடசாலை, பொலன்னறுவை.

**கருத்திட்டம் - இயற்கையான யானை வேலி திட்டம்**

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பாரிய யானை - மனித மோதலுக்கு தீர்வாக, இயற்கையான யானை வேலியை அமுல்படுத்துவது இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. இதற்கு எலுமிச்சை, முட்கள் நிறைந்த போகன்வில்லா மற்றும் கூரான காம்புகள் போன்ற தாவரங்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. காட்டு யானைகளை விரட்டுவதற்கு இந்த செடிகளை முறையாக பராமரித்து வெற்றிகரமாக பயன்பெறலாம். மேலும், யானைகளை விரட்டுவதற்கு தேனீக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. யானைகளின் பாதிப்புகளைத் தணிப்பதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு சுற்றியுள்ள சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேசிக்காய் மற்றும் தேனீக் கூடுகளிலிருந்து தேன் போன்ற பொருளாதார ரீதியாக லாபம் ஈட்டும் நன்மைகளையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




**கே.ஜீ. சஸனி நிராஷா சேனாரத்ன**
பொ/ திம்பு/ அரல/ விஜய தேசிய பாடசாலை, பொலன்னறுவை.

**கருத்திட்டம் - மண்புழு திரவ உர உற்பத்தி**


வடமத்திய மாகாண விவசாயிகள் இரசாயன திரவ உரங்களை வேகமாகப் பயன்படுத்துவதால் தற்போது மக்களைப் பாதிக்கும் கடுமையான நோய் மற்றும் மண் வளமற்று போதல் போன்ற பல நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வாக இக் கருத்திட்டம் உள்ளூர் சேதன மண்புழு திரவ உரத்தை உற்பத்தி செய்கின்றது.




**ஏ. எம். விஜுக் தந்துசா திஸாநாயக்க**
கொ/ ஆனந்த கல்லூரி, கொழும்பு 10.

**கருத்திட்டம் - தலங்கம குளத்தில் காணப்படும் ஆக்கிரமிப்பு தாவர இனங்களைப் பயன்படுத்தி சேதன உர உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் அருகிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுயதொழிலை அறிமுகப்படுத்துதல்.**


இத்திட்டம் ஆரம்பத்தில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தியதன் காரணமாக உரம் உற்பத்தி செய்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது இப்போது, விவசாயிகள் மற்றும் நிறுவனங்களிடையே இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்தும் ஒரு போக்காக உருவாக்கியுள்ளது. இதற்கிடையில், ஆக்கிரமிப்பு தாவரங்களினால் நீர் மூலங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலை நிவர்த்தி செய்வதில் இக் கருத்திட்டம் கவனம் செலுத்துகிறது.




**இ. டி லஹிரு சம்பத் சிறிவர்தன**
கல்/ பந்துல சேனாதிர மகா வித்தியாலயம், கம்பஹா.

**கருத்திட்டம் - உள்ளூர் பாரம்பரிய நெல் விவசாயத்தை விரிவுபடுத்துதல்**

நீரிழிவு, புற்றுநோய், கொலஸ்ட்ரால் போன்ற தொற்றாத நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துதல், உள்ளூர் பாரம்பரிய விவசாய அறிவை சமூகமயமாக்குதல், உள்ளூர் நெல் இரகங்களைப் பயன்படுத்துவதற்கு மக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.




**எஸ். ஏ. ஜீ. எம். இரோஷா குமாரி**
க/ ரணசிங்க பிரேமதாச தேசிய பாடசாலை, ஹாலக்க.

**கருத்திட்டம் - 18 வளைவு வீதி (வளைவுகள் 14,11,12,11) சுற்றாடலில் குப்பைக் குறைப்பு.**


18 வளைவுப் பகுதியானது விக்டோரியாவின் ரந்தேனிகல காப்பு வனாந்தரத்தில் மிகவும் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பாகும். இது மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக மாறியுள்ளது. அப்பகுதி மக்கள் சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டுவதால் அழிந்துபோன சுற்றுச்சூழல் அழகை புனரமைக்க சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் குப்பைகள் அகற்றப்படுவது முறைப்படுத்தப்பட்டதுடன் விழிப்பூட்டல் பலகைகளை பொருத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.




**ஆர். பி. ஸிரோஷா குஸ்மினி பிரேமச்சந்திர**
குரு/ புனித குடும்ப கன்னியர்மடம், குருநாகல்.

**கருத்திட்டம் - 100 மூலிகை தாவரங்களை நடுதல் மற்றும் அழிந்து வரும் மூலிகைகளைப் பாதுகாத்தல்**


நிசலதென்ன செனகம ஆராமய தியான மத்திய நிலையத்தில் உள்ளூர் மூலிகைத் தாவரங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மூலிகைத் தோட்டம் நிறுவப்பட்டது. இதில் அப்பகுதி மக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன்படி இந்த மூலிகை தோட்டத்தில் சுமார் 100 மூலிகைச் செடிகள் நடப்பட்டு அதனை முறையாக பராமரிக்க முடிந்தது. இதன் மூலம் அப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்ளவும், வருங்கால சந்ததியினர் அந்த மருந்தை அறிந்து கொள்ளவும் சிறந்த வாய்ப்பாக இது அமையும்.




**டி. பி. ஆர். சாதுர்ய திஸாநாயக்க**
மேமா/ மினு/ மாரபொல மகா வித்தியாலயம், மினுவாங்கொடை.

**கருத்திட்டம் - வண்ணத்துப்பூச்சி பாதுகாப்பு திட்டம்**

இந்தத் திட்டம் இலங்கையில் அழிந்து வரும் வண்ணத்துப்பூச்சி இனங்கள் பற்றிய ஆய்வு மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு வகை பட்டாம்பூச்சிகளையும் ஈர்க்கும் தாவரங்களை நடுவதன் மூலம் வண்ணத்துப்பூச்சிகளின் சனத்தொகையை அதிகரிப்பதாகும். இதன்படி மஹாகொட ஸ்ரீ நிகேதாராம விகாரையை மையமாக கொண்டு வண்ணத்துப்பூச்சி பாதுகாப்பு செயற்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. தற்போது அந்த இடம் பல வகையான வண்ணத்துப்பூச்சிகள் வாழும் அழகிய சூழலை உருவாக்கியுள்ளது.





**முகம்மது ஷரீக் ஷிப்ரா**
கல்/ அல்மசார் பெண்கள் உயர்தர கல்லூரி, நிந்தவூர்.

**கருத்திட்டம் - பிளாஸ்டிக் பொருட்களின் மீள்பாவனையின் மூலம் சிறுவர் பூங்காவை அலங்கரித்தல்.**

கடற்கரையோரம், பொது இடங்கள் போன்ற இயற்கை சூழலில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், கொள்கலன்கள் மற்றும் பழைய டயர்களைப் பயன்படுத்தி, நிந்தவூர் பிரதான வீதியில் அமீர் பிளேஸில் அழகிய சிறுவர் பூங்காவை நிர்மாணித்து, கழிவாக அகற்றப்படும் பொருட்களிலிருந்து சுற்றுச்சூழலை மாசுபாட்டிலிருந்து பாதுகாத்தல். பிளாஸ்டிக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதும் சூழலில் சேரும் இதுபோன்ற கழிவுகளிலிருந்து குறைந்த விலையில் பெறுமதியான பொருட்களை மீள்உற்பத்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.




**ஜெயபாலன் துஷோரியா**
தி/ புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை.

**கருத்திட்டம் - மட்டிக்களி பிரதேசத்தில் கண்டல் தாவரங்களை நடுகை செய்தல்**

மட்டிக்களி பிரதேசத்தில் புதிய கண்டல் தாவரங்களை மீள்நடுகைசெய்ததன் மூலம் அழகிய கடற்கரைச் சூழலை உருவாக்குதல் இதன் நோக்கமாகும். கண்டல் தாவரங்களை நடுவதால், கடல் அலைகளினால் ஏற்படும் சேதத்தை குறைத்துக்கொள்ளமுடியும். அத்தோடு கண்டல் சாகியம் சிறிய மீன் மற்றும் இறால் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் பேணப்பட வழிவகுக்கும்.




**பி. ஜீ. சக்னா இசுரிந்தி பிரேமலால்**
மாத்/ சுஜாதா கல்லூரி, மாத்தறை.

**கருத்திட்டம் - பிரதான சாலைகளின் இருபுறமும் மரங்களில் ஆணி அறைந்து தொங்கவிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத விளம்பரப் பலகைகளை அகற்றுதல்.**

ஒரு செடி நன்றாக வளர நீண்ட காலம் எடுக்கும். ஆனால் மனிதனது அறியாமையால் தாவரங்களுக்கு ஏற்படும் சேதம் மிகப்பெரியது. பிரதான சாலையின் இருபுறமும் நடப்பட்டிருக்கும் பெரிய மரங்களில் இரும்பு ஆணிகள் போன்றவற்றால் விளம்பர பலகைகளைத் தொங்கவிடும்போது மரத்திற்கு சேதம் ஏற்படுவதுடன், தண்டுக்கு ஏற்படும் சேதம் மரம் இறக்க கூட காரணமாக அமையலாம். மாத்தறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பிரதேச சபை பிரதேசங்களிலும், 02 மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும் பிரதான வீதியின் இருபுறங்களிலும் உள்ள மரங்களில் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகளை அகற்றி வர்த்தக சமூகத்தினரை தெளிவுபடுத்தும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




**ஆர். எம். பிரமுதிகா நவஞ்சி இரத்நாயக்க**
பொ/ திம்பு/ அரல/ தம்மின்ன மகா வித்தியாலயம்.

**கருத்திட்டம் - தம்மின்ன நகரில் வெப்பநிலையைக் குறைக்க 500 பலாப்பழக் கன்றுகளை நடுதல் மற்றும் பராமரித்தல்.**


நகரமயமாகி வரும் பொலன்னறுவை தம்மின்ன பிரதேசத்தில் படிப்படியாக அதிகரித்து வரும் சனத்தொகையானது எதிர்வரும் காலங்களில் பல சுற்றாடல் பிரச்சினைகளை உருவாக்க வாய்ப்புள்ளது. புவி வெப்பமடைதல் மற்றும் நீர்நிலைகளில் நீரூற்றுகள் வரண்டு போவது போன்ற பல சுற்றுச்சூழல் பிரச்சனைகள் விரைவில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பிரச்சினைக்கு தீர்வாக தம்மின்ன பிரதேசத்தில் 500 பலா மரங்கள் நடப்பட்டு அவற்றின் முறையான பராமரிப்பு இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.




**ஆர். எம். சாத்கா தெத்மினி இராஜநாயக்க**
குரு/ விசாகா கல்லூரி, குளியாப்பிட்டிய.

**கருத்திட்டம் - மூலிகைத் தோட்டத்தை உருவாக்குதல் மற்றும் மூலிகை செடிகளை நடுதல்.**

அம்பாவ ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரை மக்கள் அதிகளவில் கூடும் ஒரு விசாலமான ஆலயமாகும். இப்பகுதி மக்களுக்கு மிகவும் அவசியமான மருத்துவ தாவரங்கள் மற்றும் அழிந்து வரும் அரிய வகை உள்நாட்டு மருத்துவ தாவரங்கள் இந்த விகாரை வளாகத்தில் நடப்பட்டுள்ளன.




**என். எஸ். மெலனி சதாருகி ஜெயசிங்க**
மேமா/ கம்/ யசோதரா தேவி பாலிகா மகா வித்தியாலயம், கம்பஹா.

**கருத்திட்டம் - கால்வாய் புனரமைப்பு**


விவசாய நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத காரணியான நெற்செய்கையாளர்களுக்கு நீர் விநியோகத்தை வழங்கும் 394/பீ, மண்டாவலை, மாவத்தை பிரிவில் உள்ள வீதிக்கு இணையான கால்வாய் புனரமைப்பு இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 14 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்களுக்கு போசணை வழங்குவதில் இருந்த தடைகள் குறைக்கப்பட்டு, கரையோர அரிப்பைத் தடுக்கும் வகையில் பாக்கு மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது.




**கே. டி. தனுஷிகா டி கோஸ்டா**
மேமா/ ஜெ/ மஹாமாயா பாலிகா வித்தியாலயம், நுகேகொட.

**கருத்திட்டம் - வீசியெறியப்படும் பூக்களைப் பயன்படுத்தி தூபம் போல உற்பத்தி**

சர்வதேச ராம்சார் உடன்படிக்கையின் படி, இலங்கையின் 33 வது ஈரநிலமான பெல்லன்வில, அத்திடிய ஈரநிலத்தில் உள்ள பெல்லன்வில இராஜமஹா விஹாரையில் இருந்து தினசரி கழிவாக அகற்றப்படும் மலர்களைப் பயன்படுத்தி தூபத்தை உற்பத்தி செய்வது, கழிவுகளை தரம் பிரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பதும் இதற்கு சுவரொட்டி கண்காட்சிப்படுத்துவதும் நோக்கமாக அமைந்தது.




**டி. எம். தக்ஷிலா இஷோகா செனவிரத்ன**
மொ/ நன்னபுராவ மகா வித்தியாலயம், மொனராகலை.

**கருத்திட்டம் - இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் மூலம் மாசுபாட்டைக் குறைத்தல்**

மெதகம, அலான மற்றும் கெந்தவின்ன ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாதன கழிவுகள் கொட்டப்படுவதால் வீடுகளில் உள்ள நீர் ஆதாரங்கள் மாசடைந்துள்ளதுடன் மின்சாதன கழிவுகளை எரிப்பதனால் வளி மாசடைதல் அதிகரித்துள்ளது. இந்த மாசுபாட்டைத் தடுக்கவும், தூய்மையான சூழலை உருவாக்கவும், முறையாக கழிவுகளை அகற்றும் செயல்முறை தொடங்கப்பட்டது. அதன்படி, வீடுகளில் இருந்து மின்சாதன கழிவுகளை சேகரிக்க இடம் அமைக்கப்பட்டு, இதுகுறித்து அப்பகுதி மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மின்சாதன கழிவுகளை முறையாக அகற்றவும், மின்சாதன கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை பேணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
(சுற்றாடல் அமைச்சு)
"பரிசர பியச", 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.
இணைய தளம் : www.cea.lk தொலைபேசி : 011-2872278 Hotline - 1981

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 20ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 29

### குறள் தரும் சிந்தனை



அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

அறவழியில் உறுதியானவனாகவும், பொருள் வகையில் நாணயமானவனாகவும், இன்பம் தேடி மயங்காதவனாகவும், தன்னுயிருக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனையே ஆய்ந்தறிந்து ஒரு பணிக்கு அமர்த்த வேண்டும்.

## நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டங்கள்

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நாளை 03 ஆம் திகதி காலை 8.52 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்ததற்கு அமைய இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்நாட்டில் 14,022 கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலானது இந்நாட்டின் பிரதேச மட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடந்த 2020, 2021 ஆம் வருடங்களில் பெரும் சவாலானது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கொவிட் 19 தொற்று பரவுதலின் சவாலுக்கு மத்தியிலும் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தத் தவறவில்லை.

அந்த வகையில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தற்போதைய சூழலில் கிராம மட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கேற்ப, வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் ஒரு கிராமத்தில் குறைந்தது ஐந்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.கடந்த காலங்களைப் போலல்லாது அந்தந்தக் கிராம மக்களுடன் கலந்துரையாடி அடையாளம் காணப்பட்டு, அவர்களது விருப்பதற்கு ஏற்ப இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

அதாவது பொது நிதியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டமும் நீடித்து நிலைத்து மக்களுக்கு பயனளிக்க வேண்டும். அதுவே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும். அதனை அடிப்படையாகக் கொண்டுதான் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

ஆனால் கடந்த காலங்களில் இவ்வாறு பிரதேச மட்ட மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களை அடையாளம் காணாது தான் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டுதான் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றுக்கு நிதியொதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களால் நீடித்து நிலைத்து மக்களுக்கு பயனளிக்க முடியவில்லை. குறுகிய காலப்பகுதியில் தேசமடைந்து சிதைவடையும் நிலைக்கு அவை உள்ளாகக் கூடியனவாக இருந்தன. குறிப்பாக பிரதேச மட்ட வீதிகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இவ்வாறுதான் அமைந்திருந்தன. இதன் விளைவாக இவ்வாறு சேதமடையும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அடிக்கடி நிதியொதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை நீடித்து வந்தது.

இதன் விளைவாக அபிவிருத்தித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட பெருந்தொகை பொது நிதி கடந்த காலங்களில் முழுமையான பயனை அளிக்கவில்லை. இது தொடர்பில் மக்கள் மத்தியில் விமர்சனங்களும் உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டுதான் பொதுநிதியைக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் நீடித்து நிலைபேறானதாக மக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் அமைய வேண்டும் என்ற நோக்குடன் இந்த ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது நாட்டின் அபிவிருத்திப் புரட்சிக்கான உறுதியான அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகளுக்கும் எதிர்பார்ப்புக்கும் அமைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அவை நீடித்து நிலைத்து மக்களுக்கு பயனளிக்கும் திட்டங்களாக இருக்கும். அவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை அவர்கள் பாதுகாத்து பயன் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பர். இதன் ஊடாக கடந்த காலங்களைப் போன்று ஒரு வீதிக்காக அடிக்கடி நிதியொதுக்கீடு செய்ய வேண்டிய நிலைமையும் ஏற்படாது. பொதுநிதி விரயமாவது தவிர்க்கப்படும். பெருந்தொகை நிதியை மீதப்படுத்திக் கொள்ளவும் முடியும். இவ்வாறு மீதப்படும் நிதியை நாட்டின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

ஆகவே குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டை உறுதியானதும் நிலைபேறானதுமான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல இந்த ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வழிவகுக்கும். இது நாட்டில் புதிய மறுமலர்ச்சியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த அடித்தளமாகி நாட்டின் அபிவிருத்தியையும் அர்த்தபூர்வமாக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் 60 ஆயிரம் பேருக்கு அரச நியமனம்





நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்வாங்கும் வண்ணம் அபிவிருத்தி உத்தியோகத்தர் நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி நிகழ்வு பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் அமைச்சின் செயலாளர் அமல் ஹரிச த சில்வா, அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் "எமது நாடு covid19 தொற்றுக்கு முகம் கொடுத்து பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செயல்பட்டு வரும் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் ஒரே தடவையில் 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை விசேட அம்சமாக உள்ளது. கடந்த காலங்களில் நியமனங்கள் இல்லாது இருந்த பட்டதாரிகளுக்கு இந்த அரசாங்கத்தின் ஊடாக ஒரே தடவையில் 60,000 நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த நியமனங்கள் ஊடாக பின்தங்கிய பிரதேசங்களில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடிந்துள்ளது. அபிவிருத்தி சார்ந்த துறைகளில் அபிவிருத்தி அதிகாரிகள் நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை விசேட அம்சமாக உள்ளது. இந்த நியமனங்கள் ஊடாக பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் அதிகளவில் காணப்படுகின்றது. இன்றைய அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான அளவு நிதி ஒதுக்கீடு செய்து பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்டு வருகின்றது. இதனூடாக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். இதற்கு வழிகாட்டிகளாக இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டும்" என த் தெரிவித்தார்.

**இரா.சுரேஸ்குமார்...**
(அமைச்சரின் ஊடக இணைப்பாளர்)

# ஒன்றிணைந்த அறிக்கையிடல் சிறப்புக்காக யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துக்கு விருது

ஆயுள் காப்புறுதிப் பங்காளரான யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, 2021ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த அறிக்கையிடலுக்கான CMA சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில் சிறந்த 10 ஒன்றிணைந்த அறிக்கைகளைக் கொண்ட நிறுவனங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விருதுகளை வழங்கும் நிகழ்வை இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. சிறந்த நிதிப் பதிவுகளை பேணுவதுடன் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒன்றிணைப்பு ஆகிய பெறுமதிகளின் மீதான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்த கௌரவிப்பு மீளஉறுதி செய்திருந்தது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் கல்வியகத்திடமிருந்து இந்த பெருமைக்குரிய விருதைப் பெற்றுள்ளமையை மாபெரும் கௌரவிப்பாக கருதுகின்றோம். நிதி அறிக்கையிடலில் யூனியன் அஷ்யூரன்சின் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகளை கௌரவிப்பதாக அமைந்துள்ளது. கணக்கீட்டு செயன்முறைகள் மற்றும் நியமங்களை பின்பற்றுகின்றமைக்காக நாம் தொடர்ச்சியாக கௌரவிப்பைப் பெற்றுள்ளோம். யூனியன் அஷ்யூரன்ஸ் பின்பற்றும் வெளிப்படையான கணக்கீட்டு செயன்முறைகளை இந்த கௌரவிப்பு பிரதிபலிப்பதுடன், சிறந்த கூட்டாண்மை ஆளுகை கட்டமைப்பு மாதிரியை பின்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நிதி அறிக்கையிடலில் தொடர்ந்தும் சிறப்பை பதிவு செய்வதில் நாம் கவனம் செலுத்துகின்றோம்” என்றார்.



யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதிநிதிகள் நிதியியல் பிரிவின் உதவி பிரதித் தலைவர் ருவன் ரொட்ரிகோ மற்றும் திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடு உதவி முகாமையாளர் சச்சினி பண்டார ஆகியோர் 2021 CMA சிறப்பு ஒன்றிணைந்த அறிக்கையிடல் விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

இலங்கையின் ஒட்டுமொத்த தனியார் மற்றும் பொதுநிறுவனங்களில் வருடாந்த அறிக்கைகளின் விபரமான மதிப்பாய்வுகளின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. சர்வதேச ஒன்றிணைந்த அறிக்கையிடல் சம்மேளனக் கட்டமைப்பினால் (IIRC) நிறுவனத்தினால் அதன் தந்திரோபாயம், ஆளுகை, வினைத்திறன் மற்றும் சௌபாக்கியமான அம்சங்களை கட்டியெழுப்பியுள்ளதுடன், நீண்ட காலம் நிலைத்திருக்கும் பெறுமதியை சகல பங்காளர்களின் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 15.9 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 47.5 பில்லியனையும், 2021 செப்டெம்பர் மாதமளவில் மூலதன போதுமை விகிதமாக (CAR) 250% ஐயும் கொண்டிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளதுடன், மாற்றமடைந்து வரும் ஆயுள் காப்புறுதித் துறையில் கவனம் செலுத்துகின்றது.

# இறுதிக் காலம் வரை அயராது கல்விப் பணி புரிந்த அப்துல் சமட்

கல்வியியல் செயற்பாட்டில் நீண்ட கால சேவை புரிந்த அப்துல் சமட் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது 82 ஆவது வயதில் காலமானார். சாய்ந்தமருதில் மீராசாஹிபு முகம்மது ஹுஸைன் மற்றும் மீராலெப்பை கதீஜா உம்மா தம்பதிகளுக்கு ஏகபுதல்வனாக அப்துல் சமட் 1940.01.13 இல் பிறந்தார். கடந்த 32 வருட காலமாக அவர் கல்கிசையில் வாழ்ந்து வந்தார்.

அப்போதைய நிந்தவூர் யூனியர் ஆங்கிலப் பாடசாலையில் (தற்போதைய அல் அஸ்ரக்) தரம் 01 முதல் 05 வரை ஆரம்பக் கல்வியைக் கற்றார். தரம் 06 முதல் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். இவர் மருதூர்க்கனி, மருதூர் கொத்தன், யூ.எல்.ஏ. மஜீட் ஆகியோரின் சக மாணவராவார். SSC பரீட்சையில் சித்தியெய்திய எம். எச். ஏ. சமட் 1961 இல் ஆசிரியராக நியமனம் பெற்று, மாவடிப்பள்ளி முஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியர் கடமையை ஆரம்பித்து ஒரு வருடம் கடமையாற்றினார். பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1962 முதல் 1964 வரையில் பயிற்சி பெற்று, சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ், கல்முனை சாஹிறா கல்லூரி, அநுராதபுரம் விவேகானந்தா கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தொடர்ந்து அநுராதபுரம், மிகிந்தலையிலுள்ள மிகிந்து சிங்கள மகாவித்தியாலயத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இஸ்லாம் பாடத்தைக் கற்பித்தார். ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த இக்காலப் பகுதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய இவருக்கு பேராதனை பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது.

அநுராதபுரத்தில் இருந்து கொண்டு கண்டியில் பட்டப்படிப்பை தொடர முடியாத காரணத்தினால் கண்டி உடதும்பர ஜாமிஉல் அஸ்ஹர் மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டு முழு நேரமும் பல்கலைக்கழத்தில் கற்க முடியாத காரணத்தினால் வெளிவாரியாக பட்டப்படிப்பை தொடர முடியுமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பல்கலைக்கழகப் படிப்பை தொடர்ந்தார்.

பல்கலைக்கழத்தில் முதல் வருடம் பொருளியல் பாடத்தில் இவர் பெற்ற A சித்தி காரணமாக அப்பாடத்தை விசேடமாக ஆங்கிலத்தில் கற்றார். இதன் காரணமாக இறுதி வருடத்தை முழு நேரமாக கற்பதற்கான கற்கும் விடுமுறை (study leave) இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி B.Com கற்கையை நிறைவு செய்தார்.



பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வரையில் பாடசாலை ஆசிரியராக சுமார் 12 வருடங்கள் தொழில் புரிந்து வந்த இவர், பின்னர் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் வணிக விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். சில வருடங்கள் இங்கு கடமையாற்றிய பின்னர் நாவலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தொலைக் கல்வி நிறுவனத்திற்கு (தற்போதைய திறந்த பல்கலைக்கழகம்) தமிழ்மொழிப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அக்காலத்தில் கொழும்பில் ஏற்பட்ட கலவர சூழல் காரணமாக சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 1977 முதல் 1980 வரையில் பணிபுரிந்தார். கல்விப் பயிற்சிக்காக வெளிநாடுகள் பலவற்றிற்கு சென்றுள்ள இவர், 1980 களில் நைஜீரியா, கம்பியா ஆகிய நாடுகளில் விரிவுரையாளராக கடமையாற்றினார்.

1983 இல் நாடு திரும்பி சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், அதிபராகவும் 1990 வரை கடமையாற்றினார். 1990 முதல் 1991 வரையில் தெஹிவளை தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தமிழ்ப் பிரிவொன்று அமைப்பதில் முன்னின்று செயற்பட்டார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஆலோசகராக 6 வருடங்கள் கடமையாற்றினார். சமூக அக்கறையோடு கடமையாற்றியவர் இவர். தொழில்நுட்பக் கல்வியில் ஆர்வமின்றி இருந்த முஸ்லிம் மாணவர்கள் விழிப்புணர்ச்சி பெறும் வகையில் கருத்தரங்கு, வானொலி, தொலைக்காட்சிப் பேட்டிகள் நடத்தினார். ஓய்வு பெற்ற பின்னர் நழீம் ஹாஜியார் வேண்டுகோளுக்கமைய இக்றா தொழில்நுட்பக் கல்லூரியின் ஸ்தாபக அதிபராக 1992 முதல் 1995 வரை பணியாற்றினார். முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரஃப்பின் விஷேட ஆலோசகராகவும் பணியாற்றினார்.

ஊடகத்தில் பணிபுரியும் காலத்தில் அதிகம் எழுதினார். அப்துல் சமட் அவர்கள் மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் மூலம் அரும்பணியாற்றி படைப்பாளர்களை உலகின் பல பாகங்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். 1962இல் சாய்ந்தமருதைச் சேர்ந்த முகைதீன்பாவா ஹவ்வா உம்மாவைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு ஏழு பிள்ளைகள் உள்ளனர்.

எம்.எச். அப்துல் சமட் அவர்களின் ஜனசா 31.01.2022 தெஹிவளை ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கல்முனை
**பறக்கத்துல்லாஹ்...**

# பல்லாயிரம் உயிரினங்களின் வாழிடமான சதுப்பு நிலங்கள் எதிர்கொள்ளும் சவால்!



## உலக சதுப்பு நில தினம் இன்று (02.02.2022)

இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சி மனிதனுக்கு நன்மைகள் பயக்கின்ற அதேநேரம், அவனுக்கு கெடுதல்கள் ஏற்படவும் துணை புரிகின்றது. இக்கெடுதல் அவனுக்கு உடல், உள ரீதியான பாதிப்புகளாக அமைவதோடு அவன் வாழும் சுற்றுச்சூழலுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் கூட பாதிப்புக்களையும் தீங்குகளையும் ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாக இயற்கைச் சமநிலையிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவையும் மனிதனுக்கு தீங்காகவே விளங்குகின்றன.

அதாவது அறிவியல் வளர்ச்சியின் முன்னேற்றங்கள் அபிவிருத்தியைப் பிரதான இலக்காகக் கொண்டு பயன்படுத்தப்படுவதன் விளைவாக இயற்கைச் சமநிலை எதிர்கொள்ளும் சவாலின் விளைவுகளை இன்று முழு உலகமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இச்சவால்களையும் சீர்கேடுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும். அதற்கு விழிப்புணர்வும் முன்னெச்சரிக்கையும் இன்றியமையாததாகும்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு விடயங்கள் தொடர்பிலும் உலகளாவிய தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழும் வருடாவருடம் அவை அனுஷ்டிக்கப்படுகின்றன. அந்த வகையில் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியான இன்று உலக சதுப்பு நில தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஒரு தினம் அவசியமானதா? சதுப்பு நிலங்களால் மனிதனுக்கு என்ன பயன்? என்று வினவக் கூடியவர்களும் இருக்கின்றனர். ஆனால் சதுப்பு நிலங்களின் முக்கியத்துவத்தையும் அது மனிதனுக்கும் தாவரங்கள் உள்ளிட்ட ஏனைய உயிரினங்களுக்கும் ஆற்றிவரும் சேவைகளை அவர்கள் அறியாதவர்களாவர்.



**மனிதனின் தவறான செயற்பாடுகளால் அதிகரித்து வரும் பேராபத்தை தடுத்து நிறுத்தாவிடில் எதிர்காலத்தில் பாரிய பாதிப்புகள்!**

'சதுப்பு நிலங்கள்' என்றால் எதற்கும் பயன்படாத, பயன்படுத்த முடியாத சேறும் சகதியும் நிறைந்த ஈரலிப்பான பிரதேசங்கள் என்றுதான் நிறையப் பேர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இயற்கையாக அமைவுற்று இருக்கும் இச்சதுப்பு நிலங்கள் இயற்கைச் சமநிலைக்கும் உயிரினப் பல்வகைமைப் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்கும் அளித்துவரும் பங்களிப்பு அளப்பரியது. குறிப்பாக கண்டல் தாவரங்கள் உள்ளிட்ட பல மரஞ்செடி கொடிகளது இருப்பிடமாகவும் பறவைகள், ஊர்வன, பூச்சிகள், வண்டுகள், எறும்புகள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களின் வாழிடமாகவும் அவை விளங்குகின்றன.

பொதுவாக சதுப்பு நிலங்களை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டு வகை இயற்கையாகவே அமையப் பெற்றுள்ள சதுப்பு நிலங்களாகும். ஒன்று நாட்டின் உள்ளகப் பிரதேசங்களில் காணப்படும் நன்னீர் சதுப்பு நிலங்கள். அதாவது ஆறுகள், கங்கைகள், குளங்கள், ஏரிகள், குட்டைகள், ஈரமான புல்வெளிகள், நீர் தேங்கிநிற்கும் வயல்கள், வாய்க்கால் மற்றும் அவை சார்ந்த பிரதேசங்கள் என்பவற்றை இந் நன்னீர் சதுப்பு நிலங்கள் குறிக்கும்.

இரண்டாவதாக கடற்கரையோரங்களை அண்டிய உவர்நீர் சதுப்பு நிலங்களாகும். இவை கடற்கரையை அண்மித்த பிரதேசங்கள், கடற்கரைகள், ஆழமற்ற விரிகுடாக்கள், கழிமுகங்கள், சதுப்புநிலக் காடுகள், உப்பளங்கள், பவளப்பாறைத் திட்டுகள், ஆற்றங்கரைகள் மற்றும் அவை சார்ந்த பிரதேசங்களைக் குறிக்கும்.

இவற்றை விடவும் மனிதன் உருவாக்கிய செயற்கை சதுப்பு நிலங்களும் காணப்படுகின்றன. அவற்றில் நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசனக் குளங்கள், அவற்றை அண்மித்த பிரதேசங்கள் ஆகியன அடங்கும். உலகில் உவர்நீர் நிறைந்த கடலுக்கும், நிலங்களுக்கும் இடையில் குறைந்த ஆழத்தில் வருடம் முழுவதும் நீர் தேங்கி இருக்கும் பகுதியாகவே சதுப்பு நிலங்கள் உருவாகின. பூமியின் மொத்தப் பரப்பில் 6 சதவீதப் பகுதி சதுப்பு நிலங்களாக உள்ளது.

இந்த சதுப்பு நிலங்கள் தட்பவெப்பநிலையைச் சீராக்குதல், நீரை வடிகட்டித் தூய்மையாக்குதல், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துதல், மண்ணரிப்பைத் தடுத்தல், பறவைகள் உள்ளிட்ட பல ஆயிரம் உயிரினங்களுக்கு வாழிடமாக இருத்தல், புயல், வெள்ளம் போன்றவற்றில் இருந்து பாதுகாத்தல் போன்ற மகத்தான பணிகளை ஆற்றி வருகின்றன.

இவ்வாறு மனிதன் உள்ளிட்ட உயிரினங்களுக்கு பெரிதும் நன்மைகள் பயக்கும் சதுப்பு நிலங்களின் முக்கியத்துவத்தை உணராத நவீன அறிவியல் மனிதன், அவற்றை நிரப்பி கட்டடங்களை எழுப்புகின்றான். கழிவுப்பொருட்களை கொட்டும் இடங்களாகவும் தொழிற்சாலைகளின் கழிவு நீர் விடுவிக்கப்படும் இடங்களாகவும் சுற்றுலா தலங்களாகவும் மாற்றுகின்றான்.

இதன் விளைவாக கடந்த 100 ஆண்டுகளில் சுமார் 60 வீதமான சதுப்பு நிலங்களை உலகம் இழந்து விட்டது. அதன் தாக்கங்களும் பாதிப்புகளும் தோற்றம் பெற்ற வண்ணமுள்ளன. இதன்படி நவீன அறிவியலில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியினால் சதுப்பு நிலங்கள் அழிக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் வருவதோடு அவை உயிரினப் பல்வகைமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகின்றன.

இதன் பாதிப்புகளையும் அச்சுறுத்தல்களையும் 1970 களிலேயே உணர்ந்த உலகத் தலைவர்கள், 1971இல் காஸ்பியன் கடற்பகுதியிலுள்ள ஈரான் நாட்டின் ரம்சார் நகரில் கூடி உலகிலுள்ள சதுப்பு நிலங்களையும் நீர்நிலைகளையும் பாதுகாப்பதன் அவசியம் தொடர்பில் கலந்துரையாடி பிரகடனமொன்றை வெளியிட்டனர். இது ரம்சார் நகரில் வெளியிடப்பட்ட பிரகடனம் என்பதால் சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்கான ரம்சார் பிரகடனம் எனப் பெயர் பெற்றுள்ளது. இப்பிரகடனத்தில் முதலில் 18 நாடுகள் கையெழுத்திட்டன. இற்றைவரை 171 நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன. அவற்றில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையானது இப்பிரகடனத்தில் 1971 இல் கையெழுத்திட்ட போதிலும் அது 1990 இல்தான் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது.

சதுப்பு நிலங்கள் தொடர்பான ரம்சார் பட்டியலில் உலகிலுள்ள 253 மில்லியன் ஹெக்டேயர்களைக் கொண்ட 2392 சதுப்பு நிலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2020 வரையும் 72,790,070 ஹெக்டேர் பரப்பளவில் 973 கடல் மற்றும் கடலோர ஈரநிலங்கள் சார்ந்த சதுப்பு நிலங்களும் அடங்கியுள்ளன.

அந்த வகையில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த 41 சதுப்பு நிலங்கள் இலங்கையில் காணப்படுவதாக ஆசிய சதுப்பு நில அகராதி அடையாளப்படுத்தியுள்ளது. இவை 2,74,000 ஹெக்டேயர்கள் பரப்பரவைக் கொண்டவையாகும். இச்சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கையொன்றை இலங்கை 2004 இல் உருவாக்கியது.

சதுப்பு நிலங்கள் தொடர்பான ரம்சார் பட்டியலில் 1990 இல் பூந்தல சரணாலயம் முதலில் உள்ளடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆனைவிலுந்தாவ பண்டைய நீர்த்தேக்க கட்டமைப்பு, மதுகங்கை கண்டல் தாவரங்கள் அடங்கிய சூழல் கட்டமைப்பு, வங்காலை சரணாலயம், வில்பத்து, குமண ஆகிய சதுப்பு நிலங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இந்நாட்டின் 06 சதுப்பு நிலங்கள் இற்றைவரையும் ரமசார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

மனிதனின் தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளால் இந்நாட்டிலும் பல சதுப்பு நிலப் பிரதேசங்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக பொலித்தீன், பிளாஸ்ரிக் உள்ளிட்ட திண்மக் கழிவுப் பொருட்கள் கொட்டப்படும் இடங்களாக பல சதுப்பு நிலங்கள் மாறியுள்ளன. இன்னும் சில சதுப்பு நிலப் பிரதேசங்கள் மணல், கற்கள் கொண்டு நிரப்பட்டு கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளின் கழிவுகள் அகற்றப்படும் இடங்களாகவும் மேலும் சில சதுப்பு நிலப் பிரதேசங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக சதுப்பு நிலங்களை தம் வாழிடங்களாகக் கொண்டுள்ள பெரும்பாலான உயிரினங்கள் பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளன. சுற்றுச்சூழலில் தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன.

மனிதனின் பிழையானதும் தவறானதுமான செயற்பாடுகளால்தான் இவ்வாறான அச்சுறுத்தலுக்கு சதுப்பு நிலங்கள் உள்ளாகியுள்ளன. அதனால் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தோடு சதுப்பு நிலங்களை மாசடைய செய்யும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். அவை இன்றைய அவசியத் தேவையாகும். அவற்றின் ஊடாகவே சதுப்பு நிலங்களை வாழிடங்களாகக் கொண்டிருக்கும் யாதுமறியா அப்பாவி உயிரினங்கள் எதிர்கொண்டுள்ள இருப்பிட சவால்களைக் கட்டுப்படுத்தி மனிதனும் சுற்றுச்சூழலும் எதிர்கொள்ளும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.



மர்லின் மரிக்கார்...

# இந்தியாவின் நட்புநாடுகளை குறிவைத்து உறுதியாக காய்களை நகர்த்தும் சீனா!

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் பிரிட்டிஷ் மற்றும் ஜப்பானால் ஆளப்படும் நாடாகத் திகழ்ந்த சீனப் பெருந்தேசம், மாவோ சேடொங்கின் வருகையின் பின்னரே 'இனிமேல் நாம் ஆளும் தேசமாக இருப்போமே தவிர ஆளப்படும் நாடாக இருக்கப் போவதில்லை' என்ற உறுதியான முடிவுக்கு வந்தது. சீனாவின் சாதுரியமான நகர்வுகளும், திட்டங்களும் நீண்ட தூரப் பார்வைகளையும் இலக்குகளையும் கொண்டதாகவும் பிராந்திய வல்லரசாகத் திகழவேண்டும் என்ற பெருங் கனவைக் கொண்டதாகவும் அமைந்தன.

தன் கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்காக கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் சீனா பயன்படுத்திக் கொண்டமை அந்நாட்டுக்கு ஏற்றத்தைத் தந்தது. மூடப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டிருந்த சீனா, எதிர்கால உலகம் சந்தைப் பொருளாதாரத்தை நோக்கியே நகரப் போகிறது என்பதை முன்கூட்டியே உணர்ந்துகொண்டு தன் கதவுகளை சந்தைப் பொருளாதாரத்தை நோக்கித் திறந்து விட்டது.

சீனாவின் நடவடிக்கைகளை எப்போதும் உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா, பொருளாதார ரீதியாக சீனா மேற்கொண்ட புதிய நகர்வுகளின் ஆழத்தையும் விரிவையும் நோக்கங்களையும் சில சமயம் அந்நேரத்தில் மிகச் சரியாக எடைபோடத் தவறியிருக்கலாம். தடைபோட்டிருந்தால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இன்றைய நிலையை விட மிக அதிகமாக இருந்திருக்கும்.

இந்தோ_ பசுபிக் பிராந்திய நாடுகளை குறிவைத்ததாகவும் ஆபிரிக்க நாடுகளை இலக்காகக் கொண்டதாகவும் சீனா தனது கடல் பட்டுப்பாதைத் திட்டத்தை நர்த்தி வருகிறது. சீனா இந்நாடுகளை இரண்டு வளையங்களாகப் பிரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. முதலாவது இந்தியாவின் உடனடி பிராந்திய நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, மாலைதீவு, பூட்டான், நேபாளம், ஆப்கானிஸ்தான், மியன்மார் என்பன இதற்குள் அடங்கும். பாகிஸ்தான் இந்தியாவின் எதிரிநாடு என்பது சீனாவுக்கு எப்போதுமே சாதகமான அம்சமே. வங்கதேசம் இலங்கையைப் போலவே சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளையும் சரிசமமாக வைத்துக் கொள்ள விரும்பும் நாடு. அதேசமயம் அந்நாடு உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திலுள்ள நாடும் கூட.

இலங்கையில் சீனாவின் செல்வாக்கு பற்றி விரிவாகப் பார்க்க வேண்டியதில்லை. சீனாவின் அடுத்த இலக்கு மாலைதீவு. இந்தியாவை அண்மித்த தீவுக் கூட்டமான மாலைதீவை தன் செல்வாக்குக்குள் கொண்டு வந்து, ஏற்கனவே இந்தியா பேணி வரும் செல்வாக்கை குறைக்கும் முயற்சிகளில் சீனா ஈடுபட்டுள்ளது. மாலைதீவின் பிரதமருக்கு சீனாவில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டதையும், சீன வெளிவிவகார அமைச்சர் தன் புத்தாண்டு விஜயமாக மாலைதீவு சென்றதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அடுத்ததாக நேபாளத்திலும் தன் செல்வாக்கை ஸ்திரப்படுத்திக் கொள்ள சீனா முயன்று வருகிறது. அதன் முயற்சிகள் பலன் அடைந்து வருகின்றன என்றும் கூறலாம்.

மியன்மார் ஒரு இராணுவ ஆட்சி நடைபெறும் நாடாக இருப்பதுவும் ஜனநாயகம் அங்கே பாகிஸ்தானைப் போல பெயரளவில் காணப்படுவதும் சீனாவுக்கு சாதகமான அம்சங்கள். சீனாவின் கடல் பட்டுப்பாதையில் மியன்மாரும் ஒரு அங்கம். எனவே மியன்மாரில் சீனா முதலீடுகளை செய்து வருகிறது. பாதை அமைப்பு, குழாய் அமைப்பு என்பனவற்றில் சீனா ஈடுபாடு காட்டி வருகிறது.

ஆப்கானிஸ்தான் அமெரிக்காவின் நிர்வாகத்தில் இருந்த போது சீனா ஆப்கான் விவகாரத்தில் தலையிடவில்லை. ஆனால் ஆப்கான் தொடர்பான அதன் நிலைப்பாடு அமெரிக்க எதிர்ப்பு நிலையில்தான் இருந்திருக்கும் என்பதை ஊகிப்பது கடினமல்ல. அமெரிக்க நிர்வாகத்தின் கீழான ஆப்கானிஸ்தானில் இந்தியா பெருமளவு முதலீடுகளைச் செய்தது. பாதைகள், பாலங்கள், கட்டடங்கள் எனப் பல துறைகளில் இந்தியா திட்டங்களை மேற்கொண்டிருந்து. காபூல் பாராளுமன்றத்தை அமைத்தது இந்தியாவே. எனவேதான் கடந்த வருடம் அமெரிக்கா அவசரஅவசரமாக ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய போது அங்கிருந்த இந்தியர்களும் இராஜதந்திரிகளும் காபூலை விட்டு புறப்பட வேண்டியதாயிற்று. 'அமெரிக்காவின் நண்பன் எனக்கு எதிரி' என்பதே தலிபான்களின் இந்தியா மீதான பார்வையாக இருக்கும் என்பது மிகத் தெளிவானது என்பதால் இந்தியா வெளியேற வேண்டியதாயிற்று.

தற்போது இந்திய நலன்கள் ஆப்கானிஸ்தானில் சேதமடைந்துள்ளன என்பது உண்மை என்பதால் அந்த இடத்தைப் பிடிப்பதில் சீனாவும் பாகிஸ்தானும் முனைப்பாக உள்ளன. தலிபான்களை அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நேசநாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் கைவிட்டுள்ள நிலையில் ஆபத்பாந்தவனாக இருக்க வேண்டிய பொறுப்பு சீனாவுடையதாகிறது. ஆனால் எதிர்பார்ப்புகளோடுதான் சீனா உதவும் என்தே அந்நாட்டின் அரசியல் அணுகுமுறை. ஆப்கானிஸ்தானில் இருக்கக் கூடிய கனியவளங்களை சீனா குறிவைத்திருக்கலாம். இது இவ்வாறிருக்கையில் அமெரிக்காவும் நேட்டோவும் அவசர அவசரமாக வெளியேறியதால் பெருமளவு ஆயுதங்களை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. இந்த ஆயுதங்களின் ஒரு பகுதி இந்தியாவை குறிவைக்கும் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட தீவிரவாத அமைப்புகளிடம் சென்றடைவதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது.




**இந்தியாவை அண்மித்த மற்றும் இந்திய நட்பு நாடுகளை குறிவைப்பதுடன் மாத்திரமன்றி, இந்த வளையத்துக்கு அப்பால் ஆபிரிக்க வளையத்தின் மீதும் சீனாவுக்கு அக்கறை உள்ளது. செங்கடல் கரையோரமான எரித்தியா, கென்யா, கிழக்கு ஆபிரிக்க – தீவுக்கூட்டங்களான சீசெல்ஸ், மொரிஷியஸ், மடகஸ்கார் என சீனாவின் கடல் பட்டுப்பாதை சுற்றி வளைத்து நீள்கிறது.**

இந்தியாவை அண்மித்த மற்றும் இந்திய நட்பு நாடுகளை குறிவைத்ததாக சீனா தன் நகர்வுகளை உறுதியான முறையில் மேற்கொண்டு வருகிறது. இந்த வளையத்துக்கு அப்பால் ஆபிரிக்க வளையத்தின் மீதும் சீனாவுக்கு அக்கறை உள்ளது. செங்கடல் கரையோரமான எரித்தியா, கென்யா, கிழக்கு ஆபிரிக்க தீவுக் கூட்டங்களான சீசெல்ஸ், மொரிஷியஸ், மடகஸ்கார் என சீனாவின் கடல்பட்டுப்பாதை சுற்றி வளைந்து நீள்கிறது.

சீனா பெரிதாகவே யோசிக்கிறது; திட்டமிடுகிறது. அதற்கான உட்கட்டுமானங்களில் பெருமளவில் முதலீடு செய்கிறது. தென்கிழக்கு ஆசியாவை, இந்தோ பசுபிக் நாடுகளை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து பிராந்திய வல்லரசாக வேண்டும், அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும் இப்பிராந்தியத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்பதே சீனாவின் பிராந்திய மூலோபாயம். அதற்காக சீன இடையறாது முதலீடுகளை மேற்கொள்கிறது; திட்டங்களை வகுக்கின்றது.

சீனாவின் இந்த விரிவான திட்மிடல் மற்றும் அதற்கான நகர்வுகளுக்கு எதிராக 'குவாட்' நாடுகளின் நகர்வுகள் போதுமானவையாக உள்ளனவா என்ற கேள்விக்கு நியாயமான பதில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அமைப்பு (அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள்) கடந்த வருடம் வோஷிங்டனில் கூடிப் பேசின. அப்பேச்சுவார்த்தையின் பின்னர் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பலன்கள் ஏதும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இதேசமயம் அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும், பிரிட்டனும் இணைந்து மற்றொரு பாதுகாப்பு அமைப்பொன்றை உருவாக்கியிருக்கின்றன. இது இந்தோ பசுபிக் பிராந்திய இராணுவ ஒத்துழைப்பு தொடர்பான அமைப்பாகவே செயல்படும் எனத் தெரிகிறது. இந்த வகையில் பார்க்கும் போது சீனாவுக்கு எதிரான அல்லது சீன நகர்வுகளை சமாளிக்கக் கூடியதாக இம்மாற்று ஏற்பாடுகள் போதுமானதாக இருப்பதாகத் தெரியவில்லை என்றுதான் சர்வதேச அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தியாவை இராஜதந்திரிகளின் நாடு என்பார்கள். அரசியல்வாதிகள் எவ்வாறிருப்பினும் புதுடில்லி இராஜதந்திரிகளின் ஆலோசனைகளும் நிர்வாகமும் இந்தியாவை வழிநடத்தும் என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. இந்தப் பொறுப்பு தற்போது மேலும் சுமை கொண்டதாக மாறி வருகிறது.

சீனாவின் பிரசன்னம் பெருமளவில் கடன்களை வழ்குவது, முதலீடுகளைச் செய்வது என்பதாகவே உள்ளது. உள்ளூர் அரசியலில் தாம் ஈடுபாடு காட்டுவதில்லை என்ற கொள்கையில் சீனா தொடர்ந்தும் உறுதியாக உள்ளது. எனினும் சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் சீனத் தூதர் வடக்குக்கு விஜயம் செய்ததும் 'இது ஆரம்பம் மட்டுமே முடிவல்ல' என்று அறிவித்ததும் கவனிக்கத்தக்கவை.

இலங்கையில் இந்தியா மேற்கொண்டிருக்கும் முதலீடுகளும் சாமானியமானதல்ல. இலங்கையில் அது எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளதோடு திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் பேரிலான ஒரு கூட்டு நிறுவனத்திலும் இந்தியா முதலீடு செய்கிறது. அடுத்த ஆறு மாத காலத்துக்கான எண்ணெய் வழங்கலுக்கான பேச்சுவார்த்தைகளில் இலங்கை இந்தியாவுடன் ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. தற்போதைய தரவுகளை எடுத்துக் கொண்டால் இந்தியாவின் பக்கம் இலங்கை சாய்ந்துள்ளதாகவே விமர்சகர்கள் கருதுகின்றனர்.

உண்மையைச் சொல்வதானால் இலங்கையின் தேசிய கட்சிகளுடன் இந்தியாவுடன் எந்தப் பிரச்சினையும் கிடையாது. தமிழர் விவகாரங்களை இந்தியா கையில் வைத்திருப்பதே அவர்களுக்குப் பிரச்சினை!

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை...

வெளியேறுபவர்களை திறமையான தொழிலாளர்களாக வெளிநாடுகளில் பணிபுரிய வழிவகுப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

திறமையான மற்றும் சான்றிதழ் பெறாத நபர்களை குறுகிய கால பயிற்சி மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஏற்ற பணியாளர்களாக உருவாக்குவது மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையையும் இளைஞர்களையும் இணைக்கும் பொறிமுறையை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜப்பான், தென் கொரியா, இத்தாலி, ருமேனியா மற்றும் கட்டார் உள்ளிட்ட 22 நாடுகளிலுள்ள வெற்றிடங்களுக்காக ஜனவரி 26 ஆம் திகதி வரை 183,198 பேர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

## ஏப்ரல் மாதம் வரை...

விநியோகிக்க முடியும் என அவர் தெரிவித்தார். மின் விநியோகத்தை நிறுத்தி மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவது எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பாக உள்ள போதிலும் அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்கி மின்விநியோகத்தைத் தொடர்ந்தும் வழங்கி வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே சுட்டிக் காட்டினார்.

## மீனவர் சங்கங்களுக்கு... (02ஆம் பக்கத் தொடர்)

இடைமறித்து மீனவர்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். கடற்றொழில் அமைச்சர் மீனவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போதும், சமரசம் ஏற்படவில்லை. இந்நிலையில், மீனவ அமைப்புக்களை கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று காலை பத்து மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மின்சக்தி அமைச்சருக்கு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகேவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார். தற்போது நிலவும் மின் நெருக்கடியால் தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலியில் ரயில் ஆட்டோ...

அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்திருந்தனர். சாரதியின் மனைவி சிகிச்சை பெற்றுவந்த போது உயிரிழந்துள்ளார். ரயில் கடவையிலுள்ள சமிக்ஞைகள் செயலிழந்திருந்த வேளை முச்சக்கரவண்டி தண்டவாளத்தை கடந்த போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. மரணித்தவர்கள் 46,47 மற்றும் 84 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். மாத்தறையிலிருந்து வவுனியா நோக்கி நேற்று காலை 10. 29 க்கு புறப்பட்ட கடுகதி ரயில், பூஸா ரயில் நிலையத்தை கடந்து சில நிமிடங்களிலேயே முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக புகையிரத கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இதையடுத்து விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பெலியத்த பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நாட்டின் கடனை மறுசீரமைக்க...

கூட்டத்தில் முன்னெடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும் இவ்விடயம் தொடர்பிலான பொதுவான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது மாத்திரமின்றி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பவற்றுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். இவ்வாண்டு ஜனவரியில் செலுத்தப்பட வேண்டியிருந்த 500 மில்லியன் டொலரை உரிய காலப்பகுதிக்குள் மீள செலுத்தியுள்ளோம். எதிர்வரும் ஜூனில் மேலும் 1 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலைமையை சரி செய்வதற்காக அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். அதற்கமைய எதிர்வரும் 6 மாதங்களுக்குள் தற்போதுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை...

வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (பா)

## ஆரம்ப பாடசாலைகளுக்கான விடுமுறை...

மார்ச் மாதம் 05ம் திகதி வரை நடைபெறும். அந்த காலப்பகுதியில் ஆரம்ப பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பரீட்சை காலத்தில் ஆரம்ப தரம் மற்றும் ஆரம்ப பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட மாட்டாது. பரீட்சை சூழலை பேணுவதற்கு இடையூறான பாடசாலையாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறான பாடசாலைகளின் ஆரம்ப தரங்களுக்கு விடுமுறை வழங்குவதற்கும், குறித்த பாடசாலைகளுக்கு உரிய பணியிடங்களை பரிந்துரைப்பதற்கும், கற்றல் முறைகளை மேற்கொள்வதற்கும் உள்ளூராட்சி கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை பணியமர்த்துமாறு அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள், வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

## உலகம் முழுவதும் இதுவரை....

வேகமாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஒமிக்ரோன் தொற்றால் அண்டை நாடுகள் தடுப்பூசிகளை தொடர்ந்து செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில், நேற்றுமுன்தினம் நிலவரப்படி உலகம் முழுவதும் 1,000 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாவும் அதில் 425 கோடி பேர் இரண்டு தவணை தடுப்பூசியும் எடுத்துக்கொண்டவர்கள் என்றும் அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது.

தற்போது உலகளவில் பாதிப்பில் முதலிடத்தில் இருக்கும் அமெரிக்காவில் கொரோனாவால் 7.43 கோடி பேர் பாதித்திருப்பதாகவும் 8.84 இலட்சம் பேர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியாவில் 4.1 கோடி பேர் கொரோனாவால் பாதிப்படைந்துள்ளனர். 4.97 இலட்சம் பேர் நோயின் தீவிரத்தில் பலியாகினர். மேலும், உலகம் முழுவதும் 53 சதவீத மக்கள் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தியுள்ளனர்.

## மேல் மாகாணத்தில் விசேட... (02ஆம் பக்கத் தொடர்)

சுதந்திர தின நிகழ்வுகளை முன்னிட்டு சமகாலத்தில் கொழும்பு நகர் உள்ளிட்ட மேல் மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்பு செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெப்ரவரி 4 ஆம் திகதி 21 வீதிகள் போக்குவரத்திற்காக மட்டுப்படுத்தப்படும் என்றும் அதற்கான செயற்திட்டமானது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் முன்னெடுக்கப் படும் என்றும் மாற்றுப் பாதைகளை உபயோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சுதந்திரதின விழாவுக்கு அழைக்கப்பட்டுள்ள விசேட அதிதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அழைப்பிதழில் இணைக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிட லேபிள்களுடன் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு வருகை தருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இம்முறை சுதந்திர தின விழாவில் இராணுவ அணிவகுப்புக்கு முன்பதாக 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படும் என்றும் விமானப்படையினரின் விமான சாகச கண்காட்சியும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## ஜே.வி.பி மீதான தாக்குதலுக்கு... (02ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர், ஆர்ப்பாட்டங்களுக்காக தனியான பிரதேசம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அரசியல் கட்சிகளுக்கு அதிகபட்ச சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்ததோடு, இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். இச்சம்பவம் குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண, அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்காக சிலர் இவ்வாறான சம்பவங்களை மேற்கொள்வதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். கம்பஹா, கலகெடிஹேன பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியினால் நடத்தப்பட்ட கூட்டத்தின் போது முட்டை வீசித் தாக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த தாக்குதல் தொடர்பில் அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவனம் மீதும் அமைச்சர் பிரசன்ன மீதும் ஜே.வி.பி குற்றஞ்சாட்டியிருந்தது. (பா)

# கொழும்பு-குருணாகல் வீதியில் முச்சக்கரவண்டி கோர விபத்து

## மூன்று பேர் உயிரிழப்பு

வரக்காபொலை தினகரன் நிருபர்



கொழும்பு குருணாகல் பிரதான வீதியின் வரக்காபொல துல்ஹிரிய பகுதியில் நேற்று பிற்பகல் (01) இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற 57 ஆம் வழி இலக்க இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டியுடன் எதிரே கொழும்பு நோக்கி வந்த முச்சக்கர வண்டி மோதுண்டதில் இருவர் ஸ்தலத்தில் பலியாகினர்.

27 வயதுடைய ஆண் ஒருவரும் 07 வயது சிறுவனும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். பேருவளை பகுதியை சேர்ந்த இவர்கள் கலாவெவ பகுதி திருமண வைபவம் ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் பேருவளை திரும்பும் வழியில் விபத்து நிகழ்ந்துள்ளது. சாரதிக்கு நித்தரை ஏற்பட்டதன் காரணமாக விபத்து நிகழ்ந்திருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். முச்சக்கர வண்டியில் 05 பேர் பயணித்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் வரக்காபொலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த மூவருள் ஒருவர் கொரோனா தொற்றுக்குட்பட்டவரென தெரிவிக்கப்படுகின்றது. வரக்காபொல பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய தூதுவர்கள் 09 பேர் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ் பத்திரங்கள் கையளிப்பு

இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள 07 பேர் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் இருவர், தமது நற்சான்றிதழ் பத்திரங்களை ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவிடம், ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று (01) பிற்பகல் கையளித்தனர். டென்மார்க், எஸ்டோனியா, பாகிஸ்தான், காம்பியா, கசகஸ்தான், பிலிப்பைன்ஸ், ஒஸ்ரியா, ஸ்லாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களும் உயர்ஸ்தானிகர்களுமே இவ்வாறு நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர்.

1. டென்மார்க் தூதுவர் ப்ரெட் ஸ்வேன் (Mr. Freddy Svane)
2. எஸ்டோனியா தூதுவர் கெட்ரின் கிவ் அம்மையார்(Ms. Katrin Kivi)
3. பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் ஃபாருக் பர்க்கி (Maj. Gen. (Retd.) Umar Farooq Burki)
4. காம்பியா உயர்ஸ்தானிகர் ஸ்தஃபா ஜவாரா (Mr. Mustapha Jawara)
5. கசகஸ்தான் தூதுவர் நூர்லன் ஸல்கஸ்பயெவ் (Mr. Nurlan Zhalgasbayev)
6. பிலிப்பைன்ஸ் தூதுவர் அலன்டெனிகா (Mr. Alan Deniega)
7. ஒஸ்ரியா தூதுவர் கெத்தரினா வைஸர் அம்மையார் (Ms. Katharina Wieser)
8. ஐஸ்லாந்து தூதுவர் கட்னி பிரகசன்
9. இஸ்ரேல் தூதுவர் நாஓர் கிலொன்(Mr. NaorGilon)

ஆகியோரே நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள்... (02ஆம் பக்கத் தொடர்)

பீ அன்ட் ஐ கம்பனியுடன் கலந்துரையாடப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கடல்வாழ் உயிரினங்களின் உடற்கூற்று மாதிரிகள் மற்றும் ஏனைய மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக வெளிநாட்டு ஆய்வு கூடங்களுக்கு அனுப்புவதாகவும், அவுஸ்திரேலியாவின் ஹெல்மோர் கம்பனியால் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கப்படுமெனவும் அவர் அமைச்சரவைக்கு அறிவித்தார். (பா)

## நுரைச்சோலை மின் பிறப்பாக்கி... (02ஆம் பக்கத் தொடர்)

ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேவேளை நுரைச்சோலை மின்சார மையத்தின் இந்த மூன்றாவது மின்பிறப்பாக்கி தமது செயற்பாடுகளை ஆரம்பித்த நிலையில், மின்சார விநியோகத் தடைமறு அறிவித்தல் வரை நடைமுறைப்படுத்தப்படாது என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது.

இந்தநிலையில் தற்போது குறித்த மின் பிறப்பாக்கி செயலிழந்துள்ள போதிலும் தமது அறிவித்தலை ஆணைக்குழு நேற்று மீண்டும் உறுதிப்படுத்தியது.

## அத்துமீறிய இந்திய மீனவர்கள்...

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் தமிழக படகுகளை சிறைபிடித்து தமிழக மீனவர்களை கைது செய்ய வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் நேற்று காலை முதல் சாலைகளில் படகுகளை நிறுத்தி மீனவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதனை தொடர்ந்து நேற்று முன்தினமிரவு யாழ். மீனவர்கள் எல்லை தாண்டி வந்துள்ள தமிழக மீனவர்களை சுற்றி வளைத்து சிறை பிடிக்க படகுகளுடன் கடலுக்குள் சென்றனர். இதன்போது வடமராட்சி கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்து கொண்டிருந்த நாகை மாவட்டத்தை சேர்ந்த இரண்டு படகையும் அதிலிருந்த 21 மீனவர்களையும் இலங்கை மீனவர்கள் சுற்றி வளைத்து சிறைபிடித்து மீனவர்களை கரைக்கு கொண்டு வர முயற்சி செய்தனர்.

இதன்போதே அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட இரண்டு படகையும் அதிலிருந்த 21 மீனவர்களையும் கைது செய்து மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து சென்றனர்.

தமிழக மீன்பிடி விசைப்படகுகளை நடுக்கடலில் வடமராட்சி மீனவர்கள் சுற்றிவளைத்ததால் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை நாகை மாவட்டம் வேதாரண்யம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் வந்திருந்தனர்.

மேலும் நடுக்கடலில் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் வந்த தமிழக படகை சுற்றிவளைக்கும் போது படகில் இருந்த தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்கள் மீது கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டு வீசி தாக்கியதாக இலங்கை மீனவர்கள் குற்றசாட்டியுள்ளனர்.

சிறைபிடிக்கப்பட்ட 21 மீனவர்களையும் இரண்டு படகையும் யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு பின் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறை முனை கடலில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய இழுவை வலைப் படகுகளை பிடிப்பதற்கு பிரதேசக் கடற்றொழிலாளர்முயற்சித்தமையினால்ஏற்பட்டபதற்றம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டின் காரணமாக கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது.

இந்திய இழுவை வலைப் படகுகளை அவதானித்ததும் பொறுமை இழந்த பிரதேச கடற்றொழிலாளர்கள், அவற்றை துரத்திச் சென்று கைப்பற்ற முயற்சித்தமையினால் இரு தரப்பினருக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது.

இவ் விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், உரிய இடத்துக்கு சென்ற கடற்றொழில் அமைச்சர், சம்பவ இடத்திற்கு கடற்படையினரை அனுப்பி வைத்ததுடன், கடற்றொழிலாளர்களையும் ஆறுதல்படுத்தி கரைக்கு திருப்பி அழைத்தார்.

இந்நிலையிலேயே கடற்படையினரால் இரண்டு இந்தியப் மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டதுடன் அதிலிருந்த 21 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கனவே, கடந்த 27ஆம் திகதி வத்திராயனிலிருந்து தொழிலுக்கு சென்ற இரண்டு கடற்றொழிலாளர்களின் சடலங்கள் நேற்று கரையொதுங்கியதையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரம் சுமுகமாக தீர்க்கப்படா விட்டால் இரண்டு நாட்டு கடற்றொழிலார்களும் நடுக் கடலில் மோதும் நிலை ஏற்படுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக தெரிவித்து வந்ததுடன் பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டு வரும் இவ்வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## குற்றச்சாட்டிலிருந்து...

செய்யப்பட்டுள்ளார். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை உள்ளடக்கி 50 இலட்சம் பஞ்சாங்கம் அச்சிடப்பட்டு பகிர்ந்தளித்ததாகவும் அதனால் திவிநெகும திணைக்களத்துக்கு இரண்டு கோடியே நாற்பத்தி ஆறு இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அந்த திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந் நிலையில் அவர்கள் இருவரையும் நேற்று கொழும்பு உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. நிதி அமைச்சர் உள்ளிட்ட இருவரையும் அனைத்து குற்றச்சாட்டுகளிலுமிருந்து விடுவித்து விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த நேற்று இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

தீர்ப்பை அறிவித்த பின்னர் கருத்து தெரிவித்த நீதிபதி,

இவ் வழக்கின் முறைப்பாடுகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சாட்சிகள் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஒப்புவிக்கத் தவறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வழக்கில் குற்றச்சாட்டுக்கிலக்காகியுள்ள பஞ்சாங்கம் அச்சடித்தல் மட்டும் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் முறையான ஒழுங்கு முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதற்கு செலவிட்டுள்ள நிதி திறைசேரியின் அனுமதியுடன் முறைப்படி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.

முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகள் மூலம் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஒப்புவிப்பதற்கு இம் முறைப்பாடுகள் தவறியுள்ள நிலையில் பிரதிவாதிகள் இருவரையும் விடுதலை செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நீதிமன்றத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏதாவது வெளிநாட்டுப் பயணங்கள் தடை செய்யப்பட்டிருந்தால் அதனை விலக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பிரதிவாதிகளின் பிணை நிதியையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஸ)

## தமிழ்க் கட்சிகளுடன் நல்லிணக்கத்தை...

ஜீ.எல்.பீரிஸ் மற்றும் அலி சப்ரி ஆகியோர் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு தொடர்பில் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரன,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் ஒன்று. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச அவர்களுக்கு உரிமையுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்து பேச முடியும். அதற்கு எந்தத் தடையும் கிடையாது.

அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் அலி சப்ரியும் யாழ்ப்பாணம் சென்ற போது பேச்சு நடத்துவது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தனர். நீண்டகாலமாக தீர்க்கப்படாத சில பிரச்சினைகள் உள்ளதை ஏற்கிறோம். ஜனாதிபதியும் அரசாங்கமும் இவற்றைப் பற்றி பேசித் தீர்க்க வேண்டுமென்பதில் வெளிப்படைப் போக்குடனுள்ளனர்.

அரசாங்கம் நல்லிணக்கத்துக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, தென்மாகாணத்தில் மாத்தறை மற்றும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா போன்ற மாவட்டங்களை மையமாகக் கொண்டு 04 நடமாடும் சேவைகள் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் இவ்வாண்டில் நடத்துவதற்கு நீதி அமைச்சு திட்டமிட்டுள்ளது. காணி, உத்தியோகபூர்வ ஆவணங்கள், சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கல், நீதி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும்கள உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டுவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 2022 ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டுள்ளது.

குறித்த நடமாடும் சேவைகள் வேலைத்திட்டம் தொடர்பாக அமைச்சரவைக்கு அமைச்சர் விளக்கமளித்தார்.

## பிரத்தியேக வகுப்புகளுக்கு...

பிரத்தியேக வகுப்புகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு நேற்று முதலாம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று தெரிவித்துள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன:

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரை பிரத்தியேக வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதற்கும் பரீட்சை தொடர்பான துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாவதுடன் எதிர்வரும் மார்ச் மாதம் நிறைவடையவுள்ளது.

இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு வைத்தியசாலைகளில் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் கல்வி நிர்வாகத்துடன் கலந்துரையாடி அந்தந்த பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளிலேயே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு பரீட்சை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இம்முறை ஒவ்வொரு பரீட்சை மத்திய நிலையத்திலும் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி தென்படும் மாணவர்களுக்கு தனியான வகுப்பறைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## வைரஸ் தொற்றின் நிரந்தரத் தீர்வுக்கு...

நூற்றாண்டு காலமாகப் பூமியில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த கோவிட் வைரஸ் செயற்கையாகப் பரவியது என்று பல கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள். ஆனால் வைரஸ் என்பது இயற்கையாகப் பல தடவைகள் எமது சந்ததியரின் காலங்களிலும் வந்திருக்கின்றது.

ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் பல சம்பவங்கள் உலகளாவிய தொற்றுக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

6ம் நூற்றாண்டில் கறுப்புக் காய்ச்சல் மூலம் கோடிக் கணக்கானவர்கள் இறந்துள்ளார்கள்.

அதேபோன்றொரு சம்பவம் 13ம் நூற்றாண்டில் பிளேக் வைரஸ் மூலம் தொற்று உருவாகி அதிலும் பலர் இறந்திருக்கின்றார்கள். உலகத்தின சனத்தொகையை அரைவாசியாக ஆக்கியிருக்கின்றது. அந்த கிருமிகளின் தொற்று. எச்.ஐ.வி, கோவிட் போன்ற பல தொற்று நோய்கள் உலகின் சனத்தொகையைக் காலத்திற்குக் காலம் குறைத்து வந்திருக்கின்றது.

அது இயற்கையின் நியதியாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தன் கோவிட் வைரசின் ஒரு திரிபான கோவிட் 19 ஆக உருவெடுத்துள்ளது.

இந்தக் கோவிட் 19இனால் இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இன்று வரை உலகத்தில் சுமார் 35 கோடி பேர் பாதிக்கப்பட்டும் 56 லட்சம் பேர் இறந்தும் இருக்கின்றார்கள்.

எமது நாட்டிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டும் பதினாறாயிரம் பேர்வரை இறந்தும் இருக்கின்றார்கள். இன்று பிளேக், கொளொரா, போலியோ, மஞ்சள் காய்ச்சல், பெரிய அம்மை போன்ற நோய்கள் உலகத்தில் இல்லை. இவற்றுக்கெல்லாம் பிரதானமாக அமைந்தது தடுப்பூசிகள்.

இந்தத் தடுப்பூசிகளின் வருகையே காலத்திற்குக் காலம் எம்மைத் தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. தடுப்பூசிகள் புதிதாக உருவாகிய விடயங்கள் அல்ல.

அந்த வகையில் இன்று இருக்கின்ற தொற்று நிலைமைகளை நாங்கள் சில நடைமுறைகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றோம் என்றார்.

# டெங்கு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த நால்வருக்கு வழக்குத் தாக்கல்

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம நகர எல்லைக்குள் டெங்கு பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 4 பேருக்கு எதிராக வழக்குத் தொடர வெலிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதியில் சுகாதார அதிகாரியால் மேற்கொண்ட சோதனையின் போதே இந்நான்கு பேரும் இனங்காணப்பட்டனர்.

வெலிகம பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டீ ஜயசேகரவின் பணிப்புரையின் பேரில் இச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் காரணமாகவே இச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு நீர்த் தேங்கி நிற்கும் இடங்களை இனங் கண்டு அவற்றை அகற்றி வருமாறு பொது மக்களை சுகாதார அதிகாரிகள் வேண்டிக் கொள்கின்றனர்.

# வைத்தியர் இல்லங்கள் நிர்மாணிக்க நடவடிக்கை

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள தள வைத்தியசாலைகளை கேந்திரமாகக் கொண்டு டாக்டர்களுக்குத் தேவையான உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பதவிய, கெக்கிராவ, மதவச்சி, கஹட்டகஸ்திகிலிய, தம்புத்தேகம ஆகிய தள வைத்தியசாலைகளை கேந்திரமாகக் கொண்டு உத்தியோகபூர்வ வைத்தியர் இல்லங்கள் அமையப் பெறவுள்ளதாக மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் பாலித்த பண்டார தெரிவித்துள்ளார்.

மாகாண நிதி உதவி திட்டத்தின் கீழ் இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 280 மில்லியன் ரூபா வரையான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் வழங்கிய ஆலோசனையின் பேரில் இவ் வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை கெசல்வத்தை பிரதேச

# பள்ளிவாசல் வளாக புனரமைப்புக்கு நிதி

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை பிரதேச சபையின் கெசல்வத்தை உப பிரிவைச் சேர்ந்த பழைமை வாய்ந்த இரண்டு ஜும்ஆப் பள்ளிவாசல்களின் நுழைவாயில், வாகனத் தரிப்பிடம் மற்றும் கால்வாய் கட்டமைப்பு என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பாணந்துறை பிரதேச சபைத் தலைவர் ஹேமந்த பெர்னாண்டோ மற்றும் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் அசார் மரிக்கார் மேற்கொண்ட முயற்சியினால் இத்திட்டத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினால் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டின் கீழ் ,இந்த வேலைத் திட்டத்தை துரிதமாக ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய வங்கி நிதியம் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் பணிப்பாளருக்கு இராஜாங்க அமைச்சினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் அசார் மரிக்கார் மேலும் தெரிவித்தார்.

# வெடிபொருட்களுடன் இளைஞன் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அனுமதிப்பத்திரமின்றி ஒரு தொகை வெடிபொருட்களை தம்வசம் வைத்திருந்த 27 வயது இளைஞனை பூனேவ பொலிசார் கைது செய்துள்ளனர்.

பூனேவ கிடவரம் குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே (30) கைது செய்யப்பட்டுள்ளவராவர்.

சந்தேக நபர் அனுமதிப்பத்திரமின்றி நாவக்குளம் பகுதியில் கற்பாறை குளியில் வெடிபொருட்களை மறைத்து வைத்திருப்பதாக பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொண்ட சோதனையின்போது வெடிபொருட்களுடன் இளைஞனை பொலிசார் கைது செய்துள்ளனர்.

28 டெட்டனேட்டர்கள் , 50 நூல் , 20 கிலோ அம்மோனியா மற்றும் எலக்ட்ரானிக் அல்லாத 23 டெட்டனேட்டர்களைம் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பூனேவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

**கடற்றொழில் அமைச்சு**

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

CEYFISH

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**

## பதவி வெற்றிடம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடர்புடைய பதவிகளுக்கான தகமைகள் மற்றும் இப்பதவி தொடர்பான மேலதிக தகவல்கள் www.cfc.gov.lk இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

1. **பிரதி பொது முகாமையாளர் (பொறியியளாலர்)** (HM 1-1)
2. **முறைமை நிர்வாகி** (JM 1-1)

விண்ணப்பத்தாரர் கல்வித்தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான விடயங்களை உள்ளடங்கிய சுயவிபர கோவையுடன் (CV) கல்வித்தகைமை மற்றும் அனுபவ சான்றிதழிலுடன் உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் தொலைப்பேசி இலக்கம் உட்பட அனைத்து விடயங்களும் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு **2022.02.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக** தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.
தொலைபேசி இல : 011 2 523689/ 011 2 540455
மின்னஞ்சல் : hr@cfc.gov.lk / it@cfc.gov.lk

---

## நுகேகொடையில் காணி விற்பனைக்கு

மேம்பாலத்திற்கண்மையில் 20 அடி காபட் இடப்பட்ட வீதியில் 35.44 பேர்ச் வர்த்தக நோக்கங்களிற்கு உகந்த காணி விற்பனைக்கு

**பேர்ச் ஒன்று 5.5 மில்லியன்**
(பேசித் தீர்மானிக்கப்படலாம்)

தரகர் வேண்டாம். உண்மையான கொள்வனவாளர்கள் மாத்திரம் அழைக்கவும்.

**072 4141770**

---

SLIATE

## அறிவித்தல்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு (SLIATE) 2021 கல்வியாண்டிற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான 2021 டிசம்பர் 31ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2022 ஜனவரி 02ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை அறிவித்தல் தொடர்பானது.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் இறுதித் தினம் 2022 பெப்ரவரி 14 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களிற்காக, தயவு செய்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) உத்தியோக இணையம் www.sliate.ac.lk அல்லது apply.sliate.ac.lk இற்குப் பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்**

---

திகதி 31.01.2022 **திங்கட்கிழமை** உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4664
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,998,150.00
ஆங்கில எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 7 1 8 5 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 35,804,240.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2959
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,986,340.00
ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 23 26 28 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,951,884.40

**Mega Power மெகா பவர்** கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம்: 1012 — மெகா அதிர்ஷ்ட இலக்கம்: 07818
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,888,380.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 202,315,674.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: F — சுப்பர் இலக்கம்: 24 — வெற்றி இலக்கங்கள்: 03 51 65 73

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 694
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,869,020.00
ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 36 43 72 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,997,533.20

**ஹந்தஹன** ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0005
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,558,560.00
இலக்கினம்: கும்பம் — வெற்றி இலக்கங்கள்: 09 19 24 33
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,540,476.20

**வாசனா சம்பத** Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் :1691
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,252,460.00
ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 04 30 43 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,470,282.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

---

# களனிப் பல்கலைக்கழகம்
## கேள்வி நீடிப்பு அறிவித்தல்

**பல்கலைக்கழக பரந்தளவு கம்பியற்ற வலையமைப்பை (Wide Wireless Network) வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் - களனிப் பல்கலைக்கழகம், தலுகம, களனி.**
**UK/GA/GA3/2021/55**

இந்த விளம்பரம் மேற்படி குறிப்பீட்டிலக்கத்திற்கு இயைபாக 2022 ஜனவரி 02ஆம் திகதிய வாரமஞ்சரி, சிலுமின மற்றும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகள் மற்றும் 2022 ஜனவரி 20ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பு தொடர்பானது.

1. மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கான அழைப்பின் திறத்தல் / முடிவுறுத்தல் திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.
   - அ. விலைக்கோரல் காலம் - 2022 ஜனவரி 03ஆம் திகதி முதல் 2022 பெப்ரவரி 16ஆம் திகதி வரை
   - ஆ. விலைமனுக்கள் முடிவுறுத்தல் / திறத்தல் - 2022 பெப்ரவரி 17ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு
   - இ. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் - 2022 மே 16ஆம் திகதி வரை
   - ஈ விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் - 2022 ஜுன் 15ஆம் திகதி வரை
2. விலைமனு ஆவணங்களுடன் பின்னிணைப்பு வெளியிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்த சகல விலைமனுதாரர்களுக்கும் அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
3. மேலும் மேற்படி விலைக்கோரலில் ஏதாவது மாற்றங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட்டால் அது களனி பல்கலைக்கழகத்தின் https://news.kln.ac.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக விலைமனுதாரர்களுக்கு அறியத் தரப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி.**
**தொலைபேசி: 0112903116/117, மின்னஞ்சல்: generaladmin@kln.ac.lk**

---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலை மனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக மேல் மாகாணத்தின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | RDA/DC/WP/IR-GOSL/2022/01 | எத்துல்கோட்டை அங்கம்பிட்டிய வீதியை இணைக்கும் இராஜகிரிய நாவல கால்வாய் குறுக்கே புதிய பாலம் வரை அணுகுச் சாலை மற்றும் நாவல இராஜகிரிய பள்ளி ஒழுங்கையினை நிர்மாணித்தல். | 337 | 4.5 | 105 |

2. இத்திட்டத்தில் வெளியேறும் நிலத்தை தோண்டுதல், கரை நிரப்புதல், அடித்தளம் மற்றும் அடித்தளம் அமைத்தல், நிலக்கீல் கொங்க்ரீட் மேலடுக்கு அமைத்தல், தற்செயலான பணிகள் உள்ளிட்ட கட்டமைப்புகளை நிர்மாணித்தல் ஆகிய பணிகள் அடங்கும்.

3. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

4. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் **(CIDA)** தரத்தில் **C1 அல்லது C2 தரத்தில் நெடுஞ்சாலைகள் கட்டுமானத்துறையில்** நிபுணத்துவத்திற்கு ஏற்ப பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2022.02.03** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

   அ). பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, மூன்றாம் மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
   தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821

6. மனு தொடர்பான கூட்டம் **2022.02.11** ஆந் திகதி **மு.ப.10.00** மணிக்கு பணிப்பாளர் (கட்டுமானம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, (தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821) Zoom தொழிநுட்பத்தினூடாக இடம்பெறும். தேவையேற்படின் உடனடியாக வேலைத்தளப் பரீட்சிப்பும் ஏற்பாடு செய்துத் தரப்படும்.

   முன்மனுக் கூட்டத்திற்கான Zoom தள இணைப்பு :

   **https://us04web.zoom.us/j/75885088910?pwd=SXLpRYj0Qgb1JhyAk4erW7dQA3FKeq.1**

   முன் மனுக்கூட்டத்திற்கான **ID** : **758 8508 8910**
   இரகசிய குறியீடு : **TaL2sN**

7. **ஒப்பந்த**த்திற்கான எழுத்துபூர்வமான விண்ணப்பம் மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய வெல்லுபடியாகும் இரசீது **(ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன ரசீதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்). மி**ன்னஞ்சல் மூலமாக பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகார சபையில் **2022.02.03** ஆம் திகதியிலிருந்து **2022..02.23** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் அனுப்புவதன் மூலமாக ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

   **மின்னஞ்சல் முகவரி : construction.rda@gmail.com**

   மீளச்செலுத்தப்படாத **ரூபா.37,800/-** (வட்வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

   **கணக்கின் பெயர்** : **பணிப்பாளர் நாயகம் - RDA**
   **கணக்கு இலக்கம்** : 0000001943
   **வங்கி** : **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை**

   மனுக்களை சமர்ப்பிக்கும்போது அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டுடன் சமர்ப்பித்து மனுக்களை பரிசிலனை செய்துக்கொள்ள முடியும். அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டு இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

   1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

8. அனைத்து மனுக்களும், **2022.07.20** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2022.02.24 ஆம் திகதி** 13.00 மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பணிப்பாளர், அமைச்சின் கொள்முதல் குழு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, கொள்முதல் பிரிவு, ஏழமலாம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரியில் கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. மனுக்கள் **2022.06.22** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
அமைச்சரவையின் கொள்முதல் குழு,
கொள்முதல் பிரிவு
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
ஏழாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# சர்வதேச செய்திகள்

## உலக சாதனை படைத்த மின்னல்



அமெரிக்காவில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற 768 கிலோமிற்றர் நீண்ட ஒற்றை மின்னல் வெட்டு புதிய உலக சாதனை படைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை நேற்று அறிவித்துள்ளது. 2020 ஏப்ரல் 29 ஆம் திகதி பதிவான அந்த மின்னல் மிசிசிப்பி, லுளசியான மற்றும் டெக்சாஸ் மாநிலங்கள் எங்கும் நீண்டு இருந்தது. இது இதுவரை அவதானிக்கப்பட்ட மீக நீண்ட மின்னலாக சாதனை படைத்துள்ளது. இது முந்தைய சாதனையான 2018 ஒக்டோபர் 31 ஆம் திகதி தெற்கு பிரேசிலில் பதிவான மின்னலை விட சுமார் 60 கிலோ மீற்றர் நீளமானதாக இருந்தது என்று ஐ.நாவின் உலக வானிலை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## ஜோன்சன் மன்னிப்பு



பிரிட்டனில் கொவிட்19 வைரஸ் தொற்றின் முடக்க நிலையின்போது எண் 10 டவுனிங் ஸ்ட்ரீட்டில் நடந்த கொண்டாட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணயில் பிரிட்டிஷ் தலைமைத்துவத்தில் குறைபாடு உள்ளது என்பது தெரிய வந்ததுள்ளது. அதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் மன்னிப்புக் கேட்டுள்ளார். தமது நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். இருப்பினும் அவரது பிரதமர் பதவிக்கு அவரின் சொந்த கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களிடம் இருந்து எதிர்ப்பு வரக்கூடும் என்று நம்பப்படுகிறது.

# உக்ரைன் பதற்றம்: பாதுகாப்பு சபையில் ரஷ்யா - அமெரிக்கா கடும் வாக்குவாதம்



உக்ரைனுடனான எல்லை பகுதியில் ரஷ்யா துருப்புகளை குவித்திருப்பது குறித்து அமெரிக்கா பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அழைப்பு விடுத்ததை அடுத்து அமெரிக்க மற்றும் ரஷ்ய பிரதிநிதிகளுக்கு இடையே பாதுகாப்புச் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த படைக் குவிப்பு பல தசாப்தங்களில் காணாத அளவுக்கு ஐரோப்பாவில் மிகப்பெரியதாக உள்ளது என்று ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் லின்டா தோமஸ் கிரீன்பீல்ட் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் அமெரிக்கா ஆத்திரத்தை தூண்டுவதாகவும் ரஷ்ய விவகாரத்தில் அது ஏற்றுக்கொள்ள முடியாத தலையீட்டை மேற்கொள்வதாகவும் ரஷ்ய தூதுவர் சாடினார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்புத் தொடுத்தால் ரஷ்யாவுக்கு எதிராக மேலும் தடைகளை விதிப்பதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உறுதி அளித்தன.

தற்போது சாத்தியமானதை விடவும் ரஷ்யாவுக்கு நெருக்கமான தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்களை பரந்த அளவில் இலக்கு வைத்த சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் லீஸ் ட்ரஸ் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுடன் நெருக்கமானவர்களை சர்வதேச நிதி அமைப்பில் இருந்து துண்டிப்பதாக அமெரிக்காவின் தடை அமையும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் எல்லைகளுக்கு அருகில் ரஷ்யா 100,000 துருப்புகள், பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகளை நிலைநிறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

மறுபுறம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கள் மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செய்கெய் லவ்ரோவுக்கு இடையே நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்ற நிலையில் இந்த பதற்ற சூழலை தணிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்தில், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது பற்றி எந்த ஆதாரமும் இல்லை என்றும் தமது துருப்புகள் குவிப்பது பற்றி ஐ.நாவினால் உறுதி செய்யப்படவில்லை என்றும் ரஷ்ய தூதுவர் வசிலி நெபன்சியா தெரிவித்துள்ளார்.

ரஷ்யா தனது சொந்த நிலத்தில் துருப்புகளை நிறுத்துவதாகவும் இது அமெரிக்காவின் பிரச்சினையல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐ.நாவில் திறந்த அமர்வு ஒன்றை நடத்துவதை தடுப்பதற்கு ரஷ்யா முயன்றபோதும் இது தொடர்பிலான வாக்கெடுப்பில் இரண்டுக்கு 10 வாக்குகளால் ஆதரவு கிடைத்தது.

பைடன் நிர்வாகம் பதற்றம் மற்றும் விவாதத்தை ஏற்படுத்தி மோதலை தூண்டுகிறது என்று நெபன்சியா கூறினார்.

"எமது நாட்டின் உள் விவகாரங்களில் ஏற்க முடியாத தலையீடாக இது உள்ளது. அதேபோன்று, பிராந்தியத்தின் உண்மையான நிலைமை பற்றி சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடத்தும் முயற்சியாக இது இருப்பதோடு தற்போதைய சர்வதேச பதற்றத்திற்கு காரணமாகவும் இது உள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு இராஜதந்திர தீர்வு ஒன்று இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து நம்புவதாக கூறிய தோமஸ் கிரீன்பீல்ட், ரஷ்யா உக்ரைன் மீது ஆக்கிரமிப்பு தொடுத்தால் அமெரிக்கா தீர்க்கமாக செயற்படும் என்றும் அது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார்.

"ஐரோப்பாவில் கடந்த பல தசாப்தங்களில் இடம்பெற்ற மிகப் பெரிய படை குவிப்பாக இது உள்ளது. நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் கூட ரஷ்யா அவர்களுடன் இணைய மேலும் படைகள் மற்றும் ஆயுதங்களை அனுப்பி வருகிறது" என்று அவர் பாதுகாப்புச் சபையில் கூறினார்.

உக்ரைனின் வடக்கு எல்லையில் உள்ள அண்டை நாடான பெலாரஸில் தனது படைகளை 30,000 ஆக அதிகரிக்கவும் ரஷ்யா திட்டமிட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் அசாதாரண படை குவிப்பு தொடர்பான கவலையை காரணமாகக் கூறி பெலாரஸில் உள்ள அமெரிக்க அரச பணியாளர்களின் குடும்பத்தினரை வெளியேறும்படி அமெரிக்கா கடந்த திங்களன்று உத்தரவிட்டது. இதற்கு முன்னர் இதேபோன்ற உத்தரவு உக்ரைனில் இருக்கும் அமெரிக்க தூதரக பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் நேட்டோ கூட்டணியில் ஒருபோதும் இணையாது என்ற உத்தரவாதத்தை ரஷ்யா மேற்குலகத்திடம் இருந்து கோருகிறது. எனினும் அமெரிக்கா இந்தக் கோரிக்கையை நிராகரித்தது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட 30 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட நேட்டோ அமைப்பில், ரஷ்ய எல்லையில் இருக்கும் முன்னாள் சோவியட் குடியரசுகளான லிதுவேனியா, லத்வியா மற்றும் எஸ்தோனியா நாடுகளும் இடம்பெற்றுள்ளன. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ துருப்புகள் தமது பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தலாக இருப்பதாக ரஷ்யா கருதுகிறது.

கிழக்கு பிராந்தியத்தை நோக்கி நோட்டோவை விரிவுபடுத்துவதில்லை என்ற 1990இன் வாக்குறுதியை அமெரிக்கா மீறி இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குறிப்பிடுகிறார்.

## பாக்: தாய், சகோதரர்களை கொன்ற இளைஞன் கைது



'வீடியோ கேம்' விளையாட்டு ஒன்றில் அடிமையானதாகக் கூறும் பாகிஸ்தான் பதின்ம வயது இளைஞர் ஒருவர் தனது தாய், சகோதரர் மற்றும் இரு சகோதரிகளை கொன்றுள்ளார்.

பணிப்பெண் ஒருவர் உடல்களை கண்டுபிடித்ததை அடுத்தே லாஹூரைச் சேர்ந்த 17 வயது செயின் அலி என்ற அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒன்லைன் விளையாட்டுக் காரணமாக அந்த இளைஞர் மனநல பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது குடும்பத்தைக் கொன்ற அந்த இளைஞன், வீடியோ கேம் போன்று தனது இலக்கை எட்டியதும் அவர்கள் உயிருடன் திரும்பிவிடுவார்கள் என்று நம்பியதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பப்ஜி என்ற விளையாட்டுக்கே அந்த இளைஞன் அடிமையாகியுள்ளார்.

## ஈக்வடோர் தலைநகரில் வெள்ளம்: 11 பேர் பலி



ஈக்வடோர் தலைநகர் குவிடோவில் ஏற்பட்ட பயங்கர வெள்ளத்தில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு லா கஸ்கா மாவட்டத்தில் மலைப்பாங்கான வீதி ஒன்றில் இருந்து பெருக்கெடுத்து ஓடிய சேற்று நீர் மற்றும் இடிபாடுகளில் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இழுத்துச் செல்லப்படுவது வீடியோ காட்சி ஒன்றில் பதிவாகியுள்ளது.

இதில் 15 பேர் காயமடைந்திருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தலைநகரில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட கடும் மழையை அடுத்தே இந்த வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

அவசரசேவை பணியாளர்கள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மாலிக்கான பிரான்ஸ் தூதுவர் வெளியேற்றம்



பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் மாலி இடைக்கால அரசு தொடர்பில் ஆத்திரமூட்டும் கருத்தை வெளியிட்டதாகக் கூறி, பிரான்ஸ் தூதுவரை மாலி இராணுவத் தலைவர்கள் வெளியேற்றியுள்ளனர்.

தூதுவரான ஜேவேல் மெயர் வெளியேற 72 மணி நேர கெடு விதிக்கப்பட்டதை அடுத்து அவர் திரும்ப அழைக்கப்பட்டதாக பிரான்ஸ் குறிப்பிட்டுள்ளது. பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜீன் யிவேஸ் லேட்ரியன் கடந்த வாரம் வெளியிட்ட கருத்தில், மாலி இராணுவ அரசு சட்டவிரோதமானது என்றும் அது கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். முன்னாள் பிரான்ஸ் காலனியான மாலியில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது பற்றியும் மேற்குலக சக்திகள் கவலை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலின் மீது மன்னிப்புச் சபை 'இன அடக்குமுறை' குற்றச்சாட்டு



இஸ்ரேலிலும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலிய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் இன அடக்குமுறையை கொண்டிருப்பதாக சர்வதேச மன்னிச் சபை குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய யூதர்களின் நலனுக்காக பலஸ்தீன மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற, ஒடுக்குகின்ற நிறுவனமயமான அரசு ஒன்றாக இஸ்ரேலிய அரசு செயற்படுவதாக வெளியாகியுள்ள பதிய அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இன அடக்குமுறை சர்வதேச சட்டத்தின் கீழ் மனித குலத்திற்கு எதிரான ஒரு குற்றமாக கருதப்படுகிறது.

மன்னிப்புச் சபையால் நேற்று வெளியிடப்பட்ட 25 பக்க அறிக்கையில் பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் முன்னெடுக்கும் திட்டமிட்ட ஒடுக்குமுறைகள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் பலஸ்தீன நிலங்கள் மற்றும் சொத்துகளை கைப்பற்றுவது, சட்டவிரோதக் கொலைகள், வலுக்கட்டாய இடமாற்றங்கள், நடமாட்ட கட்டுப்பாடுகள், நிர்வாகத் தடுப்புக் காவல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு தேசியம் மற்றும் பிரஜா உரிமையை மறுப்பது உட்பட இஸ்ரேல் மேற்கொள்ளும் பரந்த அளவிலான விசாரணை பட்டியலை அந்த உரிமைக் குழு வெளியிட்டுள்ளது.

"மனித குலத்திற்கு எதிரான குற்றம் ஒன்றாக சர்வதேச மன்னிப்புச்சபை கருதும் இன ஒடுக்குமுறையை பேணும் முறையாக இது உள்ளது" என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

"1948 இல் இஸ்ரேல் நிறுவப்பட்டது தொடக்கம் யூதப் பெரும்பான்மை ஒன்றை நிறுவுவது மற்றும் பேணும் கொள்கையையே அது செயற்படுத்தி வருகிறது" என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது விரிவான ஆயுதத் தடை ஒன்றை விதிக்கும்படி ஐ.நா பாதுகாப்புச் சபையை கோரும் மன்னிப்புச் சபை, சொத்தை முடக்குதல், இஸ்ரேல் அதிகாரிகளை இலக்கு வைத்து தடைகளை விதிக்கும்படியும் வலியுறுத்துகிறது. எனினும் இந்த அறிக்கையில் உள்ள அனைத்து பொய்யான குற்றச்சாட்டுகளையும் முழுமையாக மறுப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

## கனடிய பிரதமருக்கு கொவிட்–19 தொற்று



கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொவிட்–19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் தமக்கு அறிகுறிகள் ஏதுமில்லை என்றும் தாம் உடல் நலனுடன் இருப்பதாகவும் அவர் அறிக்கையில் தெரிவித்தார்.

கொவிட்–19 பொது சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வீட்டிலிருந்து பணியில் ஈடுபடப்போவதாக அவர் கூறினார். ட்ரூடோவின் பிள்ளைகளில் ஒருவருக்கு கடந்த வாரம் தொற்று ஏற்பட்டது. அதையடுத்து அவர் தம்மைத் தனிமைப்படுத்திக்கொண்டார்.

வரும் திங்கட்கிழமை, குளிர்கால ஓய்வுக்குப் பின்னர் கனடிய பாராளுமன்றம் கூடும். அதில் இணையம் வழியாகக் கலந்துகொள்ளத் திட்டமிட்டுள்ளார் ட்ரூடோ.

கனடிய அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி உட்பட பலருக்கு அண்மைய மாதங்களில் வைரஸ் தொற்று ஏற்பட்டது.

## ஈரானில் பெண் சிங்கம் அடித்துக் காவலர் பலி



மத்திய ஈரானில் உள்ள மிருகக்காட்சி சாலை ஒன்றில் பெண் சிங்கம் ஒன்று காவலரை அடித்துக் கொன்றுள்ளது.

தலைநகர் தெஹ்ரானில் இருந்து தொற்காக 280 கிலோ மிற்றர் தொலைவில் இருக்கும் அரக் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றதாக இர்னா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து அந்த சிங்கம் மற்றொரு சிங்கத்துடன் கூண்டை விட்டு தப்பி பல மணி நேரம் மிருகக்காட்சி சாலைக்குள் சுற்றித்திருந்துள்ளது. இதனை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார், தீயணைப்பு படையினர் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் அந்த சிங்கங்களை பிடித்துள்ளனர். 40 வயதான அந்த காவலர் சிங்கங்களுக்கு உணவு வழங்க சென்றபோதே தாக்கப்பட்டுள்ளார்.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான




திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13


## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் 1 மணி நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**


1. அடுத்து வரும் உருவைத் தெரிக.





i. ii. iii.

2. வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக.



i. ii. iii.

3. வெற்றிடத்துக்கு வரவேண்டிய இலக்கங்கள்

```
 3 6 ......
 2 3 ......
 5 9 7
```

i. 5 / 2 ii. 4 / 4 iii. 9 / 2

4. 1, 2, 4, 8, …... அடுத்து வரும் எண் யாது?
i. 12 ii. 16 iii. 18

5. கிலோகிராம் கிராமில் தருக.
5730 kg = ……………………….
i. 5 kg 700 g ii. 57 kg 30 g iii. 5 kg 730 g

6. பின்வரும் வடிவங்களுள் இரண்டு சமச்சீர் அச்சுக்களை கொண்ட உரு எது?



i. ii. iii.

7. 500g தேயிலையின் விலை ரூ. 320.00. ரவி 250g தேயிலை பெக்கற்றுகள் மூன்று வாங்கினான். அவன் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
i. ரூ. 160.00 ii. ரூ. 380.00 iii. ரூ. 480.00

8. ஒரு போத்தலில் பழச்சாற்றின் அளவு 2*l* 250ml மற்றுமொரு போத்தலிலுள்ள பழச்சாறு 1*l* 750 ml மொத்தமாக இரண்டு பழச்சாறு போத்தலிலுள்ள பழச்சாற்றின் அளவு யாது?
i. 3*l* 750 ml ii. 4 *l* 250 ml iii. 4*l*


9. 


இத்திண்ம உருவின் பெயர் யாது?
i. நான்முகி
ii. சதுரமுகி
iii. கனவுரு

10. 26 என்ற எண்ணிலிருந்து 20ஐக் கழித்து வருகின்ற எண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதினால்
i. IV ii. VI iii. VII

11. ஒருவருக்கு நான்கு மாம்பழங்கள் வீதம் 48 மாம்பழங்களை எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?
i. 8 ii. 10 iii. 12

12. ரூபாய் 460ல் உள்ள 20 ரூபாய்களின் எண்ணிக்கை
i. 23 ii. 20 iii. 26

13.  18

 28

 பெறுமதி யாது?

i. 10 ii. 5 iii. 4


14. 7030 இதனை சொற்களில் எழுதினால்
i. எழுநூற்று முப்பது
ii. எழாயிரத்து முப்பது
iii. ஏழாயிரத்து மூன்று

15. 8465 என்ற எண்ணில் இலக்கம் 6ன் பெறுமானம்
i. 600 ii. 6 iii. 60

16. பையொன்றில் இருக்கும் மாபிள்களின் எண்ணிக்கை 1,237 அதனுள் இன்னும் 230 மாபிள்களை இட்டால் மொத்த மாபிள்கள் எத்தனை?
i. 1467 ii. 3537 iii. 1460


17. 40003 ன் முந்திய எண் யாது?
i. 40004 ii. 40002 iii. 40013

18. ஒரு மாணவனுக்கு 200m ஓட 3 நிமிடங்கள் எடுத்தது. அதே வேகத்தில் அவன் 1000m ஓடுவானாயின் எவ்வளவு நேரம் தேவை?
i. 10 நிமிடங்கள் ii. 12 நிமிடங்கள் iii. 15 நிமிடங்கள்

19. 


இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 7 iii. 8

20. அடைப்புக்குள் இருக்கும் இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது பெறப்படும் உரு.



i. E H ii. ƎП iii. ШH

இத்தரவுகளைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



(10ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(09 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

21.  இன் பெறுமானம் யாது?

i. 5 ii. 9 iii. 4

22.  இன் பெறுமானம் யாது?

i. 8 ii. 5 iii. 7

23.  இன் பெறுமானம் யாது?

i. 1 ii. 2 iii. 3

24. சமபக்க முக்கோணம் ஒன்றின் இரண்டு பக்கங்களின் கூட்டுத்தொகை 14cm எனில் அதன் 3 பக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

i. 28 cm ii. 21 cm iii. 21 m

25. **X** என்ற உரோமன் எண்ணுக்கு அடுத்துவரும் உரோமன் எண் யாது?

i. XII ii. I X iii. XI

26. பொருளொன்றினை வாங்கி ரூபாய் 250.00 கொடுத்து மிகுதிப்பணமாக ரூ. 25.00 பெற்றுக் கொண்டால் பொருளின் விலை யாது?

i. ரூ. 220.00 ii. ரூ. 210.00 iii. ரூ. 225.00

27. ஒரு புத்தகம் ஒன்றின் விலை ரூபாய் 120.00. அதுபோல் மூன்று புத்தகங்கள் வாங்க வேண்டுமாயின் எவ்வளவு பணம் தேவை?

i. ரூ.360.00 ii. ரூ. 240.00 iii. ரூ. 320.00

28. ஒரு கூடையிலுள்ள வாழைப்பழங்களில் 2/3 பங்கு விற்கப்பட்டது. விற்கப்பட்ட தொகை 160 வாழைப்பழங்கள் எனில் மிகுதியாக உள்ள பழங்கள் எவ்வளவு?

i. ரூ. 60.00 ii. ரூ. 80.00 iii. ரூ. 120.00

29. ஒரு எண்ணும் அதன் 5 மடங்கும் 36 எனில் அந்த எண் யாது?

i. 6 ii. 8 iii. 4

30. ஒரு கூம்பகத்தின் மேற்பகுதியில் கிடையாக வெட்டினால் வெட்டப்பட்ட பகுதியின் தோற்றம்

i. முக்கோணம் ii. சதுரம் iii. வட்டம்

31. ரவி காலையில் வானவில் கிழக்கு திசையில் தோன்றியதாக கூறினான். இக்கூற்று பிழை என்பதற்குரிய காரணம்

i. காலையில் சூரியன் கிழக்கில் இருக்கும் என்பதால்

ii. காலையில் மழை பெய்ததால்

iii. சூரியன் இருக்கும் திசையில் வானவில் தோன்றும் என்பதால்

32. சுவர் ஒன்றுக்கு வர்ணம் பூச ஒருவருக்கு 7 மணித்தியாலங்கள் எடுக்கும். அதுபோல் 7 பேர் அச்சுவருக்கு வர்ணம் பூசுவதாயின் எவ்வளவு நேரம் எடுக்கும்?

i. இரண்டு மணித்தியாலம்

ii. ஒரு மணித்தியாலம்

iii. மூன்று மணித்தியாலம்

33. மகரகம எனும் சொல் இரகசிய குறியீட்டின் மூலம் எழுதப்பட்டுள்ள விதம் யாது?

i. LIRLI ii. LRILI iii. LIRIL

34. **3 2 4 5 4 2 5 3 4** இந்த இலக்க வரிசையில் நடுவிலுள்ள இலக்கம் யாது?

i. 2 ii. 3 iii. 4

35. 6 m இல் எத்தனை 50 cm உள்ளது?

i. 8 ii. 12 iii. 14

36. 1 kg உருளைக்கிழங்கு ரூ. 300.00 எனில் 2.5 kg உருளைக்கிழங்கின் விலை என்ன?

i. ரூ. 750.00 ii. ரூ. 600.00 iii. ரூ.550.00

37. **கரும்புச்சாறு** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய சொல்

i. புகழ் ii. பாம்பு iii. கம்பு

38. 1 தொடக்கம் 20 வரை எழுதும் போது இலக்கம் 2 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

i. 2 ii. 3 iii. 4

39. 2020ம் ஆண்டில் ஜனவரி முதலாம் திகதி புதன்கிழமை எனில் அவ்வருடத்தின் ஜனவரி 31ம் திகதி என்ன கிழமை?

i. திங்கட் கிழமை

ii. செவ்வாய்க்கிழமை

iii. வெள்ளிக்கிழமை

40. பின்வரும் எண் தொகுதியில் இரட்டை எண்களை மட்டும் கொண்ட தொகுதி எது?

i. 16, 28, 57, 60

ii. 18, 34, 46, 50

iii. 14, 33, 44, 60

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (12.01.2022)

I. 1) திராட்சைப்பழங்கள்
2) அங்குமிங்கும்
3) தந்திரமான
4) குலைகுலையாக
5) நரி
6) 1) வனத்திலே
2) பார்த்தது
7) துயரத்துடன்

II. 8) துள்ளித் துள்ளி
9) ஓடியாடி
10) கடகட

III. 11) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
12) போகவிட்டு புறஞ்சொல்லி திரிய வேண்டாம்

13) 1) எனது அண்ணா பாட்டு பாடினான்.
2) அவரது மருமகன் கண்டியில் வசிக்கின்றான்.

14) 1) சரி
2) பிழை

15) 1) நான் புத்தகத்தை வாங்குகிறேன்
2) அவர்கள் சந்தைக்கு செல்கிறார்கள்

16) பூக்கள்

17) 1) இலங்கை மின்சார சபை
2) கிறிஸ்துவுக்கு முன்

18) 1) Peacock
2) Brinjal
3) நான் இலங்கையில் வாழ்கிறேன்.

19) 1) சுப அலுத் அவுருதக்
2) மம எலியட யன்னத?

20) 1) மரம் + கொத்தி
2) கல் + பாறை

21) 3/8

22) 1) 9000
2) நூறு

23) 2196

24) 1) 2
2) 3
3) 5

25) 00 : 00
26) 12
27) 43
28) 90 km
29) 2613
30) 3
31) 3
32) 3
33) 2
34) 1
35) 3
36) 3
37) 2
38) 3
39) 1
40) 2
41) 1
42) 1
43) 2
44) 1
45) 3
46) 1
47) 3
48) 2
49) 3
50) 1
51) 3
52) 2
53) 1
54) 2
55) 1
56) 1
57) 1
58) 2
59) 1
60) "நான் ஒரு அழகிய கிளி" என்ற தலைப்பில் கருத்துப்புலப்பட எழுவாய் பயனிலை இடைத்தொடர்புடைய 3 வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு குறையாமலே இருக்க வேண்டும்.

## எதிர்ப்பாற் சொற்கள்

★ காவற்காரன் - காவல்காரி
★ கணவன் - மனைவி
★ கிழவன் - கிழவி
★ குமரன் - குமரி
★ குயவன் - குயத்தி
★ குறவன் - குறத்தி
★ கூலிக்காரன் - கூலிக்காரி
★ சங்கரன் - சங்கரி
★ சகோதரன் - சகோதரி
★ சிற்றப்பன் - சின்னம்மை
★ சிறுவன் - சிறுமி
★ சீமான் - சீமாட்டி
★ சுந்தரன் - சுந்தரி
★ செல்வன் - செல்வி
★ செம்படவன் - செம்படத்தி
★ சேவகன் - சேவகி
★ ஞானவான் - ஞானவதி
★ தந்தை - தாய்
★ தபுதாரன் - விதவை
★ தம்பி - தங்கை
★ தலைவன் - தலைவி
★ தனவான் - தனவதி
★ தர்மவான் - தர்மவதி
★ தனயன் - தனயை
★ திருவாளன் - திருவாட்டி
★ தேவராளன் - தேவராட்டி
★ தேவன் - தேவி
★ தோழன் - தோழி
★ நடிகன் - நடிகை
★ நம்பி - நங்கை
★ நல்லவன் - நல்லவள்
★ நாட்டியக்காரன் - நாட்டியக்காரி
★ நாயகன் - நாயகி
★ நிபுணன் - நிபுணை
★ பணக்காரன் - பணக்காரி
★ பாட்டன் - பாட்டி
★ பாடகன் - பாடகி
★ பாக்கியவான் - பாக்கியவதி
★ பாங்கன் - பாங்கி
★ பாணன் - பாடினி
★ பாதகன் - பாடகி
★ பாலகன் - பாடகி
★ பிரான் - பிராட்டி
★ பிரியன் - பிரியை
★ பிதா - மாதா

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி 2
புதன்கிழமை

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து வடக்கில் தொடரும் போராட்டங்கள்




**நாகர்கோவில் விஷேட நிருபர் , பருத்தித்துறை விசேட, யாழ். நிருபர்**

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து வடக்கில் பல இடங்களிலும் போராட்டங்கள் அண்மைக்காலமாக தொடர்ந்த வண்ணமே உள்ளன.



அந்தவகையில் யாழ்.வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் கடல் தொழிலுக்கு சென்ற நிலையில் இந்திய இழுவைப் படகுகளினால் மோதி உயிரிழந்ததாக கூறப்படும் இரண்டு மீனவர்களின் மரணத்திற்கும் நீதிகோரி மருதங்கேணி பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டும், மருதங்கேணி தாளையடி பிரதான வீதியை மறித்தும் மீனவர்கள் பாரிய கண்டனப் போராட்டத்தை மேற்கொண்டனர். நேற்று செவ்வாய்க்கிழமை(01) காலை இப்போராட்டம் இடம்பெற்றது.






கடந்த 27 ஆம் திகதி வியாழக் கிழமை கடலுக்கு சென்ற வத்திராயன் பகுதியைச் சேர்ந்த பிரேம்குமார் மற்றும் தணிகைமாறன் ஆகிய இரண்டு மீனவர்கள் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை(31) அவர்களது சடலங்கள் ஆழியவளை கடற்கரையில் கரை ஒதுங்கின.



அவர்கள் இருவரும் இந்திய இழுவைப் படகுகளினால் மோதி உயிரிழந்ததாக தெரிவித்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை(01) மருதங்கேணி பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர். பிரதேச செயலகத்திற்குள் அதிகாரிகள் செல்லாதவாறு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டதுடன், மருதங்கேணி தாளையடி பிரதான வீதியையும் மறித்து நடுவீதியில் அமர்ந்து கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்களை சந்தித்த மருதங்கேணி பிரதேச செயலர் மேலதிகாரிகளிடம் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தருவதாக தெரிவித்தார். ஆனால் அதை ஏற்றுக் கொள்ள மறுத்த போராட்டக்காரர்கள் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரோ அமைச்சரோ இதற்கு வாக்குறுதி தந்தால் மட்டுமே இப்போராட்டத்தை நிறுத்துவதாகவும் இல்லாவிடில் இப்போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

இந்நிலையில் நண்பகல் அளவில் அப்பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்தார். அவர் மீனவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது தான் ஜனாதிபதியுடன் இது தொடர்பில் பேசி இருப்பதாகவும் நேற்றைய தினம் இடம்பெற்ற பாதுகாப்பு கூட்டமொன்றிலும் அத்துமீறும் படகுகளை பிடிக்குமாறு கடற்படையினருக்கு தான் கட்டளை பிறப்பிப்பதாக ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக கடற்தொழில் அமைச்சர் மீனவர்களிடம் தெரிவித்தார்.

எனினும் 'இழுவைப்படகுகள் வராது. வந்தால் நானும் இங்கு வாறேன் போய் பிடிப்போம்' எனக் கூறினார்.

உயிரிழந்த மீனவர்களின் இறுதி கிரியைகளை செய்து முடிப்பதற்காக இப்போராட்டம் நண்பகல் நிறுத்திக் கொள்ளப்பட்டது.

மேலும் அவர்களது இறுதிக் கிரியைகள் நிறைவு பெற்றதும் கடற்தொழிற்சங்கங்களுடனும், விளையாட்டு கழகங்களுடனும் கலந்துரையாடி பெரிய அளவில் கண்டனப் போராட்டம் ஏற்பாடு செய்யப்படும் என கடற்தொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில்

யாழ்ப்பாணம் பலாலி, வலளாய் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பருத்தித்துறை பொன்னாலை வீதியின் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்கள் வீதிகளின் குறுக்கே படகுகள் மற்றும் வலைகளை போட்டு தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வட்டுவாகல் பாலம்

# போக்குவரத்து பொலிஸாரை பணியில் ஈடுபடுத்தவும்



**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் போக்குவரத்து பொலிஸாரை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.ஹஜிதரன் தெரிவித்துள்ளார். தற்போது வட்டுவாகல் பாலம் சேதமடைந்துள்ளமையால் வாகனங்கள் பயணம் செய்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை போக்குவரத்து பொலிஸார் பணியில் ஈடுபடுவதன் மூலம் வாகன நெருக்கடியினை கட்டுப்படுத்தலாம். பாலத்தின் இரு பகுதியிலும் கடற்படையினரும் இராணுவத்தினரும் நிலைகொண்டுள்ளனர். இப்படையினர் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவ வேண்டும். இதன்மூலம் இப்பாலத்தில் விபத்துகளை தவிர்க்கலாம். இதனை விட கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படாமல் உள்ளது. இப்பாலத்தினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சேதமடைந்த பாலத்தினால் தற்போது விபத்துகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

# ஐ.நா மனித உரிமைகள் பேரவை அறிக்கை கடுமையாகவிருக்கும்

**யாழ். விசேட நிருபர்**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை இம்முறை கடுமையானதாகவிருக்கும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருடனான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் விடயங்கள் உரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பில் பேசியுள்ளோம். 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கை தொடர்பாகவும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக நேர்மாறாக நடைபெறுகின்ற விடயம் தொடர்பில் பேசியுள்ளோம்



இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை அதனை தடுக்காமல் அலட்சியமாக செயற்படுவது தொடர்பாகவும் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண்களுக்கு வரும் மோசமான பழிவாங்கல் சம்பந்தமாகவும் தெரிவித்துள்ளோம்.

தென்னிலங்கை சூழல் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் உரிமைமீறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் அவருக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அமைதியாக அனைத்தையும் உள்வாங்கிய அம்மையாரிடம் கடந்த அறிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தோம்.

அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்ததால் அவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்க வேண்டும் என சொல்லியிருந்தார். ஆனால் இம்முறை அறிக்கை கடுமையானதாகவிருக்கும் என கூறியிருந்தார்.

# நெடுந்தூர பஸ்சேவைகள் தொடர்பில் தனியார் முடிவுகளை எடுக்கக்கூடாது

ஸ்ரீ லங்கா தேசிய சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழில் புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பயணிகள் பஸ் நிலையத்தில் சேவை வழங்குவது தொடர்பில் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்களின் முடிவின்றி தனிப்பட்டவர்கள் முடிவுகளை எடுக்கக் கூடாது என ஸ்ரீ லங்கா தேசிய சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு தனியான பஸ் நிலையம் காணப்படுகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பயணிகள் பஸ் நிலையம் தனியாருக்காக அமைக்கப்பட்டது. ஏனெனில் பஸ் தரிப்பிடம் இன்றி வீதிகளில் நிற்கின்றனர். இவ்வாறம் யாழ் ஊடக அமையத்தில் புதிய பேருந்து நிலையத்தில் சேவையை வழங்குவது தொடர்பில் பதிவு செய்யப்படாத தொழிற்சங்கம் ஒன்று கருத்து வெளியிட்டதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தீவிரம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு நாட்களில் மாத்திரம் பி.சி.ஆர் பரிசோதனை செய்தவர்களில் 200 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 50 பேர் மாணவர்களாக காணப்படுகின்றனர். 16 வயதுக்குட்பட்டவர்கள் 43 பேரும் உள்ளடங்குகின்றனர்.

அத்தோடு இரண்டு கர்ப்பிணித் தாய்மாரும் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது தொற்று பரவும் வேகம் அதிகமாக காணப்படுகின்றமையால் பொது மக்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை கடைபிடித்து செயற்பட வேண்டும்.

தடுப்பூசி, பூஸ்டர் தடுப்பூசி செலுத்தாதவர்கள் அவற்றை தவறாது செலுத்திக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.





ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய நகர் கிராமத்தை சேர்ந்த யுவதி கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டையில் தங்கப்பதக்கம் பெற்று வெற்றியடைந்தமையை முன்னிட்டு அவரை கௌரவிக்கும் நிகழ்வுகள் பல இடங்களிலும் இடம்பெற்றுவருகின்றன. அந்தவகையில் கரிப்பட்ட முறிப்பு புதியநகர் கிராமத்தில் இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாட்டில் கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது. அத்துடன் இன்னுமொரு கௌரவிப்பு நிகழ்வொன்று கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, 642 ஆவது படைப்பிரிவு என்பன இணைந்து நடத்திய கௌரவிப்பு நிகழ்வொன்று பாடசாலை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

# காய்ச்சல் காரணமாக பல்கலை மாணவி உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவர் அனுமதிக்கப்பட்ட போது பெறப்பட்ட குருதி மாதிரியை பரிசோதனைக்கு உட்படுத்தி டெங்கு காரணமாக உயிரிழந்தாரா என்பது தொடர்பில் கண்டறியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இணுவில் மேற்கைச் சேர்ந்த சிவகரநாதன் திவாகரி (வயது 23) என்ற சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவியே உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக ஞாயிற்றுக்கிழமை அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.




# மின்உற்பத்தி இடைநிறுத்தத்தை தடுக்கவே சுரங்க பாதை திருத்தப்பணிகள்



**ஹற்றன் விசேட நிருபர்**

நாட்டின் மின் உற்பத்தியினை சீர்குலைப்பதற்காக மவுசாகலை நீர்த்தேக்கத்தில் நீர் விடுக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களிலும் ஒரு சில தேசிய ஊடகங்களிலும் வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் கிடையாது என மின்சாரசபை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மவுசாகலை நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக வினவிய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது மின் உற்பத்திக்காக நீரை கொண்டு செல்லும் சுரங்கவழி பாதையில் சீர்திருத்த நடவடிக்கை காரணமாக மின் உற்பத்தியினை இடைநிறுத்தாது தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காகவுமே மவுசாகலை நீர்த்தேகத்தில் நீர் விடுவிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய மின் உற்பத்திக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் மவுசாகலை நீர்த்தேக்கத்திலிருந்து சுரங்க பாதை வழியாக நீரினை கொண்டு சென்று கெனியோன் நீர்த்தேக்கத்தில் மின் பிறப்பாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து அதனைத் தொடர்ந்து சுரங்க வழியாக லக்ஸபான, பொல்பிட்டிய ஆகிய நீர் உற்பத்தி நிலையங்களுக்கு நீர் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த சுரங்க வழி பாதைகள் 20 வருடத்திற்கு ஒரு முறை சீர்த்திருத்தப்படவேண்டும். எனினும் 1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் திருத்தப்பணிகள் செய்யப்படவில்லை. இந்நிலையில் சுரங்க வழிப்பாதை சேறு கலந்த நீரை வெளியேற்றுவதனால் கடந்த 2020 ஜனவரி மாதம் கண்காணிக்கப்பட்டு. இதனை சீர்திருத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே கடந்த காலங்களில் நீர்தேக்கங்களின் நீர்மட்டம் மிக உயர்வாக காணப்பட்டதனால் அதன்மூலம் உச்ச மின் உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் இதனை உடனடியாக சீர்திருத்தம் செய்வதற்கு உகந்த காலப்பகுதியாகும். ஏனெனில் அடுத்த மழைக்காலங்களில் நீர்த்தேக்கத்தில் நீரினை அதிக அளவில் சேமித்து நீர்மின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே சுரங்க வழி பாதை திருத்த பணிகள் ஆரம்பித்துள்ளன.

இந்நிலைமையினை அறியாத ஒரு சிலர் சமூக வலைதளங்களின் மூலமும் ஊடகங்களின் மூலமும் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கெனியோன் நீர் பிறப்பாக்கிகளின் மூலம் 50 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். தற்போது பிரத்தியேக குழாயின் மூலம் நீர் விடுக்கப்பட்டு கெனியோன் நீர்த்தேக்கத்தில் நீர் மின் பிறப்பாக்கிகளின் மூலம் 30 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அதனை தேசிய மின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். அதனை தொடர்ந்து சுரங்க வழியாக லக்ஸபான, பொல்பிட்டிய மின்உற்பத்தி நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு மின் உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையிலேயே இவ்வாறான போலி பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களின் அறியாமை காரணமாக வரட்சியான காலப்பகுதியில் இவ்வாறு நீரினை வீணாக்குவதாக கருதுகின்றனர். எனினும் மின் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே குறித்த நடவடிக்கை மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுரங்க வழிப்பாதை சீர்திருத்தும் பணிகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 78 நாட்களுக்கு மார்ச் மாதம் 18 ம் திகதி வரை இரவு பகலாக முன்னெடுக்கப்படும். இதனைதொடர்ந்து சுரங்க வழிபாதையாக நீரினை மின் உற்பத்தி நிலையங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின்சார சபையின் கைதேர்ந்த பொறியியலாளர்களால் உயர் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை தற்போது மத்திய மலைநாட்டில் வரட்சியான காலநிலை நிலவுவதனால் மவுசாகலை, கெனியோன், காசல்ரி, விமல சுரேந்திர பொல்பிட்டிய, நவலக்ஸபான உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதும் அவசியமானது என அவர்கள் தெரிவித்தனர்.

## நந்திமித்ர ஹொக்கி விளையாட்டு மைதான புனரமைப்பை துரிதப்படுத்த கோரிக்கை



**மாத்தளை சுழற்சி நிருபர்**

விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வரும் மாத்தளை நந்திமித்ர ஹொக்கி விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளை து ரிதப்படுத்துமாறு மாத்தளை மா வட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக கோட்டகொட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட இவ்விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்காக கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டமையால் இதன் நிர்மாணப்பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (1) இதன் நிர்மாணப் பணிகளை அங்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக கோட்டகொட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இதன்போது நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததாகவும் தெரிவித்தார்.

## கணவனின் கத்திக்குத்தினால் ஆபத்தான நிலையில் மனைவி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

கணவனின் கத்திக்குத்தினால் மனைவி ஆபத்தான நிலையில், தியத்தலாவை அரசினர் மருத்துமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

இச்சம்பவம் ஹப்புத்தளை நகரில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.ஹப்புத்தளை நகர் உணவகமொன்றில் கடந்த ஐந்து மாத காலமாக பெண் ஒருவர் தொழில்செய்து வந்துள்ளார். இந்நிலையில் கத்தியுடன் வந்த அப்பெண்ணின் கணவன் , தனது மனைவியை சரமாரியாக குத்தினார். கடுங்காயங்களுக்குள்ளான மனைவியை, அங்கு கூடியவர்கள் தியத்தலாவை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர் அங்கு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் அவரின் நிலை கவலைக்கிடமாக இருந்து வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கியா தொலைநோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கிணங்க பயனாளர்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் உபகரணங்கள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ்,கொட்டக்கலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாந்த், தலவாக்கலை லிந்துலை நகர சபை தலைவர் பாரதிதாசன், அக்கரப்பத்தனை பிரதேச சபை தலைவர் கதிர்செல்வன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## மண்சரிவு அபாயம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை மஸ்ஸென்ன பிரதேசத்தில் மண்சரிவு அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ள தமது வீடுகளுக்கு பதிலாக மாற்றிடம் வழங்குமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டு ஒருவருட காலமாகியும் பொறுப்பு வாய்ந்தவர்கள் தமது கோரிக்கையை நிறைவேற்றவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் இவ்விடயம் தொடர்பில் இப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது எதிர்ப்பினை வெளிபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கஹவத்தை ருவன்புர தேசிய கல்வி நிறுவனத்துக்கு பூட்டு

**பலாங்கொடை தினகரன் நிருபர்)**

கஹவத்தை ருவன்புர தேசிய கல்வி நிறுவனத்தில் 39 ஆசிரியர், மாணவர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் காலவரையின்றி இக் கல்வி நிறுவனம் மூடப்பட்டுள்ளது. இங்கு சுமார் 370 மாணவ, மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.

முதற்தடவை இரண்டு மாணவர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டதையடுத்து கொடகவெல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் மூலம் 50 மாணவர்களுக்கு ரெபிட் அண்டிஜன் பரிசோதனை மேற்கொண்ட போது அவர்களில் 39 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனால் இக்கல்வி நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கொடகவெல மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி சுதத் கீர்த்திசிங்க கருத்து தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களை தனிமைப்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வெளியில் உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டாமென அறிவுறுத்தல் வழங்கியிருந்த போதிலும் மாணவர்கள் வெளியே சென்றுள்ளதாக அறிய முடிந்துள்ளது. இது கல்வி நிறுவனத்தினால் எடுத்த தீர்மானமாகும். நாம் இதனை அனுமதிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார்.

## காணி விவகாரம் ; இளைஞன் பரிதாப மரணம்

**(எம்.ஏ.அமீனுல்லா)**

இரு குடும்பங்களுக்கு இடையில் காணி விவகாரம் காரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மரங்களை வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் மின்சார வாளினால் காலை அறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர் பிரதீப் பிரசன்னா (28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறும் சந்தேக நபர் உயிரிழந்தவரின் மாமா என தெரியவந்துள்ளது. இருவரும் ஹமாங்கொட, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. மேலும் இறந்தவருக்கும் சந்தேக நபருக்கும் இடையே வேலி தொடர்பாக ஏற்பட்ட தகராறு இறுதியில் கொலையில் முடிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் காலை துண்டிக்க பயன்படுத்தப்பட்ட இயந்திர வாளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இராகலையில் ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதி

இராகலை பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட தோட்டங்களைச் சேர்ந்த ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

லிடேஸ்டேல்,சென் லெனாட்ஸ், இராகலை தோட்டம்,டெல்மார் தோட்டம் ஆகியவற்றில் ஆறு பேருக்கு நேற்றுமுன்தினம் (31) மாலை கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை இராகலை நகரில் இயங்கும் இலங்கை வங்கி கிளை பெண் உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட ஏழு பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமையால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராகலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு அதிகாரி எஸ்.கோபிராஜ் தெரிவித்தார். இராகலை லிடேஸ்டேல் தோட்டத்தில் பணியாற்றும் உதவி தோட்ட அதிகாரிகள் இருவரும்,சென்லெனாட்ஸ் தோட்டத்தில் பணியாற்றும் உதவி தோட்ட அதிகாரிகள் இருவர் , இராகலை தோட்டத்தில் பணியாற்றும் ஒரு உதவி தோட்ட அதிகாரி என ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தோட்ட உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் இராகலை நகரில் இயங்கும் இலங்கை வங்கி உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் தொற்று உறுதியான நிலையில் ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராகலை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.அதே நேரத்தில் தொற்றுக்கு உள்ளான ஏழு பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களின் குடும்பத்தாரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் தொற்றுக்கு உள்ளானவர்கள் பயணித்த இடங்கள் தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அதிகாரி இராகலை பிரதேசத்தில் கொரோனா தொற்று தொடர்பில் அவதானத்துடன் பொதுமக்கள் செயற்படுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

**ஆ.ரமேஸ்**

# மலையக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக 33 வருடங்கள் அயராது உழைத்த ஆசிரியர் நாகரத்தினம்

### ஹற்றன் கல்வி வலயத்தின் கல்வி ஒளிவிளக்காக திகழ்ந்த ஆசான் அரச சேவையிலிருந்து இன்று ஓய்வு

மலையகத்தில் 33 வருடமாக மகத்தான சேவை மேற்கொண்டு ஆசிரியர் சேவையிலிருந்து இன்று 02.02.2022 ஓய்வு பெறுகிறார் ஆசிரியர் நாகரத்தினம். யாழ்ப்பாணம் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட இவர், கடந்த 33 வருட காலமாக நுவரெலியா மாவட்டத்தில் பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், கணனி நிபுணர்கள் என பல்வேறு துறைகளுக்கு மலையகத்தைச் சேர்ந்த மாணவர்களை உருவாக்குவதற்கு அரும்பாடு பட்டவர்.

இவரின் ஓய்வு காலம் சீரும் சிறப்பும் பெற்று, அவர் நலமாக வாழ வேண்டும் என மலையக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்த்துகின்றனர். யாழ்ப்பாணம் காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், அப்பாடசாலைக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் கடந்த காலங்களில் தனது சேவையை முன்னெடுத்துள்ளார். தனது சேவையினை முழுமையாக மலையக மாணவர்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

யாழ் பல்கலைக்கழகத்தில் 1986 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரியாக பட்டம் பெற்ற இவர் 1989 ஆம்ஆண்டு றம்பொடை தமிழ் வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக தனது சேவையை ஆரம்பித்தார். அப்பகுதியில் உள்ள மாணவர்கள் கணிதத்துறையில் பல்வேறு வகையில் தமது திறமையை வெளிக்காட்ட உதவிய இவர், 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தில் பெருமைக்குரிய பாடசாலைகளில் ஒன்றான ஹற்றன் ஹைலன்ஸ் மத்திய கல்லூரியில் பௌதிகவியல் ஆசிரியராக தனது சேவையை முன்னெடுத்துள்ளார். இக்காலப்ப குதியில் விஞ்ஞானத் துறைக்கு மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்புவதில் இவரது சேவை அளப்பரியதாக இருந்துள்ளது. இவரது இந்த சேவையினால் மலையகத்தைச் சேர்ந்த பலர் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசியர்கள் ஆக உருவாகினர். விஞ்ஞானத்துறையில் புகழ் பூத்த ஆசிரியர்கள் உருவாவதற்கு இவரது சேவையே காரணமாக இருந்துள்ளது.

இவரது சேவைக் காலப்பகுதியில் மாணவர்களின் கல்விக்கு மாத்திரமின்றி பாடசாலையின் நிர்வாக செயற்பாடுகளுக்கும் இவர் பல்வேறு வழிகளில் தனது பங்களிப்பினை செய்துள்ளார். மலையக மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் 1990 ஆம் ஆண்டு 'லோயல் கல்வியகம்' எனும் பெயரில் தனியார் கல்வி நிறுவனத்திற்கு வித்திட்டவரும் இவரேயாவார்.



ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில் தனது சேவையை முன்னெடுத்து வரும் நிலையில் 2001 ஆம் தொடக்கம் 2022.02.02 வரை ஹற்றன் கல்வி வலயத்தின் கணினிவள நிலையத்தின் முகாமையாளராக செயற்பட்டு மலையக மாணவர்களின் கணினி ரீதியான அறிவினை மேம்படுத்தி அத்துறையினூடாக பலர் தொழில் துறைக்கு செல்வதற்கு முன்னின்று உழைத்தார். இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து கணினி துறையில் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டியாக இன்று வரை இருந்து வந்துள்ளார். பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்களை செய்து அவர்களை பல் கலைக்கழகம் அனுப்புவதற்கான வழிகாட்டல் களையும் தனது சேவைக்கு அப்பாற் சென்று செய்து வந்துள்ளார். இந்தக் காலப்பகுதியில் ஹற்றன் கல்வி வலயத்தில் சேவையாற்றும் ஆசியர்களுக்கும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பாடத்தைப் பயிற்றுவித்து நெறிப்படுத்தி அவர்களுக்கு வழிகாட்டியாக செயற்பட்டுள்ளார்.

தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்து மாணவர்கள் தேசிய தொழிற் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இன்று வரை அந்த பணியினை முன்னெடுத்து வந்துள்ளார்.

இந்தத் துறையினை விருத்தி செய்வதற்காக 2006 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப பாட பட்டத்தினையும் 2008 ஆம் ஆண்டு பௌதிக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு சான்றிதழையும் பெற்றுள்ளார். இவரது சேவைக்காக கல்வி அமைச்சு தகவல் தொழில்நுட்ப துறையினை மேலும் மேம்படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டு கொரிய நாட்டில் வழங்கப்பட்ட தகவல் தொழிநுட்ப பயிற்சி ஒன்றுக்கும் அவரை அனுப்பியுள்ளது.

மலையக மாணவர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு துறைகளில் தனது சேவையினை முன்னெடுத்த ஆசிரியர் சீவரத்தினம் நாகரத்தினம் அவர்களுக்கு மலையக சமூகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அவரது ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டும் என வாழ்த்தி அவரது பணி மலையகத்திற்கு தொடர்ந்தும் தேவை என்பதனையும் சுட்டிக் காட்டுகின்றது.

**கே.சுந்தரலிங்கம் ...**
**(ஹட்டன் விசேட நிருபர்)**

# கிழக்கின் குரல்



# அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் ஏறாவூர் பற்று அபிவிருத்தி குழு கூட்டம்

## புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராய்வு

மட்டக்களப்பு குறூப் நிருபர்



ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கான பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் அபிவிருத்திக் குழுத் தலைவரும், பின்தங்கிய கிராம அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் திங்கட்கிழமை (31) ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வும், 2022 ஆம் ஆண்டில் அனுமதி மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

இவற்றில் 117 மில்லியன் ரூபா வரையான கிராம அபிவிருத்தி திட்டங்கள், 68 மில்லியன் பெறுமதியான உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலான நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டங்கள் மற்றும் பிரதேச சபை, நகர சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களுக்கான அனுமதிகளும் இதன்போது பெற்றுக் கொள்ளப்பட்டன.

இதுதவிர உள்ளூராட்சி சபைகள், கல்வி, சுகாதாரம், நகர அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சாரம், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, விவசாயம், கால்நடை, புவிச்சரிதவியல், கடற்றொழில் நீரியல் வளத்துறை, வனஜீவி மற்றும் வனப்பரிபாலணை உள்ளிட்ட அனேகமான திணைக்களங்கள் தொடர்பான வேலைத் திட்டகளின் மீளாய்வுகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டதுடன், தொடர் நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளும் இதன்போது வழங்கப்பட்டது.

விசேடமாக கல்குடா வலய பாடசாலைகளில் குரங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. மேலும் மயிலத்தமடு, மாதவனைப் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கான குடி நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், அங்குள்ள பண்ணையாளர்களது வேண்டுகோளுக்கிணங்க பால் சேகரிப்பு நிலையம் ஒன்றினை பொருத்தமான இடத்தில் அமைத்துக் கொடுக்கவும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் தமிழ் பிரதேச அபிவிருத்திக்குழுக்களின் இணைத் தலைவருமான சந்திரமுகமார், செங்கலடி பிரதேச சபைத் தவிசாளர் எஸ். சர்வானந்தா, ஏறாவூர் நகரசபைத் தவிசாளர் எம்.எஸ். நளீம் உள்ளிட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், சந்மந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், விவசாய, கால்நடை அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# விமானப்படை குறூப் கேப்டன் நிலந்த பியசேனவுக்கு பிரியாவிடை



(மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் விமானப்படையின் குறூப் கேப்டன் நிலந்த பியசேனவுக்கு பிரியாவிடை நிகழ்வு திங்கட்கிழமை (31) மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு வருடங்கள் சேவையாற்றிய குறூப் கேப்டன் நிலந்த பியசேன பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச்செல்வதால், இவருக்கான பிரியாவிடை வைபவம் அரசாங்க அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டு சேவையினை பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கப்பட்டது. இவர் கடந்த இரு வருடகாலத்தினுள் மக்களுக்கான மனித நேய பணிகளை செயற்படுத்திய ஒருவர், இவர் மாந்தீவு வைத்தியசாலையினை புனர்நிர்மாணம் செய்து பின்தங்கிய பாடசாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி சிறார்களினால் மரக்கன்றுகளை வளர்ப்பதற்கான ஊக்கத்தினையும் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டு .நகர் பகுதியில் அமைந்துள்ள காந்தி பூங்காவினை தங்களுடைய விமான படையணியை பயன்படுத்தி அழகுபடுத்துவதில் பெரும்பங்கினை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையார் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம்

(காரைதீவு குறூப் நிருபர் )

கல்முனை சேனைக்குடியிருப்பு கிட்டங்கி பிள்ளையார் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதற்கான சகல கிரியைகளும் 04ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 05ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.57மணி முதல் 10 மணி வரையுள்ள காலத்தில் இடம்பெற அருள்பாலித்துள்ளது.

கும்பாபிஷேக பிரதமகுருவாக கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியார், சிவாகம வித்யாபூஷணம் ,சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் செயற்படுவார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிசேக பூஜைகள் இடம்பெறுமென ஆலய நிருவாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

# கல்முனை சுகாதார பணிமனையில் 'அரண்' சஞ்சிகை வெளியீட்டு விழா



(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் 'அரண்' சஞ்சிகை வெளியீட்டு விழா திங்கட்கிழமை (31) பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் கௌரவ அதிதியாகவும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும், அரண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான டொக்டர் எம்.பி.எம். வாஜித், சஞ்சிகை பற்றிய அறிமுகவுரையையும், அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம்.ஹனிபா ஆய்வுரையையும் நிகழ்த்தினர்.

சஞ்சிகையின் முதற் பிரதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், அவர் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

# மூதூரில் தடுப்பூசி ஏற்றும் பணி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் தொடர்ந்தும் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம்.ஹில்மியின் வழிகாட்டலில் சுகாதார பணிமனையில் 'பூஸ்டர்' தடுப்பூசி மருந்துகள் வழங்கல் சனி (29), ஞாயிறு (30) ஆகிய தினங்களிலும் இடம் பெற்றது.

மேலும் இதனை பெற்றுக் கொள்ள 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டு 84 நாட்கள் பூர்த்தியாகியவர்கள் சமுகமளித்து பெற்றுக் கொண்டனர்.

# அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு -இரண்டாமிடம்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

இலங்கையிலுள்ள 126 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான எல்.டி.எஸ்.பீ. திட்டத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பீ.பீ.ரீ.ஏ (PPTA) போட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அக்கரைப்பற்று பிரதேச சபை அம்பாறை மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை தன்வசம் ஆக்கிக் கொண்டது.

இவ் வெற்றியை பெற்றுக் கொள்வதற்காக நிருவாக ரீதியாக தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.முகம்மட் இர்பான், அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.றாசிக் மற்றும் உறுப்பினர்களையும் பாராட்டும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் நலன்புரி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் பிரதேச சபையின் கௌரவத்திற்காக நிருவாக ரீதியாக தன்னை அர்ப்பணித்த அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல். முகம்மட் இர்பான், அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் உள்ளிட்டவர்கள் உறுப்பினர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது சிறந்த முறையில் மக்கள் பணியாற்றி வரும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் சேவைகளைப் பாராட்டி அக்கரைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்வியை மேம்படுத்தும் நோக்கில் முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் உதவிகள்

(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)



கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான கல்வியை மேம்படுத்தும் நோக்கில், பாடசாலை மாணவர்களுக்கான கல்வி தொடர்பிலான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வு சனிக்கிழமை (29) கிண்ணியா ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. ஐந்து பின் தங்கிய பாடசாலைகளை சேர்ந்த ஒன்பதாந் தர மாணவர்களுக்கு சப்பாத்து, புத்தகப் பை உள்ளடக்கலாக 250 பொதிகளும், தூர பிரதேசத்தில் இருந்து வரும் மாணவ மாணவிகளுக்கு 47 துவிச் சக்கர வண்டிகளும், பாடசாலை மாணவர்களின் தெரிவு செய்யப்பட்ட பெற்றார்களுக்கான வாழ்வாதார பொதிகளும் இதன் போது வழங்கப்பட்டன. கிண்ணியா அலிகார் வித்தியாலயம், ஆலங்கேணி விநாயகர், தாருல் உலூம், அல் அமீன் போன்ற பாடசாலைகளில் இவ்வாறான கல்வித் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கில் இத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசூஹர்கான், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பணிப்பாளர் பைசர் கான் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நெல் அறுவடை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தில்லங்குளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மழையை நம்பிய பெரும்போக நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், அறுவடை இயந்திரத்திற்கான தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதைத்தது முதல் நீண்டகலமாக காட்டு யானைகளுக்கு காவல் காத்து வந்த நிலையில், அறுவடை இயந்திரம் இல்லாததால் விளைந்த வேளாண்மைகளை யானைகள் துவம்சம் செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அறுவடை ஆரம்பிக்கும் போது ஒரு ஏக்கருக்கு 6000 ரூபா சென்ற நிலையில் தற்போது 8000 ரூபா வரைக்கும் அறுவடை கூலி அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வதிகரிப்புக்கு அறுவடை இயந்திரங்களின் தட்டுப்பாடும் ஒரு காரணமாகும் என்பதோடு இம்முறை விளைச்சல் மிகவும் குறைந்துள்ள நிலையில் யானைகளின் சேதத்தாலும் அதிகரித்த அறுவடை கூலியாலும் மேலும் நட்டம் அடைவதாகும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# காரைதீவில் துப்பாக்கிச்சூடு: இரு கோஷ்டிக்கிடையில் மோதல்

(காரைதீவு குறூப்,கல்முனை மத்திய தினகரன் நிருபர்கள் )

காரைதீவு பிரதான வீதியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மூவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் பயணித்த கார் மீது பின்னால் மோட்டார் சைக்கிளில் துரத்திவந்த மற்றுமொரு குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் துப்பாக்கிச்சூட்டை நடாத்திவிட்டு மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பியோடியதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி சூட்டு சம்பவம் காரைதீவு பிரதான வீதியில் வெட்டு வாய்க்காலுக்கு அருகில் திங்கட்கிழமை (31) நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது: அக்கரைப்பற்றில் இருந்து கல்முனை நோக்கி கார் ஒன்றில் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் பயணித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுடன் தொடர்புபட்ட மற்றுமொரு கோஸ்டியினர் பின்னால் மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்துள்ளனர்.

இரு சாராரும் காரைதீவு அண்மித்ததும் அருகருகே வர மோட்டார் சைக்களில் வந்தவர்கள் கார் மீது துப்பாக்கிச்சூட்டை நிகழ்த்தியுள்ளதாக தெரியவருகிறது.






கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தினால் PSDG திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிலக்கடலை உற்பத்தி திட்டத்தின் அறுவடை விழா தம்பிலுவில் விவசாய போதனாசிரியர் பிரிவில், சாகாமம் பிரதேசத்தில் சனிக்கிழமை (29) சி. சுஜிகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இதில் லாகுகல வலயத்தின் உதவி விவசாய பணிப்பாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதேச விவசாயிகளும் கலந்து கொண்ட போது.

# நகர்வலம்



## அரசாங்கத்தின் அபிவிருத்தி தொடர்பில்

# மக்களுக்கு அறிவுறுத்த வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகும்

### மாத்தறையில் ஊடகத்துறை அமைச்சர் டளஸ்



(மாத்தறை தினகரன் நிருபர் )

நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்த வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகும் என ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் (30) நடைபெற்ற மாத்தறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர் கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் அன்றாடம் நடைபெற்றுவரும் கொலைகள், மரணங்கள், விபத்துக்கள் மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற சம்பவங்கள் குறித்தும் அரசாங்கம் நடைமுறைப் படுத்திவரும் அபிவிருத்தித் திட்டங்களின் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஊடகங்கள் செய்திகளை பிரசுரிக்க வேண்டும்.

ஊடகங்களை கட்டுப்படுத்துவது எமது நோக்கமல்ல. ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குவதால் ஜனநாயகம் நிலைத்திருக்கும்.

தற்போதைய அரசாங்கம் ஊடகவியலாளர்களை கௌரவமாக வழிநடத்துகிறது. ஊடகவியலாளர்களுக்கு எதிர்காலத்தில் பல நன்மைகளையும் காப்புறுதித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளேன். இதனால் ஊடகவியலாளர்கள் நன்மையடைவர்.

டிஜிட்டல் தொழில் நுட்பத்தை புகுத்தி ஊடகங்களை வழிநடாத்த நாம் எதிர்பார்கிறோம். 2023ம் ஆண்டில் மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு நாடுமுழுவதும் 14 டிஜிட்டல் தொழில் நுட்ப நிலையங்களை ஏற்படுத்தவுள்ளோம். 2025ம் ஆண்டாகும் போது இத்திட்டங்கள் முடிவடைந்து முழு நாடும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அடையும்.

தற்போது கொரோனா நோய் தீவிரமடைந்துள்ளது. மீண்டும் பாடசாலைகளை மூடி மாணவர்களின் கல்வியை பாழாக்க விரும்பவில்லை. நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவேண்டும். சமூகத்தில் மலட்டுத் தன்மை ஏற்படுவதாக பொய்ப் பிரசாரங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதன் உண்மைத் தன்மையை மக்களுக்கு எடுத்துக்கூற ஊடகவியலாளர்கள் முன்வர வேண்டுமெனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

---

அநுராதபுரம் மாவட்ட;

## சேதன பசளை தயாரிப்பாளர்களுக்கு இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை

### மாவட்ட அரசாங்க அதிபர்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



சேதனப் பசளை தயாரிக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட சேதனப் பசளை தயாரிப்பாளர்களுக்கு மூலப் பொருட்களை அரித்து துண்டாக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

வட மத்திய மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சேதனப் பசளை மூலப் பொருட்களை அரிந்து துண்டாக்கும் இயந்திரங்களை பார்வையிடுவதற்கு வருகை தந்திருந்தபோதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் சேதனப் பசளை தயாரிப்பினை அதிகரிப்பதற்காக வேண்டி தெரிவு செய்யப்பட்ட 14 பசளை உற்பத்தியாளர்களுக்கு இவ் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அதற்கான சகல ஏற்பாடுகளையும் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு இயந்திரத்தினால் மாதம் ஒன்றுக்கு ஐந்து மெட்ரிக் டொன் சேதனப் பசளையினை தயாரிக்க முடியுமென உரக் கூட்டுத்தாபனத்தின் அநுராதபுரம் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பந்துல பெரேரா தெரிவித்தார்.

---

## மூடப்பட்ட நெல் ஆலைக்கு ஆளுநர் விஜயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் விலச்சிய பகுதியில் பத்து ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள கூட்டுறவு சங்க நெல் ஆலை தொடர்பில் ஆய்வு செய்வதற்காக வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் கடந்த (30) திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விலச்சிய கூட்டுறவு சங்கம் நிர்மாணித்த நெல் ஆலை எவ்வித உபயோகத்திற்கும் இல்லாமல் அழிவடைந்து வருவதாக வெளிக்காட்டப்பட்டதனை அடுத்து வட மத்திய மாகாண ஆளுநர், மாகாண சபை உயர் அதிகாரிகளுடன் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

---

**நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்**

199/1, அட்டியாவெல வடக்கு, தங்கொட்டுவ எனும் முகவரியில் வசிக்கும் மானிக்குகே இரோமி ஷந்தரமாலி சில்வா ஆகிய நான் நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107) பிரிவு 7ன் சிலாபம் மாவட்ட மேல் நீதிமன்ற வலயத்தில் சிங்கள மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்ற பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

**எம்.ஐ.சீ.சில்வா,**
**அட்டியாவெல வடக்கு,**
**தங்கொட்டுவ.**
**2022.01.31**

## நுழைவாயில் 'கேட்' விழுந்து சிறுமி பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

தமுத்தேகம பகுதி வீடொன்றில் இருந்த நுழைவாயில் கேட் சிறுமியொன்றின் மீது விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அச்சிறுமி பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக தமுத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் (31) காலை தமுத்தேகம துங்வனி பியவர பகுதியில் இடம்பெற்றுள்ளது. தமுத்தேகம நகரிலுள்ள ஆரம்ப பிரிவு பாடசாலையில் தரம் இரண்டில் கல்வி கற்கும் துங்வனி பியவர பகுதியை விப்பிடமாக கொண்ட ஆறு வயது பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

---

## உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு நடத்தும் முப்பெரும் விழா



எட்டாம் ஆண்டாக உலகத் தமிழ் பாராளுமன்ற நிகழ்வு மார்ச் 11 & 12 ஆம் தேதிகளில் வெள்ளி, சனிக்கிழமைகளில் சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கத்தில் முப்பெரும் விழாவாக நடைபெற உள்ளது.

முதலாவதாக, பல்வேறு நாடுகளை சேர்ந்த தமிழ் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், துணை முதல்வர்கள், மேயர்கள், பல்கலைக்கழக வேந்தர்கள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இரண்டாவதாக, இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி, வெளியுறவுத்துறை பணி, விண்வெளித்துறை, விளையாட்டுத்துறை, விமானத்துறை, சமூக நலத்துறை, கல்வியாளர்கள், மருத்துவர்கள் போன்ற துறையில் சாதனை படைத்த பெண்களுக்கு 'சாதனை பெண்கள் விருது' வழங்கப்பட உள்ளது. மூன்றாவது, நிகழ்வாக உலகில் 12 நாடுகளில் தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 152 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களை நேரடியாகவும், இணைய வழியாகவும் அழைத்து உலகத்தமிழ் பாராளுமன்ற நிகழ்வு நடைபெற உள்ளது.

மேலும் இந்நிகழ்வை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும், பேச்சுப்போட்டி, ஆடை அலங்காரம் நிகழ்வுகளும், மருத்துவ விழிப்புணர்வு நிகழ்வை ஆடை அலங்கார நிகழ்வாக நடைபெற உள்ளது. இதில் பல்வேறு மருத்துவ கல்லூரி மாணவ மாணவிகளும் மற்றும் கலை கல்லூரி, விவசாய கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களும், பிளஸ் டூ மாணவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இதில் முத்தாய்ப்பாக வளரும் தமிழகம் என்ற தலைப்பில் கண்காட்சி நடைபெற உள்ளது. அதில் தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைந்ததை பறைசாற்றும் விதமாகவும், அனைத்து துறை சார்ந்த அரங்கள் அமைத்து காட்சிப்படுத்த உள்ளோம். என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

---

கேள்வி இலக்கம். : 01/ 2022

**மக்கள் வங்கி**

**கேள்வி அறிவித்தல்**

மக்கள் வங்கிக்குச் சொந்தமான கீழே விபரிக்கப்பட்டுள்ள காணி உடனடியாக விற்பனை செய்வதற்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

உங்களுக்கும் மாரவில நகருக்கு அண்மையில் பெறுமதியான காணி ஒன்றினை உரித்தாக்கிக் கொள்வதற்கு அரிய சந்தரப்பம்.

| காணியின் பரப்பளவு | காணியின் விபரம் | காணிக்குச் செல்லும் விபரம் |
|---|---|---|
| W 169 என்ற காணி ஏ.00, ரூ,01,பேர், 01.70 | வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் மாரவில காணிப்பதிவகப் பிரிவுக்கு உட்பட்ட, பிடிகல் கோரலை தெற்கு, யடகலம் பத்துவ, மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, நாத்தண்டிய பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள, ஹொர கொல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட, ஹொரகொல்ல என்ற கிராமத்தில் அமைந்துள்ள, டப்ளியூ. 169, என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எம். ஜே. கோமஸ் அவர்களால் 2014.12.13 ம் திகதி அளந்து துண்டு போடப்பட்டு தயாரிக்கப்பட்ட 14599 ம் இலக்க வரை படத்தின் 01 ம் இலக்க காணித் துண்டு.<br>காணியின் அளவு. ஏ.00, ரூ,01,பேர், 01.70<br>காணியும் அதனுள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பழ வகைகள், உட்பட அனைத்தும் அடங்கலாக,<br>இது மாரவில காணிப் பதிவகத்தில் K 185/65 ன் கீழ் பதியப்பட்டு உள்ளது. | மாரவில மக்கள் வங்கி கிளையிலிருந்து A3 பாதை ஊடாக சிலாபம் பக்கமாக சுமார் 100 மீட்டர் அளவு செல்லும் போது அகப்படும் மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகால் வலது பக்கம் இருக்கும் நாத்தாண்டிய பாதையில் சுமார் 300 மீட்டர் அளவு சென்றவுடன் அகப்படும் நேபடவல பாதையில் சுமார் 500 மீட்டர் அளவு சென்றவுடன் வலது பக்கம் இருக்கும் பாதையில் சுமார் 50 மீட்டர் அளவு சென்ற உடன் அந்தப் பாதையின் அருகே இடது பக்கமாக அடகு வைக்கப்பட்ட கட்டிடம் அமைக்கும் ஆதனம் அமைந்து உள்ளது. |

2022.02.17 ம் திகதி பி. ப. 2.00 மணி வரையில் கேள்விப் பத்திரங்களை புத்தளம் பிராந்திய பிரதான அலுவளகத்தில் பொறுப்பேற்கப்படும்.
இன்றைய தினம். பி. ப. 3.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**கேள்வி விண்ணப்பத் பத்திரங்களுக்கு**
**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, புத்தளம் பிராந்திய பிரதான அலுவளகம்**
**இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய.**
**தொலைபேசி :- 032 – 2253301. ( மொஹான் – 0777-124210 )**
**032 – 2252180**
**032 – 2253300**

மக்கள் வங்கி PEOPLE'S BANK

---

# அட்டுலுகம அல் கஸ்ஸாலியின் அபிவிருத்திக்கு உதவ தயார்

### மர்ஜான் பளீல் எம்.பிக்கு பாடசாலை சமூகம் பாராட்டு

பாணந்துறை மத்திய குறூப் நிருபர்



களுத்துறை மாவட்டத்தின், அட்டுலுகம அல் கஸ்ஸாலி முஸ்லிம் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) அபிவிருத்திக்கு தன்னால் முடியுமான உதவிகளை வழங்க தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலை அதிபர் சட்டத்தரணி ஹிதாயத்துல்லா மகீன் தலைமையிலான பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலை அவரது சீனன்கோட்டை இல்லத்தில் சந்தித்து பாடசாலை அபிவிருத்தி மற்றும் தேவைப்பாடுகள் குறித்து நீண்டநேரம் கலந்துரையாடினர்.

பாடசாலை தேவைப்பாடுகளை நல்ல முறையில் கேட்டறிந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர், முதல்கட்டமாக பாடசாலை பிரதான மண்டபத்திற்கு தேவையான தளபாட வசதிகளை பெற்றுத்தர உடன்பட்டதோடு பாடசாலை மைதானத்தின் புனரமைப்பு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்து நிறைவேற்றித் தருவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மொஹமட் அஸ்வர், எமது மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித்துறை வளர்ச்சிக்கு எவ்வித விளம்பரங்களும் இன்றி பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மேற்கொண்டு வருகின்ற பணிகள் பாராட்டப்பட வேண்டியவையாகும். சமூக பற்றுள்ள முன்மாதிரிமிக்க அவரது நடவடிக்கைகளை எமது பாடசாலை சமூகம் பாராட்டுகிறது. நாம் கட்சி பேதங்களை மறந்து எமது சமூக தேவைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

அத்துடன், அவருக்கு கிடைத்துள்ள இந்த பாராளுமன்ற பதவியினூடாக சமூகத்திற்கான உச்ச சேவையை வழங்குவதே அவரது எதிர்பார்ப்பு என்பதை அவருடன் நாம் கலந்துரையாடியபோது அறிந்து கொண்டோம். எந்தவித அரசியல் ஆடம்பரமுமின்றி சமூகத்தின் தேவைகளை நல்ல முறையில் கேட்டறிந்தார். நாம் எதிர்பார்த்ததை விட பாடசாலை விடயங்களில் அவருக்கு இருக்கின்ற அக்கறை பாராட்டத்தக்கது என்றும் பாடசாலை செயலாளர் மேலும் தெரிவித்தார்.

---

**விஷேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

வெலிகந்த தொடன்துவ இல் வசிக்கும் RAMANI DACEY ஆகிய நான், 2020.01.24 அன்று தினப்புத்தக இலக்கம் 219, பக்கம் 17 அத்தியாயம் 111இல் பதிவு செய்யப்பெற்றுள்ளதும், வெலிகந்த, தொடன்துவ இல் வசிக்கும் ஜயசிரி அபேவீர என்பவருக்கு வழங்கப்பட்டதுமான விஷேட அற்றோணிதத்துவமானது, 2022 ஜனவரி 28ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லா தொழிக்கப்படுகின்றதென பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**RAMANI DACEY**



பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.எச்.எம்.எம். பி.ஜெயசிங்க நேற்று சுபநேரத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார். வங்கித் துறையில் 35 வருட அனுபவம் உள்ள இவர் 1987 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்ததோடு பலவேறு பதவிகளை வகித்து தற்பொழுது பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை – களுத்துறை

### கேள்விக்கான அழைப்பு

01. களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.

| கேள்வித் தொடர் இலக்கம் | கேள்வியின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்வித் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| RDHSK/Pro02/2022/01 | Supply of Furniture | 2,000.00 | 105,000.00 |
| RDHSK/Pro02/2022/02 | Supply & Installation of Air Condition Machines | 2,000.00 | 45,000.00 |
| RDHSK/Pro02/2022/03 | Supply & Installation of IT Equipments | 2,000.00 | 123,000.00 |
| RDHSK/Pro02/2022/04 | Supply & Installation of 20 KVA Generator | 2,000.00 | 30,000.00 |

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் நடத்தப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத் தொகுதி, 04ஆம் மாடி, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதுடன் கேள்வி ஆவணங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு செலுத்திய பின்பு 2022.02.02 முதல் 2022.02.24ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் கொள்வனவு செய்யலாம்.
04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், களுத்துறை என்ற பெயரில் 2022.08.31 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கு சமமான கேள்விப் பிணையொன்றை பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு, வேறுவேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி தொடர் இலக்கம் மற்றும் கேள்விப் பெயரைக் குறிப்பிட்டு 2022.02.25ம் திகதி மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.
06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் ஏற்றுக்கொண்டவுன் கேள்விப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. மேலதிக விபரங்களுக்கு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். 034-2222610, 034-2222367 ஐ அழையுங்கள்.

**தலைவர், பிரதேச பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, களுத்துறை.**

## போதனா வைத்தியசாலை - கராபிட்டிய

### கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2022/ 2023

2022/ 2023ஆம் ஆண்டில், கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் கட்டிடங்கள் மற்றும் சிறிய புதுப்பித்தல்களிற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகவுத்திறன்களின் (விண்ணப்பப்படிவத்தில் உள்ள நிபந்தனைகளைப் பூரணப்படுத்தும்) கூடிய தகைமைகளைப் பூரணப்படுத்தும் 07 ஒப்பந்தக்காரர்களைப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ❖ நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் செயல்பாட்டுப் பதிவுச் சான்றிதழ்
- ❖ நிதி வளம், பெற்றிருத்தல்
- ❖ பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத பணிக்குழாம்
- ❖ உபகரணங்களைப் பெற்றிருத்தல்
- ❖ மூன்றாண்டுகால சேவை அனுபவம்.
- ❖ வட் வரிக்கான பதிவு/ வருமான வரி செலுத்துதல்
- ❖ ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
- ❖ வைத்தியசாலைக்கு அண்மித்த அமைவிடமொன்றில் பராமரிப்பு அலகை நடைமுறைப் படுத்தும் இயலுமை.
- ❖ முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள்.

இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் இரண்டு பிரதிகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | கருமத்தின் பெயர் | தகைமை தரம் (CIDA) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | 2022/2023ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (ரூபா 3,000,000.00 இற்கு மேற்படாத ஒப்பந்தங்களிற்காக | C9, C8, C7, C6 அல்லது EM 5 | 3,500.00 |

01. மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்தி வார வேலை நாட்களில் 2022.02.16 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இவ்வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் இதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. 2022.02.17 அன்று மு.ப. 10.00 இற்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவுறுவதுடன், அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, விலைமனுக்கள், தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை கராபிட்டிய, என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது இவ் வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெறுகைப் பெட்டியில் நேரடியாக சேர்த்தல் முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022/2023' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.
    மேலதிக விபரங்களை 091-2232250, 091-2232176 என்ற தொலைபேசி இலக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**கராபிட்டிய - காலி.**
**2022.02.02**

## பெறுகை அறிவித்தல்

### பெருந்தோட்ட அமைச்சு

**நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச் செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு**

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

கட்டிட நிர்மாணம், பழுதுபார்த்தல் வேலைகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல், பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல், மதிப்பீட்டு வேலைகள் மற்றும் சிட்டைகளைப் பரீட்சிப்பதற்காக பொறியியலாளர் உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக கேள்விகோரல்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2022ஆம் ஆண்டின் பழுதுபார்ப்பு வேலைகளுடன் சம்பந்தப்பட்ட மேற்படி வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பதிவு செய்த பட்டய சிவில் பொறியியலாளர்களிடம் அல்லது சிவில் பொறியியல் ஆலோசனை சேவையை வழங்கும் நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த வேலைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட மாதிரிப் பத்திரங்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை 2022.02.03 முதல் 2022.02.23 பி.ப. 3.00 வரை இலக்கம் 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தின் நிதிப் பிரிவில் ரூ. 5000.00 மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி 02 பிரதிகளை பெற்றுக்கொள்ள முடிவதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பொறியியல் மதிப்பீட்டு பெறுமதியின் விகிதாசாரமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த விலைமனுக்களை 2022.02.24 பி.ப. 2.00 இற்கு முன் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தின் சேவைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும். அத்துடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நிர்மாண ஆலோசனை சேவைக்கான விலைமனுக்கள்- 2022' என்று குறிப்பிட்டு மூலப் பிரதி, நகல் பிரதியென குறிப்பிட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை தொ.பே.இல. 011-7909027ஐ அழைத்து உதவி பொது முகாமையாளர் (சேவை) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்கப்பெறும் சகல விலைமனுக்களும் 2022.02.24ம் திகதி பி.ப. 2.30 இற்கு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கப்படும் போது குறித்த விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நபர்கள் அல்லது நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவருக்கு அதற்கு சமுகமளிக்க முடியும் அத்துடன், மேற்படி தினத்தில் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள், நிராகரிக்கப்படுவதுடன், கிடைக்கப்பெறும் சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

AIIB ASIAN INFRASTRUCTURE INVESTMENT BANK

## கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்கல் – AIIB

நகர அபிவிருத்தி பிராந்தியத்தில் முன்னுரிமையுள்ள முதலீட்டாக நகர புத்துயிராக்கல் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரம் மற்றும் புறநகர் பிரதேசங்களில் 5,500 வீடமைப்பு தொகுதிகளை நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் காணிகளை மீள்அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து (AIIB) கடனொன்றை பெறுவதற்காக இலங்கை அரசாங்கமானது கடனொன்றை பெற்றுள்ளது. இந்த செயற்றிட்டமானது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் (MUD&H) செயற்படுத்துவதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால்(UDA) அமுல்நடாத்தப்படுகின்றது.

''கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திலுள்ள'' பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு பரிசீலனை செய்வதற்காக பின்வரும் தகைமைகளையுடைய பொருத்தமான தகைமையுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | பதவி | இல. | தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம் |
|---|---|---|---|
| | **மட்டம் பிஎஸ் - 4ஏ 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம்** | | |
| 01 | **செயற்றிட்ட கணக்காளர்** | 01 | (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டப்படிப்பொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் பட்டப் படிப்பிற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று<br>**அத்துடன்**<br>உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 9 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.<br>2) அரசாங்க நாடளாவிய சேவையின் III/II வகுப்பிலுள்ள அலுவலரொருவர் அல்லது மேற்பட்டது அல்லது உரித்தான துறையில் நிகரான நிலபரம்.<br>**அத்துடன்**<br>III/II இற்கான வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 9 வருட அனுபவம்.<br>* செயற்றிட்டங்களின் அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும். |
| | **மட்டம் பிஎஸ்-4சி 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம்** | | |
| 02 | **பொறியியலாளர் (மின்னியல்)** | 01 | 1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டப்படிப்பொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் பட்டப் படிப்பிற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று<br>**அத்துடன்**<br>உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 9 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.<br>* செயற்றிட்டங்களின் அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும் |
| | **மட்டம் பிஎஸ்-6ஏ 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம்** | | |
| 03 | **உதவி சமுகவியலாளர்** | 03 | (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டப்படிப்பொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் பட்டப் படிப்பிற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று<br>**அல்லது**<br>தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 9 வருட அனுபவம்<br>3) தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 14 வருட அனுபவம் |
| | **மட்டம் பிஎஸ் - 6பீ 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம்** | | |
| 04. | **தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்)** | 01 | (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)<br>1) தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 7 வருட அனுபவம்.<br>3) தொழில்நுட்ப துறைக்கு இசைவான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம் |
| 05 | **தொழில்நுட்ப அலுவலர் (சேவைகள்)** | 01 | |
| | **01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதரவளிக்கும் பணிநிலை அலுவலர்கள் பொது சேவை மற்றும் படிகளுக்கு நிகரானது** | | |
| 06. | **கணினி இயக்குனர்** | 02 | (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)<br>1) மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழியில் அடங்கலாக 5 திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி.<br>**அல்லது**<br>2) தேசிய வாழ்தொழில் தகைமையின் ஆகக் குறைந்தது ஐந்தாம் (5) மட்டத்தில் கணினி/தகவல் தொழில்நுட்பவியல் கற்றைநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>3) High Computer literacy in MS Word/Excel/Power Point and English & Sinhala Typing.<br>**அத்துடன்**<br>கணினி இயக்குனராக ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம். |

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

2019.03.15 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வேதனம், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அமைந்திருக்கும். வேலை நிலையமானது கொழும்பில் அமைந்திருப்பதுடன் மேல் மாகாணத்தில் வெளிக்கள பயணம் அமைந்திருக்கும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்:**

**www.moudh.gov.lk** மற்றும் **www.uda.gov.lk** ஆகிய இணையங்களில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் உருமாதிரியை பின்பற்றுமாறு விண்ணப்பதாரிகள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

கீழேயுள்ள முகவரியை 2022.02.17 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவு மற்றும் கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளை தயவு செய்து இணைக்கவும்.

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**கொழும்பு நகர புத்துயிராக்கல் திட்டம்,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**5 ஆம் மாடி,**
**''செத்சிரிபாய", 1 ஆம் கட்டம், பத்தரமுல்ல.**

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

அரசாங்க துறையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை திணைக்கள தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டுமெனவும் விண்ணப்பங்களின் சரியான நேர ஒப்படைத்தலை உறுதிப்படுத்துவதற்காக பிரதியொன்றை முன்னராகவே அனுப்பும்படி மதியுரை வழங்கப்படுகின்றனர்.

நேர்முகப்பரீட்சைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக்கொள்ளும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சைகளுக்கு பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**கொழும்பு மாநகர புத்துயிராக்கல் திட்டத்திற்கு ஆதரவு வழங்கல்,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**5 ஆம் மாடி,**
**''செத்சிரிபாய", 1 ஆம் கட்டம் - பத்தரமுல்ல.**
**2022 சனவரி 31 ஆம் திகதியன்று.**



## டென்னிஸ் வரலாற்றில்

# 21 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர்



டென் னி ஸ் வ ரலாற்றில் 21 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை நடால் படைத்தார்.

அவுஸ்திரேலியா பகிரங்க டென்னிஸ் 2022 ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் ரஷ்ய வீரர் மெத்வதேவை தோற்கடித்து ஸ்பெயின் வீரர் ரஃபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

**நடால் வென்ற கிராண்ட்சலம் பட்டங்கள் வருமாறு:**

| ஆண்டு | பட்டம் |
|---|---|
| 2005 | பிரெஞ் பகிரங்கம் |
| 2006 | பிரெஞ் பகிரங்கம் |
| 2007 | பிரெஞ் பகிரங்கம் |
| 2008 | பிரெஞ் பகிரங்கம் |
| 2008 | விம்பிள்டன் |
| 2009 | அவுஸ்திரேலியா பகிரங்கம் |
| 2010 | பிரெஞ் பகிரங்கம் |
| 2010 | விம்பிள்டன் |
| 2010 | அமெரிக்க பகிரங்கம் |
| 2011 | பிரெஞ் பகிரங்கம் |
| 2012 | பிரெஞ் பகிரங்கம் |
| 2013 | பிரெஞ் பகிரங்கம் |
| 2013 | அமெரிக்க பகிரங்கம் |
| 2014 | பிரெஞ் பகிரங்கம் |
| 2017 | பிரெஞ் பகிரங்கம் |
| 2017 | அமெரிக்க பகிரங்கம் |
| 2018 | பிரெஞ் பகிரங்கம் |
| 2019 | பிரெஞ் பகிரங்கம் |
| 2019 | அமெரிக்க பகிரங்கம் |
| 2020 | பிரெஞ் பகிரங்கம் |
| 2022 | அவுஸ்திரேலியா பகிரங்கம் |

**அதிக கிராண்ட்சலம் பட்டம் பெற்ற முதல் 5 வீரர்கள் வருமாறு:**

நடால் (ஸ்பெயின்) 21
பெடரர் (சுவிட்சர்லாந்து) 20
ஜோகோவிச் (சொர்பியா) 20
சாம்பிராஸ் (அமெரிக்கா) 14
எமர்சன் (அவுஸ்திரேலியா) 12

## உலகின் உயரமான கட்டடத்தில்

# காதலியின் புகைப்படத்தை ஒளிர செய்த ரொனால்டோ



தனது மனைவி ஜோர்ஜினாவுக்கு பிறந்தநாள் பரிசளிக்க விரும்பிய ரொனால்டோ, டுபாயில் உள்ள உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலீபாவில் 'ஹேப்பி பேர்த்டே ஜியோ' என்ற வாசகத்துடன் ஜோர்ஜினாவின் புகைப்படங்களை ஒளிரச்செய்து பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளார்.

இதற்காக இலங்கை ரூ.1.30 இலட்சம் வரை அவர் செலவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

உலகின் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ தற்போது விடுமுறையை கொண்டாடி வருகிறார். இதற்காக அவர் தனது காதலியும் மெடலிங் நடிகையுமான ஜோர்ஜினா ரோட்ரிக்சுடன் டுபாயில் சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில் ஜோர்ஜினா தன்னுடைய பிறந்தநாளை கடந்த 27 ம் திகதி கொண்டாடினார்.

இதையடுத்து ஜோர்ஜினாவுக்கு பிறந்தநாள் பரிசளிக்க விரும்பிய ரொனால்டோ, டுபாயில் உள்ள உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலீபாவில் 'ஹேப்பி பேர்த்டே ஜியோ' என்ற வாசகத்துடன் ஜோர்ஜினாவின் புகைப்படங்களை ஒளிரச்செய்து பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளார்.

இதற்காக இலங்கை மதிப்பில் ரூ. 130 இலட்சம் வரை அவர் செலவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதை படம்பிடித்து தனது இன்ஸ்டகிராம் பக்கத்திலும் ரொனால்டோ பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# லெஜண்ட்ஸ் லீக் தொடரின் சம்பியனாக மாறிய வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணி




லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில், 25 ஓட்டங்களால் ஆசிய லயன்ஸினை வீழ்த்தியிருக்கும் வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றிருக்கின்றது.

முன்னாள் முன்னணி கிரிக்கெட் வீரர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி, ஓமானின் மஸ்கட் நகரில் ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆசிய லயன்ஸ் அணித்தலைவரான மிஸ்பா உல் ஹக் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணிக்கு வழங்கினார். இதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணி கெவின் பீடர்சன் மற்றும் கோரி அன்டர்சன் ஆகியோரின் அதிரடியோடு 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்கள் பெற்றது.

வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் கோரி அன்டர்சன் 43 பந்துகளுக்கு 8 சிக்ஸர்கள் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 94 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காமல் இருக்க, கெவின் பீடர்சன் 22 பந்துகளில் 5 சிக்ஸர்கள் மற்றும் 2 பௌண்டரிகள் உடன் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆசிய லயன்ஸ் அணியின் பந்துவீச்சில் நுவன் குலசேகர 3 விக்கெட்டுக்களையும், முத்தையா முரளிதரன் மற்றும் சமிந்த வாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 257 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய, ஆசிய லயன்ஸ் அணி வெற்றி இலக்கிற்காக போராடிய போதும் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து போட்டியில் தோல்வியடைந்தது.

ஆசிய லயன்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்த மொஹமட் யூசுப் 21 பந்துகளுக்கு 4 சிக்ஸர்கள் ஒரு பௌண்டரி அடங்கலாக 39 ஓட்டங்கள் பெற, சனத் ஜயசூரிய 23 பந்துகளுக்கு ஒரு சிக்ஸர் மற்றும் 5 பௌண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்கள் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

வேர்ல்ட் ஜயன்ட்ஸ் அணியின் பந்துவீச்சில் அல்பி மோர்கல் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றியும், மொன்டி பனேசர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும் தமது தரப்பு வெற்றியினை உறுதி செய்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக கோரி அன்டர்சனும், தொடர் நாயகனாக மோர்னே மோர்கலும் தெரிவாகினர்.

## டயலொக்-இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடர்:

# கண்டி அணிக்காக சதம் விளாசிய ஓசத; சகலதுறையிலும் பிரகாசித்த தனஞ்சய

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் டயலொக்இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடரில் (30) நடைபெற்ற போட்டிகளில் கண்டி மற்றும் ஜப்னா அணிகள் வெற்றிகளை பதிவுசெய்துள்ளன. போட்டித்தொடரின் முதலாவது சதத்தை கண்டி அணிக்காக விளையாடிய ஓசத பெர்னாண்டோ பதிவுசெய்ய, தனஞ்சய டி சில்வா, சந்துஷ் குணதிலக்க மற்றும் அஷான் பிரியன்ஜன் ஆகியோர் அரைச்சதங்களை பதிவுசெய்தனர்.

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில், அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்த கண்டி அணி, 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணிசார்பாக அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஓசத பெர்னாண்டோ தொடரின் முதலாவது சதத்தை பதிவுசெய்ய, கமிந்து மெண்டிஸ், லசித் குரூஸ்புள்ளே மற்றும் செஹான் ஆராச்சிகே ஆகியோரின் துடுப்பாட்ட பங்களிப்புடன் கண்டி அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 318 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஓசத பெர்னாண்டோ 141 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 13 பௌண்டரிகள் அடங்கலாக 138 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இவருக்கு அடுத்தப்படியாக கமிந்து மெண்டிஸ் 43 ஓட்டங்களையும், குரூஸ்புள்ளே 32 ஓட்டங்களையும், செஹான் ஆராச்சிகே 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் லஹிரு சமரகோன் 4 விக்கெட்டுகளையும், துவிந்து திலகரட்ன 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய தம்புள்ள அணியை பொறுத்தவரை கடந்த மூன்று போட்டிகளிலும் அணியின் துடுப்பாட்டத்துகாக போராடி வரும் அணித்தலைவர் அஷான் பிரியன்ஜன் மாத்திரம் அரைச்சதம் கடந்து 50 ஓட்டங்களை பெற, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் கடந்த போட்டிகளை போன்று, இந்த போட்டியிலும் பிரகாசிக்க தவறினர்.

தம்புள்ள அணி 42.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் புலின தரங்க 3 விக்கெட்டுகளையும், கமிந்து மெண்டிஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்த, தம்புள்ள அணி தொடர்ச்சியாக தங்களுடைய நான்காவது போட்டியிலும் தோல்வியை தழுவியது. இதில், 3 போட்டிகளில் விளையாடியுள்ள கண்டி அணி 2 வெற்றிகளுடன் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடித்துக்கொண்டது.

கொழும்பு பி.சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில் தனன்ஜய டி சில்வாவின் சகலதுறை பிரகாசிப்பு மற்றும் துடுப்பாட்ட வீரர்களின் சம பலமான பங்களிப்புடன் ஜப்னா அணி, காலி அணிக்கு எதிரான போட்டியில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியை பெற்றுக்கொண்டது.






காலி அணியின் பணிப்பின்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா அணிக்கு, சதீர சமரவிக்ரம 33 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து சிறந்த ஆரம்பத்தை பெற்றுத்தந்தார். இதனைத்தொடர்ந்து, சந்துஷ் குணதிலக்க மற்றும் தனன்ஜய டி சில்வா ஆகியோர் மத்தியவரிசையில் சிறந்த இணைப்பாட்டத்தை பெற்று அணிக்கு பலமளித்தனர். தனன்ஜய டி சில்வா 55 ஓட்டங்களையும், சந்துஷ் குணதிலக்க 57 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து நிமந்த மதுஷங்க 20 பந்துகளில் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 35 ஓட்டங்களையும், இஷான் ஜயர்தன 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க, ஜப்னா அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 263 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் தனன்ஜய லக்ஷான் மற்றும் முதித லக்ஷான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி அணியை பொருத்தவரை, தனன்ஜய லக்ஷான் மற்றும் ஜெஹான் டேனியல் ஆகியோர் மாத்திரமே 30 ஓட்டங்களை கடக்க, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பத்தை பெற்றுக்கொண்டும் பாரிய ஓட்டங்களை பெறத்தவறினர். ஜெஹான் டேனியல் 36 ஓட்டங்களையும், தனன்ஜய லக்ஷான் 34 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற, பந்துவீச்சில் அபாரமாக செயற்பட்ட அணித்தலைவர் தனன்ஜ டி சில்வா 4 விக்கெட்டுகளையும், இஷான் ஜயரத்ன 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். எனவே, காலி அணி 36.2 ஓவர்கள் நிறைவில் 175 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

குறித்த இந்தப்போட்டியில் ஜப்னா அணி சார்பாக விளையாடிய தமிழ் பேசும் வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்த் 7 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை கைப்பற்றியிருந்தார். எனவே, இந்த போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் ஜப்னா அணி 3 போட்டிகளில் 2 வெற்றியுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாலமுனை விளையாட்டு கழகம் வெற்றி

**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு FIRE விளையாட்டுக்கழகம் தைத்திருநாளை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடாத்தியது. அணிக்கு 7 பேர் கொண்ட 5ஓவர் போட்டியில் 32 அணிகள் பங்கு பற்றின.

கிரிக்கெட் சுற்றுத்தொடரில் இறுதிப்போட்டியில் பாலமுனை கிரிக்கெட் அணி மற்றும் நிந்தவூர் ரியல் இம்றான் விளையாட்டுக்கழகம் போன்றன மோதின.

இறுதிப்போட்டியில் பாலமுனை விளையாட்டு கழகம் வெற்றியினை தனதாக்கிக்கொண்டது. சிறந்த துடுப்பாட்ட வீரராக fire அணியின் பி.சுலக்ஷன், சிறந்த பந்து வீச்சாளராக fire அணியின் எஸ். அஜித்குமார், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாலமுனை அணியைச் சேர்ந்த மியாஸ், இச் சுற்றுப்போட்டியில் தொடர் ஆட்ட நாயகனாக ரியல் இம்றான் அணியின் நஜாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்த சுற்றுப்போட்டியின் முடிவிலான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக விபுலானந்த மத்திய கல்லூரியின் அதிபர் ம.சுந்தரராஜன் கலந்து சிறப்பித்தார்.







கொழும்பு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட Strong youth விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்பட்ட 09 to 09 கரம் சம்பியன்சிப் போட்டிகள் கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி பிரதான அரங்கத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டிக்கு கொழும்பு பிரதேச. செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தரும் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் முகாமையாளருமான அனுசா மயூரனி, கல்லூரியின் அதிபர் ஏ.கே.ரி அத்கான், உப அதிபர் எம்.இஸ்மிர், இலங்கை கரம் சம்மோளனத்தின் போட்டி மத்தியஸ்தர் ஜவுப்பர், விளையாட்டு கழகத்தின் ஏனைய உறுப்பினர்களும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு Strong youth கழகத்தின் தலைவர் தலைமையில் நடாத்தப்பட்டது. (படங்கள். எம்.நசார்)

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 2ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது குறிப்பு இல. 2020/17**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 22.01.2021ஆம் திகதிய 2211/61ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : சூரியவெவ |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 110, நமடகஸ்வெவ |
| கிராமத்தின் பெயர் | : நமடகஸ்வெவ |
| வரைபட இல. | : இ.கி.வ. 4/334/737 |
| துண்டு இலக்கங்கள் | : 5089-5292 (146 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : 1.4730 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**சூரியவெவ.**

**பிரதேச செயலகம்,**
**சூரியவெவ.**
22.01.2021

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**குறிப்பு இல: 2020/39**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 2218/55ஆம் திகதிய 10.03.2021ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : தெவிநுவர |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 449ஏ, கடவெத்துவ மேற்கு |
| கிராமம் | : பள்ளே அபரெக்க |
| வரைபட இல. | : மார. 2866 |
| துண்டு இலக்கம் | : 01 (01 துண்டு) |
| விஸ்தீரணம் | : 0.0156 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**தெவிநுவர.**

**பிரதேச செயலகம்,**
**தெவிநுவர.**
29.07.2021

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**குறிப்பு இல.**
**எம்எல்பி/காணி/காணிசுவீ/எல்/62-2020/22**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 16 பெப்ரவரி 2021ஆம் திகதிய 2215/10ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென்மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மாலிம்பட |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 402ஏ, மாலிம்பட கிழக்கு |
| கிராமம் | : மாலிம்பட |
| ஆரம்ப வரைபட இல. | : மார. 2857 |
| துண்டு இலக்கம் | : இல. 01 மற்றும் 02 (02 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : 0.0816 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**மாலிம்பட.**

**பிரதேச செயலகம்,**
**மாலிம்பட.**
21.01.2022

## பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு

## கணனிகள், அச்சுப்பொறிகள் மற்றும் தையல் இயந்திரங்கள் ஆகியவற்றின் பெறுகை

பின்வருவனவற்றின் வழங்கலுக்காக உள்ளூர் புகழ்வாய்ந்த மற்றும் பதிவு பெற்ற வர்த்தகர்கள்/நிறுவனங்களிடமிருந்து ஒரு-கட்ட ஒரு-உறை முறைமையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயம் கோருகின்றது.

| தொடர் இல. | விளக்கம் | அளவு | கேள்வியை பெற்றுக் கொள்ளும் திகதி மற்றும் நேரம் | கேள்வியை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | i7 desktop computer (10th Gen) | 36 | 2022 மார்ச் 03 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு | 2022 மார்ச் 03 ஆம் திகதியன்று மதியம் 12 மணிக்கு |
| 2 | HP Laser Jet Pro M402dn | 06 | | |
| 3 | Portable Sewing Machine – 25 Built In-Stitches | 35 | | |
| 4 | Manual Sewing Machine Zig Zag, 25 Built In Stitches, with Motor | 35 | | |

விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்களையடக்கியுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்களிலுள்ள பணிப்புரைகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டு 2022 மார்ச் 03 ஆம் திகதியன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உயர் ஸ்தானிகராலயத்தை வந்தடைதல் வேண்டும். விலைமனுக்கள் அதே நாளில் மதியம் 12 மணிக்கு திறக்கப்படும்.

பாகிஸ்தான் பொது பெறுகை ஒழுங்குறுத்தல் அதிகாரசபையின் 33 ஆம் சட்டத்திற்கமைவாக எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும் /விலைமனுக்களையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயமானது கொண்டுள்ளது.

'கீழ் உள்ள இணையத்தளங்களிலும் இவ்விளம்பரத்தினை பெற்றுக்கொள்ளலாம்'

அ) **www.ppra.org.pk**
ஆ) **www.pakistanhc.lk**

**சான்சரி தலைவர்**
**பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின்**
**உயர் ஸ்தானிகராலயம்**
**இல. 42, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு-7**
**தொலைபேசி: 011-2055681-82**

**Repeat Your ad For Better Offers**

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல்,
கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள்
மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)**

## விலைமனுக்கோரல்
## பெறுகை அறிவித்தல்

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நிர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) தேசிய போட்டி ஏல நடைமுறையை பின்பற்றி ஒரு வருட காலத்திற்கு பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இல. | பெறுகையின் பெயர். | மனுப் பிணை மற்றும் பெறுமதி (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| NQ/DPC/2022/NCB/S/01 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் - 2022 / 2023 (நாடு முழுவதும் காணப்படும் 35 நிலையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு, நாளொன்றுக்கு சுமார் 100 - 105 பாதுகாப்புப் பணியாளர்களின் சேவை தேவை) | 500,000.00 121 நாட்கள் (24.06.2022) | 6,000.00 | 22. 02. 2022 பி.ப.3.00 | 23. 02. 2022 பி.ப.2.00 |

02. மேலும் விவரங்களுக்கு www.naqda.gov.lk எனும் இணையத் தளத்தை பார்வையிடவும்

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)
இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
2022.02.02

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம்

## அப்புறப்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ள மீன்பிடி படகுகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மேற்படி விடயத்திற்கு இயைபாக 2022-01-18ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு மேலதிகமானதாகும். ஏலத்தில் விற்பனை செய்யப்படும் படகுகளின் எண்ணிக்கை பின்வருமாறாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| படகு வகை | தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் | படகுகளின் எண்ணிக்கை | ஏலமிடப்படும் திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| **யாழ்ப்பாணம்** | | | | |
| ட்ரோலிங் படகு மற்றும் உடைந்த படகுப் பகுதிகள் | காரைநகர், இலங்கை கடற்படை கப்பற்தளம், எள்ளாலன் கடற்படை முகாம் | 135 | 2022-02-07 | மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை |
| வள்ளப் படகு | காங்கேசன்துறை, இலங்கை கடற்படை கப்பற்தளம், உத்தர முகாம் | 05 | 2022-02-08 | மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை |
| **கிளிநொச்சி** | | | | |
| ட்ரோலிங் படகு மற்றும் உடைந்த படகுப் பகுதிகள் | கிரஞ்சி, இலங்கை கடற்படை கப்பற்தளம், புவனேக கடற்படை முகாம் | 08 | 2022-02-09 | மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை |
| **மன்னார்** | | | | |
| உடைந்த படகுப் பகுதிகள் | தலைமன்னார், இலங்கை கடற்படை கப்பற்தளம், கஜபா கடற்படை முகாம் | 09 | 2022-02-10 | மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை |
| **புத்தளம்** | | | | |
| ட்ரோலிங் படகு | கல்பிட்டி, இலங்கை கடற்படை கப்பற்தளம், விஜய கடற்படை முகாம் | 3 | 2022-02-11 | மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரை |

- இந்தப் படகுகளை இயைபுடைய வளவுகளில் 2022-02-05ஆம் திகதி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

**எஸ்.ஜே. கஹவத்த,**
**பணிப்பாளர் நாயகம்,**
**கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம்.**
**2022-02-02.**

## விலைமனுக் கோரல்

## மினுவன்கொடை நகர சபை

அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள மினுவன்கொடை நகர சபைக்கு உரித்தான குத்தகை இடங்களை 2022.03.01 முதல் 2022.12.31 வரையான 10 மாத காலத்திற்கும், அட்டவணை 02இல் குறிப்பிடப்பட்டுள்ள மினுவன்கொடை நகர சபைக்கு உரித்தான கடை அறைகளை மூன்று வருட காலத்திற்கு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் முறைமையின் பிரகாரம் 2022.03.01 முதல் 2025.02.28 வரை முன்வரும் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடுதல் மற்றும் அட்டவணை இல. 03இல் குறிப்பிடப்பட்டுள்ள குருக்கு வீதி 2022.03.01 முதல் 2022.12.31 வரையான காலத்திற்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.02.15 அன்று பி.ப. 2.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2022.02.15 அன்று விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைக் காசாகச் செலுத்தி ஒவ்வொரு உருப்படிக்குமான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப்படிவங்களை 2022.02.15 அன்று மு.ப. 10.00 வரை இந்நகர சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு அவற்றை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் விலைமனுவின் பெயர் குறிப்பிடப்பட்டு "தலைவர், மினுவன்கொடை நகர சபை" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நகர சபையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்த்தல் முடியும். விலைமனுத் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 011-2295275 மூலம் சபையின் செயலாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏதேனும் விலைமனுவொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை மினுவன்கொடை நகர சபைக்கு உரித்தாகும்.

**அட்டவணை இல. 01**

